# சைவநெறி

## தரம் - 10

# ஆசிரியர் வழிகாட்டி

(2015ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

**சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,**
**மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**இலங்கை.**

# சைவநெறி
## தரம் - 10
## ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2015

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

இலங்கை.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி சைவநெறிப் பாடத்தை கற்றலால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையும் வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய இறைநம்பிக்கை,சமய நம்பிக்கை, சமய ஒழுகலாறு, வழக்காறு, விழுமியங்கள், தத்துவங்கள், சமய சமூக நடைமுறைகள், இலக்கியம் செயன்முறை அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான விடய உள்ளடக்கம் இவ் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள், தரவிருத்தி உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், முன் கூட்டியே அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது.

பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல, கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டள்ளன பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கும் போதும் ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தை அளிக்கிறது.

ஆசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்படடுள்ளன. இச் செயற்பாடுகளை ஆசிரியர் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப, செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக நான்கு குழுக்களை அமைக்க வேணடுமென கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுர்யமாக நடந்து கொள்ளவேண்டும். உரிய தேர்ச்சி மட்டத்தை நிறைவு செய்யும் விதமாகச் செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. ஒரு பாடவேளைக்கு அப்பாற் செல்ல ஆசிரியருக்கு நேரிடலாம் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தச் செயற்பாடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேர அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தனிப் பாடவேளை, இருபாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும் போது முதன் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகம் செய்து, தொடர வேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். என உங்களிடம் எதிர்பார்க்கபட்டவில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, மேற் கொள்ளப்படும் சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது உங்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டியை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளை பயன்படுத்தி கற்றலை பரிசீலனை செய்து, உரிய மீளவலியுறுத்தல்களை செய்வது உங்கள் பணியாகும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டியில் செயற்பாடுகளின் இறுதியில் வீட்டில் செய்யப்படவேண்டியதும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட வேண்டியதுமான செயற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது அவற்றை ஆசிரியர்கள் உரியவாறு செயற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல். சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

விரிவுரையாளர் (இந்துசமயம்)
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்..

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | : | **கல்விசார் அலுவல்கள் சபை**<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **இணைப்பாக்கம்** | : | **திரு பொன் ஜெயரூபன்**<br>விரிவுரையாளர்,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **விடய ஆலோசனை** | : | **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**<br>தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். |
| | | **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**<br>கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம். |
| **எழுத்தாளர் குழு** | | |
| **உள்வாரி** | : | **திரு. பொன் ஜெயரூபன்**<br>விரிவுரையாளர்,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **வெளிவாரி** | : | **திரு. எஸ். சேதுரட்ணம்,**<br>ஆசிரியர், பது/பண்டாரவளை தமிழ் ம.மகா வித்தியாலயம்,<br>பண்டாரவளை. |
| | - | **திருமதி. எம். சண்முகதாஸ்,**<br>ஆசிரியர், தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,<br>திருகோணமலை. |
| | - | **திருமதி. ஆர். யோகானந்தம்,**<br>ஆசிரியர், பிலி/நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்,<br>நுகேகொட. |
| | - | **திருமதி. என். சுதமதி,**<br>ஆசிரியர், யாழ்/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,<br>சாவகச்சேரி. |
| | - | **திரு. பெ. பேரின்பராசா,**<br>ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,<br>களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு. |
| **கணனி வடிவமைப்பு** | - | **திரு. பொன் ஜெயரூபன்**<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை, |
| **மொழிச் செவ்விதாக்கம்** | - | **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்** |
| **காரியாலய உதவி** | - | **திருமதி . எஸ். சி.பிரியதர்சனி** |
| | - | **திரு. காமினி ரோஹன விமலசேன** |
| | - | **திரு. டயஸ் அமரசிங்க** |

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் | v |
| கலைத்திட்டக் குழு | vi |
| 10.1.0 பாடத்திட்டம் | |
| 10.1.1 அறிமுகம் | 01 |
| 10.1.2 தேசிய கல்விக் குறிக்கோள்களும் அடிப்படைத் தேர்ச்சிகளும் | 02 |
| 10.1.3 பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் | 05 |
| 10.1.4 பாடத்திட்டம் | 06 |
| 10.1.5 கற்றல் - கற்பித்தல் முறை | 17 |
| 10.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 18 |
| 10.1.7 கணிப்பீடும் மதிப்பீடும் | 20 |
| 10.2.0 பாடத்திட்ட செயற்பாடுகளின் தொடர்ச்சி | |
| 10.2.1 கற்றல் கற்பித்தல் முறை - விளக்கம் | 23 |
| 10.3.0 கணிப்பீடும் மதிப்பீடும் | |
| 6.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | 132 |

# பாடத்திட்டம்

# சைவநெறி

# தரம் -10

# சைவநெறி

## பாடத்திட்டம்

## தரம்- 10

(2015 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை

மொழிகள் மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுறுவகம்

இலங்கை

www.nie.lk

## 10.1.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்வியில் கடமையும் பொறுப்புமாகும். மாணவர்களை ஆளுமையுள்ளவர்களாக வளர்ப்பதில் சமயப் பாடம் முக்கிய பங்கினை வகிக்கிறது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்பட்டமையாலேயே சைவநெறி இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகின்றது. அத்துடன்,2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம், கட்டாய பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவநெறி பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன்,மனப்பாங்கு மட்டுமன்றி,சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக் கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப் பண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சமய அபிமானம், சமய நம்பிக்கை,சமய உணர்வுகள் என்பன வளர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 இலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்குச் சமயக் கல்வியைப் பயன்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

முதலான விடயங்களையும் உள்ளடக்குவதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும்.

## 10.2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### 10.2.1 பொதுத் தேசியக் குறிக்கோள்கள்.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. தொடர்ந்து மாறிவரும் உலகில் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போசிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமான இடத்தைப் பெறுவதற்கு பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

### 10.2.2 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தியாகும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் முன்னர் கூறிய தேசிய குறிக்கோள்களை அடைய வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடற் தேர்ச்சி**

எழுத்தறிவு, எண்ணிக்கை தொடர்பான அறிவு, வரைபுகளை உபயோகித்தல் மற்றும் தகவற் தொழில்நுட்பத் திறன் என்ற நான்கு பகுதிகளில் தொடர்பாடற் தேர்ச்சி தங்கியுள்ளது.

எழுத்தறிவு : பொறுமையுடன் செவிமடுத்தல், தெளிவாகக் கதைத்தல், ஒழுங்காகவும் எழுதுதல், பயனுள்ளவாறு கருத்துப் பரிமாறுதல்.

எண்ணிக்கை தொடர்பான அறிவு : உபகரணங்கள், வெளி, காலம் எண்ணுதல், எண்ணுவதற்கும் அளவிடுவதற்குமான முறையாக இலக்கங்களை உபயோகித்தல்.

வரைபுகளை உபயோகித்தல் : கோடுகள், குறியீடுகளை உபயோகித்துக் கருத்துக்களை வெளிப்படுத்தல், மற்றும் கோடுகள், குறியீடுகள், வர்ணங்களைப் பயன்படுத்தி விளக்குதல், அறிவுறுத்தல் கருத்துக்களை வெளிப்படுத்துதல், அறிக்கையிடல்.

தகவற் தொழில்நுட்பத்திறன் : கணனி அறிவுடன் கற்றலின் போதும், தொழில் செய்யும் போதும், பிரத்தியேக வாழ்வின் போதும் தகவற் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உபயோகித்தல்.

**(ii) ஆளுமை விருத்திக்கான தேர்ச்சி**

ஆக்கபூர்வமான தன்மை, விரிவான சிந்தனை, தொடங்கும் ஆற்றல், முடிவெடுத்தல், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறிவுச் சிந்தனை, தர்க்கரீதியான சிந்தனை, குழுவுணர்வுடன் செயலாற்றுதல், ஆளிடைத் தொடர்பு, புதியவைகளைக் கண்டறிதல், ஆய்வு செய்தல் போன்றவற்றுடன் வெளிப்படையான எண்ணம், பொறுமை, சகிப்பு மற்றும் மனிதநேயம் போன்ற பண்புகள்.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சி**

இத்தேர்ச்சி சமூக, உயிரியல் மற்றும் பௌதீக சூழலுடன் தொடர்புடையது.

**சமூகச் சூழல்** : தேசிய செல்வங்கள் பற்றிய விளக்கம் பல்லினச் சமூகத்தின் அங்கத்தினராக இருப்பதுடன் இணைந்து வாழ்வதற்கான உணர்வினை கொண்டிருப்பதுடன் உரிய திறன்களையும் பெற்றிருத்தல். சாதாரண கடமைகள் பற்றிய உணர்வு, சமூகத்தொடர்பு, தனிநபர் நடத்தைகள், சாதாரண மற்றும் கட்டுப்பாடுகளுடனான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்பு, கடமைகளும் கட்டுப்பாடும்.

உயிரியல் சூழல் : உயிருள்ள உலகம், மக்களும் ஏனைய உயிரினங்களும், மரம், செடி, கொடிகள், காடுகள், கடல், நீர், வளி, தாவர - விலங்குகளுக்கும், விலங்குகளுக்கும் மனித வாழ்வுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றிய விளக்கம், உணர்வுகளும் திறன்களும்.

பௌதீகச் சூழல் : வெளி, சக்தி, எரிபொருட்கள், திரவியங்கள், பொருட்கள் மற்றும் மனித வாழ்வுடன் தொடர்பு, உணவு, உடை, சுகாதாரம், சக்தி வாய்ப்புக்கள், நித்திரை, அமைதி, ஓய்வு, கழிவுகள், மலசலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பான விளக்கம், உணர்வும் திறன்களும்.

கற்பதற்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.

**(iv) வேலை உலகுக்குத் தயாராகும் தேர்ச்சி**

பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல், தனது தொழிலாற்றல், சவால்களை விளங்கிக் கொள்ளுதல், தனது ஆற்றலுக்கு ஏற்ற தொழிலொன்றைத் தெரிவு செய்வதுடன், போதியளவு வருமானத்தையும் பெறுதல். தனது ஆற்றல்களை உயரமட்டத்தில் வெளிப்படுத்தவும், அதன் பலாபலன்களை அதிகரிக்கச் செய்ய செயற்படுவதோடு அது தொடர்பான திறன்களை வளர்த்தலும்.

**(v) சமயமும் ஒழுக்க விழுமியங்களும் தொடர்பான தேர்ச்சி**

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் ஒழுக்கவிழுமியங்கள், பண்பாடுகள் மற்றும் சமய அனுஷ்டானங்களுக்கு ஏற்புடையவாறு நடத்தல் என்பவற்றிற்கு இயைவாகி, மிகப் பொருத்தமானவற்றைத் தெரிந்து அதற்கு ஏற்றவாறு செயற்படுத்தல்.

**(vi) விளையாட்டு மற்றும் ஓய்வைப் பயன்படுத்தும் தேர்ச்சி**

அழகியற் செயற்பாடுகள், இலக்கியம், விளையாடுதல், விளையாட்டுக்களும் மெய்வல்லுனர் விளையாட்டும், விருப்பூட்டும் செயற்பாடுகளுடன் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளினூடாக வெளிப்படும் ஆக்கபூர்வமான வினோதச் செயல்கள், மகிழ்ச்சி, ஆர்வம் மற்றும் இவ்வாறான மானுட அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்காகக் கற்றல்" தொடர்பான தேர்ச்சி**

துரிதமாக மாறிவருவதும், சிக்கலானதும் ஒருவரோடொருவரில் தங்கியுள்ளதுமான இவ்வுலகில் அம்மாற்றங்களுக்கு ஏற்புடையவாறு நடக்கும் போது, அவற்றினை உணர்வுடனும் அனுகூலமான முறையிலும் எடுத்து மக்களுக்கு சொல்வதும், சுதந்திரமாகக் கற்பதற்கான ஆற்றலை மக்களுக்கு வழங்குவதும்.

### 10.1.4 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்.
2. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
3. பக்தி உணர்வு குறித்த விளக்கத்தை நாயன்மார் சரிதங்களினூடாக உணர்ந்து கொள்ளல். இறை நம்பிக்கையும் அன்புமே பக்தியின் அடிப்படை என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
4. சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணிப் போற்றுதல்
5. சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்ளல்
6. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்
7. நாட்டார் சமய வழிபாடுகளையும், நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து கொள்ளல்.
8. ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி, உரிய ஆதாரங்களுடன் முன்வைத்து, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிதல்
9. சமய வாழ்வில் சமூகப் பணியின் இடத்தை அறிந்து சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
10. சமயம் கூறும் பண்புகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளித்தல்

### 10.1.5 தரம் 10க்குரிய தேர்ச்சிகள்

1. கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.
2. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
3. பக்தி உணர்வு குறித்த விளக்கத்தை நாயன்மார் சரிதங்களினூடாக உணர்ந்து கொள்வர். இறை நம்பிக்கையும் அன்புமே பக்தியின் அடிப்படை என்பதைப் புரிந்து கொள்வர்.
4. சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணிப் போற்றுவர்.
5. சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்வர்
6. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்க முயல்வர்
7. நாட்டார் சமய வழிபாடுகளையும், நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து கொள்வர்.
8. ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி, உரிய ஆதாரங்களுடன் முன்வைத்து, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிந்து கொள்வர்.
9. சமய வாழ்வில் சமூகப் பணியின் இடத்தை அறிந்து சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்
10. சமயம் கூறும் பண்புகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

**பாடத்திட்டம் சைவநெறி - தரம் - 10**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1.0 கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல். | 1.1 கடவுள் என்றுமுள்ளவர் என்பதையும், மூலகாரணர் என்பதையும் விளங்கிக் கொள்வர் | • கடவுள் இருப்பையும் குணங்களையும் திருமுறைப் பாடல்கள் மூலமாக முன்வைத்தல்<br><br>கடவுளே மெய்ப் பொருள் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கடவுள் என்பதன் பொருளை விளங்கிக் கூறுவார்.<br>• கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை கடவுளே மெய்ப்பொருள் எனும் பாடத்தினூடாக எடுத்துக் கடவுளின் தோற்றமும், அவை சுட்டும் தத்துவப் பொருளும் பற்றி கலந்துரையாடி உண்மைத்தன்மைகளை வெளிப்படுத்திக் கூறுவர். | 02 |
| | 1.2 நாளாந்தக் கடைமைகளில் இறைசிந்தனையுடன் ஈடுபட்டு செயற்படுவர் | • **வீட்டில் சைவம்**<br>– வீட்டில் கடவுள் வழிபாடு<br><br>• பாடசாலையில் **சைவம்** -<br>குரு பூசைகள்<br><br>• **ஆலயத்தில் சைவசமய அனுட்டானங்கள்**<br>கோயிலில் வழிபாட்டு நெறிகள் | • சைவ இல்லத்தில் நாள்தோறும் காலை மாலை விளக்கேற்றி இறை வழிபாடு மேற்கொள்வர்<br>• பாடசாலையில் பொது நிகழ்வுகளில் திருமுறைப் பாடல்களை நாள்தோறும் ஓதுவார்<br>• குரு பூசைத்தினங்களை கொன்டாடுவர்<br>• பாடசாலைகளில் குருபூசைத் தினத்தில் கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்களை முறைப்படி பின்பற்றுவர்<br>• வாழ்க்கையில் நாளாந்தச் சமய செயற்பாடுகளில் விசேட விழாக்களை கைக்கொள்வர்.<br>• வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோயில்களிலும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவர் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1.3 சமய ஒழுகலாறு களையும் வழக்காறுகளையும் இனங்கண்டு பின்பற்றுவர் | • சைவ சமய விழுமியங்கள்<br>• அன்புடைமை<br>• வாய்மை | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள**<br>• எல்லோர் மீதும் அன்பு செலுத்துவர்.<br>• வாய்மை தவறாமல் செயற்படுவர்.<br>• அன்புடமை, வாய்மை என்பவற்றை சரியான முறையில் கடைப்பிடிப்பர்.<br>• அன்பு ஒன்றே இறைவனை அடைதற்கான எளிய வழியாகும். என்பதனை ஏற்றுச் செயற்படுவர.<br>வாய்மைத் தவறாமல் வாழ்வை மேற்கொண்டவராக அரிச்சந்திரன் கதையை உதாரணமாகக் கொண்டு செயற்படுவர் | 02 |
| | 1.4 சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர் | • **பஞ்சாங்கம் பார்த்தறிதல்** | ▪ பஞ்சாங்கத்தில் ஐந்து அங்கங்கள் உண்டு என்பதைக் கூறுவர்.<br>▪ நாள், நட்சத்திரம், யோகம், திதி, கரணங்களைப் பட்டியற்படுத்துவர்.<br>▪ பூர்வபக்கம், அபரபக்கம் என்பவற்றை இனங்காண்பர்.<br>▪ அட்டமி, நவமி, இராகுகாலம், யமகண்டம் ஆகியவற்றை பஞ்சாங்கத்தில் பார்த்து அறிந்து கொள்வர்.<br>▪ விரதங்களையும் பண்டிகைகளையும் அனுஷ்டிக்கும் காலத்தினைப் பஞ்சாங்கம் பார்த்து தமது வாழ்வில் கடைப்பிடிப்பர். | 01 |
| | | • **பண்டிகை**<br>• தீபாவளி | ▪ தீபாவளி கொண்டாடப்படும் காலத்தைக் குறிப்பிடுவர்.<br>▪ இலங்கை, தமிழ் நாட்டில் தீபாவளி கொண்டாடப்படும் முறைக்கும் வட இந்தியாவில் கொண்டாடப்படும் முறைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் குறிப்பிடுவர்.<br>▪.பண்டிகைகளினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுவர்.<br>▪ தீபாவளியோடு தொடர்புடைய புராணக் கதையை குறிப்பிட்டு அதனை சுவைபடக் கூறி வெளிப்படுத்துவர். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | • **விரதங்கள்**<br>• புரட்டாதிச் சனி<br>• கந்தசஷ்டி<br>• விநாயகர் சஷ்டி | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விரதங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை அனுஷ்டிப்பர்.<br>▪ விரதங்களை அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய விரத நியதிகளைக் கடைப்பிடிப்பர்.<br>▪ விரதங்களின் மூலம் ஆன்மீகம் மேம்படுகின்றது என்பதை உணர்ந்து கொள்வர்.<br>▪ கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.<br>• விரதங்கள் தொடர்பான பத்திரிகைச் செய்திகளை சேகரித்துக் காட்சிப்படுத்துவர். | 01 |
| | 1.5 வாழ்வியல் சடங்குகள் பற்றி அறிந்து, பொருளுணர்ந்து அவற்றைப் பின்பற்றுவர் | • **வாழ்வியல் சடங்குகள்**<br>• திருமணம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• திருமணக் கிரியையின் அவசியத்தை உணர்ந்து மதிப்பளிப்பர்.<br>▪ பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் திருமணக்கிரியை முறைகளைத் தேடியறிவர்.<br>மனித வாழ்க்கையில் திருமணத்தின் அவசியத்தைக் குறிப்பிடுவர்<br>▪ உறவினர்களின் திருமணக்கிரியைகளின் போது அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு முனவருவர்.<br>▪ திருமணத்தின் போது ஆசாரியரால் மேற்கொள்ளப் படும் கருமங்களை நிரற்படுத்துவர். | 02 |
| 2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர். | 2.0 திருமுறைப் பாடல்களதும் தோத்திரப் பாடல்களதும் அருஞ்சொற்களை விளக்குவர், சந்தர்ப்பம் கூறுவர், பண்ணுடன் பாடுவர் | 1. **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்**<br>“ அங்கமும் வேதமும்...”<br>“ உற்றுமை சேர்வது....” | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தேவாரங்களின் சிறப்பினை அறிவர்.<br>• தேவாரம் பாடிய மூவரைக் குறிப்பிடுவர்.<br>• தேவாரங்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப்பிழையின்றி தேவாரத்தினையும் பொருளினையும் எழுதுவர். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | **2.திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்**<br>"குனித்த புருவமும்..."<br>"நாமார்க்கும் குடியல்லோம்"<br>**3.சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்**<br>" அந்த ணாளன் ..."<br>" மீளா அடிமை...."<br>**4.மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**<br>"பால் நினைந்தூட்டும் ...." " தந்ததுன் றன்னைக் கொண்டதென்..."<br>**5.திருவிசைப்பா**<br>" கற்றவர் விழுங்கும் "<br>**6.திருப்பல்லாண்டு** " பாலுக்குப் பாலகன் ..."<br>**7.திருமந்திம்**<br>"யாவர்க்குமாம் இறைவற்கொரு "<br>**8.பதினோராம் திருமுறை**<br>"விநாயகனே வெவ்வினை" (கபிலதேவர் )<br>**9.பெரிய புராணம்**<br>"தண்ணளி வேந்தன்செயல்" | • பஞ்ச புராணங்கள் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் வழக்கத்தை கடைப்பிடிப்பர்<br>• பாடல்களை பண்ணோடு பாடுவர்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களை பாடுவர்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வர்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பர்.<br>• திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது என்பதனை அறிவர்.<br>• திருவாசகம் எட்டாம் திருமுறையில் அடங்கும் என்பதனைக் கூறுவர்.<br>• திருவாசகப் பாடலை பொருள் உணர்ந்து பக்தியோடும் பண்ணோடும் பாடுவர்.<br>• திருவிசைப்பா, திருமந்திரம், பதினோராம் திருமுறை என்பவற்றை மனனம் செய்து பக்தியோடும் பண்ணோடும் பாடுவர். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 2.2 சைவ சமயத்தின் பொது நூல், சிறப்பு நூல்களை அறிந்து அவை கூறும் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துவர் | • **வேதங்களும் ஆகமங்களும் - அறிமுகம்** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• வேதம் என்பதன் பொருளைக் கூறுவர்<br>▪ வேதகாலத் தெய்வங்களை அறிந்து போற்றுவர்.<br>▪ வேதங்களின் சமய, சமூக, வழிபாட்டு அம்சங்களைப் பிறருக்கு எடுத்துரைப்பர். | 02 |
| | 2.3 சமய இலக்கியம் மூலம் சமய உணர்வை விருத்தி செய்வர், தத்துவக் கருத்துக்களை அறிந்து அவற்றை உரியவாறு வெளிப்படுத்துவர். | • **பெரிய புராணம்**<br>• முதலாம் சருக்கம் திருக்கூட்டத்தார் சிறப்பு (பெரியபுராண - தெரிந்தெடுத்த பாடல் பகுதி) | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் என்பதனை அறிவர்.<br>• பெரியபுராணத்திற்கு திருத்தொண்டர் புராணம் என்ற பெயர் உண்டு என்பதனைக் குறிப்பிடுவர்.<br>• சிவனடியார் தோற்றப்பொலிவினைக் கூறுவர்.<br>• சிவனடியார் பெருமைகளை எடுத்துககூறுவர்.<br>• சிவனடியாரை சிவன் எனப் போற்றி மதிப்பளிப்பர். | 04 |
| | 3.1 பெரிய புராணம் கூறும் நாயன்மார் வரலாறு மூலம் பக்தி நிலைகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பர், சமய வரலாறு கூறும் உண்மைப் பொருளை இனங்காண்பர். | • **திலகவதியார்** வரலாற்று அறிமுகம் மற்றும் சமயப் பணிகளும் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• திலகவதியாரின் சிவத்தொண்டினை விவரிப்பர்.<br>• திலகவதியாரிடம் காணப்பட்ட நற்பண்புகளை எடுத்துரைப்பர்.<br>• திலகவதியாரின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• திலகவதியாரின் சிவத்தொண்டுகளை தாமும் பின்பற்றி சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்..<br>• திலகவதியாரின் பணிகளில் ஏனையோரையும் ஈடுபடத் தூண்டுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணிப் போற்றுவர் | 4.1 ஆலய உற்சவக் கிரியைகளை இனங்கண்டு அவற்றின் உண்மைத் தத்துவங்களை விளக்குவர் | • **மகோற்சவக் கிரியைகள்**<br>• தத்துவ விளக்கம்<br>• பஞ்ச கிருத்தியம் சுட்டும் உற்சவங்கள் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆலயக் கிரியைகளின் முப்பெரும் பிரிவுகளையும் குறிப்பிடுவர்.<br>• நைமித்திய கிரியைகள் ஐந்தினைக் குறிப்பிடுவர்.<br>• மகோற்சவம் என்பதன் பொருளை எழுதிக்காட்டுவர். | 02 |
| 5.0 சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்ளல் | 5.1 நாயன்மாரின் வரலாறுகளை அறிந்து கூறுவர், அவர்களின் பக்தி வைராக்கியம், சமுக நோக்கு முதலியவற்றைக் கடைப்பிடிக்கும் தூண்டுதலை வெளிப்படுத்துவர். | · **நாயன்மார் வாழ்வில் பக்தி வைராக்கியம்**<br>• துன்பம் வந்த வேளையிலும் இறைவன் துணையையே நாடி நின்ற தன்மை | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாயன்மார்களின் பக்தி வைராக்கியம் பற்றி ஆராய்ந்து கூறுவர்<br>• பக்தி வைகராக்கியம் மூலம் எவற்றை பெற்றுக் கொள்ளலாம் என்பதை விளக்குவர்<br>• தாமும் இறைவன் மீது பக்தி வைராக்கியம் கொண்டவர்களாக வாழப்பழகுவர் | 02 |
| | 5.2 சந்தான குரவர் வரலாறுகளை அறிந்து கூறுவர் | • **சந்தான குரவர்கள் பற்றிய அறிமுகம்** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சந்தானகுரவர்கள் என்பதன் விளக்கத்தை கூறுவர்.<br>▪ அகச்சந்தானகுரவர்கள், புறச்சந்தானக்குரவர்கள் என பட்டியல்படுத்திக் காட்டுவர்.<br>▪ சந்தானகுரவர் குருசீட உறவு முறைகளைக் கூறுவர்.<br>▪ புறச்சந்தானக்குரவர் இயற்றிய நூல்களைப் பட்டியற்படுத்துவர்.<br>▪ சந்தானகுரவர்களின் பணிகளை அறிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 5.3 சித்தர்கள், ஞானியர்கள் பற்றி அறிந்து கொள்வர் | • **சித்தர்கள் - அறிமுகம்**<br>- திருமூலர் - திருமந்திரம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>▪ சித்தர்கள் மெய் அறிவு கைவரப் பெற்றவர்கள் என்பதனை அறிவர்<br>▪ சித்தர்கள் தெய்வீக ஆற்றல் உடையவர்கள் என்பதைக் கூறுவர்<br>▪ தமிழ்நாட்டுச் சித்தர்களையும் ஈழத்துச் சித்தர்களையும் இனங்காண்பர்.<br>▪ திருமூலர் வரலாற்றைக் கூறுவர்.<br>▪ திருமந்திரத்தின் சிறப்பினை அறிவர். | 02 |
| | 5.4 ஈழத்துச் சமய பெரியார்களையும், அவர்களின் பணிகளையும் அறிந்து கூறுவர் | • **சுவாமி விபுலானந்தர்**<br>• வரலாற்று அறிமுகம்<br>• காலமும் பின்னணியும்<br>• பணிகள்<br>• சமயம்<br>• இலக்கியம்<br>• கல்வி | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>▪ சுவாமி விபுலானந்தர் அவர்களது சமூக, சமயப் பணிகளை அறிந்து கூறுவர்.<br>▪ தம்மாலான சமய, சமூகப் பணிகளை செய்ய முன்வருவர்.<br>• சமய குரவர்களின் பனிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்து பணிகளில் ஈடுபடுவர். | 02 |
| | 6.1 முப்பொருள் இயல்பை நூல்கள் வாயிலாக அறிந்து கூறுவர். | • **பதியின் இயல்பு, பசுவின் இயல்பு முதலியன** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களை அறிவர்.<br>• பதி, பசு. பாசம் என்னும் மூன்று பொருட்களும் உண்மையானவை எனக் கூறுவர்.<br>• சைவசித்தாந்தம் கூறும் அளவைப் பிரமாணங்களை அறிவர்.<br>• பதியின் இருநிலைகளைக் கூறுவர்.<br>• ஆன்மாவின் இயல்புகளை விளக்குவர்.<br>• மூவகை ஆன்மா பற்றிக் கூறுவர்.<br>• இருவினையொப்பு, சத்தினிபாதம், மலபரிபாகம் ஆகியவற்றின் பொருளை விளக்குவர் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்க முயல்தல் | 6.2 ஒதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடப்பரப்பு மூலம் சித்தாந்த கருத்துக்களை அறிந்து கொள்வர், பாடல்களை மனனம் செய்து வெளிப்படுத்துவர், | • **திருவருட்பயன் (1-5 அதிகாரங்கள்)** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ சித்தாந்த சாஸ்திரநூல்களில் திருவருட்பயனும் அடங்கும் என்பதனை அறிவர்.<br>• திருவருட்பயன் நூலாசிரியர் உமாபதி சிவாச்சாரியார் என்பதனைக் கூறுவர்.<br>• திருவருட்பயன் காப்புச் செய்யுள் விநாயகருக்குரியது என்பதனைக் கூறுவர்.<br>• பதிமுது நிலை என்னும் அதிகாரத்தில் உள்ள பதியின் இயல்புகளைப பட்டியல்படுத்துவர். | 03 |
| | 6.3 ஆன்மீக விடுதலைக் கான மார்க்கங்கள் பற்றிய அறிவைப் பெற்று அதனை எடுத்துரைப்பர் | • **குரு, லிங்க, சங்கம வழிபாடு** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இறைவனை அடைவதற்கான மார்க்கங்கள் மூன்றைக் குறிப்பிடுவர்.<br>• குரு, லிங்க, சங்கம வழிபாட்டின் மூலம் முத்தியடைந்த நாயன்மார்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துவர்.<br>• குரு வழிபாட்டின் முக்கியத்துவத்தையுணர்ந்து குரு பூசைத்தினங்களில் கூட்டாகச் செயற்படுவர். | 02 |
| 7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர். | 7.1 நாட்டார் வழிபாட்டில் இடம் பெறும் சடங்குகளின் சிறப்பினை தெரிந்து கூறுவர் | • **திரௌபதியம்மன் சடங்கு**<br>• **வைரவர் வழிபாடு** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்தைக் கூறுவர்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவர்.<br>• திரௌபதியம்மன்,வைரவர்வழிபாடு நடைபெறும் இடங்கள் மூன்றினைக் கூறுவர்.<br>• திரெபதியம்மன், வைரவர் சடங்கின் போது நிகழ்த்தப்படும் கதைகள் எவையெனக் குறிப்பிடுவர்.<br>• சடங்கு முறைகளினூடாக கிராமியப் பண்பாடுகளை பேணிக்காக்க முன்வருவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 7.2 பிற தரவுகளையும் அறிந்து கிராமியக் கலைகளின் சிறப்பினையும் தெரிந்து விளக்குவர். | • **நாட்டார் கலைகள்**<br>கூத்து, வசந்தன் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாட்டார்க் கலையின் சிறப்பியல்புகளைத் தேடித்தொகுப்பர்<br>• கூத்தின் வகைகளைக் பட்டியற்படுத்துவர்.<br>• நாட்டார் கலைகள் இனங்கண்டு அவற்றைத் தம் வாழ்வில் மேற்கொள்வர். | 02 |
| 8.0 ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி,உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர், ஈழத்தில் சைவத்தின் தொன்மை யையும்வரலாற்றுச் சிறப்பையும் அறிதல் | 8.1 ஈழத்தில் சைவ மரபின் பழைமையை எடுத்துரைப்பர் | • **இராமாயணம் முதலிய இதிகாசச் செய்திகள்** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஈழத்தின் வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவர்.<br>• இதிகாசத்தில் இராமாயணம் கூறும் ஈழத்தின் தொன்மை வரலாற்றை எடுத்துரைப்பர் ஈழத்துச் சைவ மரபின் தொன்மையை அறிந்து அதனைப் போற்றும் மனப்பாங்கினைப் பெறுவர். | 02 |
| | 8.2 ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர், அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை தெரிந்து கூறுவர் | • **விநாயகர் ஆலயம்**<br>களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்<br>• **சிவாலயம்**<br>• கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம்<br>• **முருகன் ஆலயம்**<br>நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்<br>• **அம்மன் ஆலயங்கள்**<br>- நயினை நாகபூசணி அம்மன்<br>- மட்டக்களப்பு, புன்னைச்சோலை ஸ்ரீ பத்திர காளியம்மன் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றி அறிந்து தலயாத்திரை மேற்கொள்வர்<br>• கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பற்றி அறிந்து அதன் சிறப்புக்களை போற்றுவர்<br>• நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதைகளை தேடிப் பெறுவர்<br>• நயினாதீவு நாகபூசணியம்மன் ஆலய சிறப்புக்களை அறிந்து தலயாத்திரை மேற்கொள்வர் அதனைப் போற்றுவர்<br>• புன்னைச்சோலை பத்ரகாளியம்மன் ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவர் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 8.3 ஈழத்துச் சைவ நூல்கள், இதழ்கள், நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பர். | • **நூல்கள் , இதழ்கள்**<br>• பிள்ளையார் கதை | • ஈழத்தில் தோன்றிய சைவப் பிரபந்தங்களில் பிள்ளையார் கதையின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுவர்.<br>• விநாயகர் சஷ்டி விரதத்தை அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பயன்களை அறிந்து தாமும் அனுஷ்டிக்க முன்வருவர்.<br>• பிள்ளையார் கதையில் தாம் படித்துச் சுவைத்த பகுதியை பிறருக்கு எடுத்துக் கூறுவர்.<br>• பிள்ளையார் கதையினை பிள்ளையார் விரதம் அனுஷ்டிக்கும் காலத்தில் படனம் செய்வர். | 01 |
| | | • **நிறுவனம்**<br>• சைவ வித்தியா விருத்திச் சங்கம் | • சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆற்றிய சமயப்பணிகள், கல்விப் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுவர்.<br>• சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளை பட்டியற்படுத்துவர்.<br>• சமயத்தினூடாக சமயப்பணிகள் ஆற்ற வேண்டும் என்ற மனப் பாங்கைப் பெற்றுக் கொள்வர். | 01 |
| 9.0 சமய வாழ்வில் சமூகப் பணியின் இடத்தை அறிந்து சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர் | 9.1 சரியைத் தொண்டின் மகத்துவத்தை அறிந்து, சரியையில் ஈடுபடுவர | • **சரியைத் தொன்டு**<br>ஆலயத்தை துப்புரவு செய்தல், தலவிருட்சம் வைத்தல், நந்தவனம் அமைத்துப் பேணுதல் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>▪ சைவ மக்களால் இலகுவில் மேற்கொள்ளக்கூடிய தொண்டு சரியைத் தொண்டுஎன்பதனை அறிவர்.<br>▪ சரியைத் தொண்டினை ஆலயங்களிலும் எமது சூழலிலும் மேற்கொள்ள முடியும் என்பதனை அறிவர்.<br>▪ சரியைத் தொண்டின் மூலம் இறைவழிபாடு செய்த நாவுக்கரசரின் பெருமையைக் கூறுவர்.<br>▪ ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தொண்டுகளைச் செய்ய முன்வருவர்.<br>▪ சமய நம்பிக்கையோடு சமூகத்தொண்டுகளை ஆற்ற வேண்டும் என்ற சிந்தனையைப் பெறுவர். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 9.2 அன்னதானத்தின் சிறப்பினை அறிந்து அதனை மேற் கொள்வர் | • அன்னதானம் செய்தல்<br>• தண்ணீர்ப் பந்தல் அமைத்தல் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தானங்களில் சிறந்தது அன்னதானம் என்பதனை அறிவர்.<br>• தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி செய்வதும் மேலான தருமம் என்பதனை அறிவர்.<br>• இவ் அறச்செயல்களை உளத்தூய்மையோடும் இறைசிந்தனையோடும் செய்ய வேண்டும் என்பதனை அறிவர்.<br>• பசித்து வந்தோர் அனைவருக்கும் உணவு வழங்குவதே அன்னதானத்தின் நோக்கம் என்பதனை அறிவர்.<br>• தமது வாழ்வில் இவ்வகையான அறப்பணிகளை மேற்கொள்வர். | 01 |
| 10.0 சமயங்கள் கூறும் பண்புகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர். | 10.1 சமயங்கள் கூறும் அறக்கருத்துக்களை அடையாளப்படுத்துவர், அவற்றுக்கு மதிப்பளிப்பர். | • **பிறசமயங்களுக்கு மதிப்பளிக்கும் பாங்கு** சைவ சமயம், தம்மபதம் கூறும் உயர் விழுமியமும் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பௌத்த மதம் பற்றி அறிந்து போற்றுவர்.<br>• தம்மபதம் கூறும் விழுமியங்களுக்கு மதிப்பளிப்பர்.<br>• தம்மபதம் கூறும் விழுமியங்களைப் போற்றுவர்.<br>• அட்டாங்க மார்க்கங்களை அறிந்து கடைப்பிடிப்பர்.<br>• நான்கு வாய்மைகளையும் அறிந்து தம் வாழ்க்கைப் பற்றி தெளிவு கொள்வர்.<br>• புத்தரின் வாழ்க்கை வரலாற்றினை சுவைபட எடுத்துக்கூறுவர். | 01 |

## 10.1.5 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சைவசமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவானதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவது அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றைப் பாடச் செய்தல், போலச் செய்தல், ஒளி, ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல், செய்து காட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்தவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

### 10.1.6 பாடசாலைக் கல்வியும் வேலைத்திட்டமும்

சமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடர்பாக பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும், மனிதவளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையையும் திட்டமிட்டு செயற்படுத்துவது அவசியம்.

சைவ சமய வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்குமென பாடசாலைக் கொள்கை இருத்தல் அவசியம்.

சமயக் கல்வியின் அவசியத்தை, தகுந்த ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளைப் பெற்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் முதலானோரதும் சமய நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெறலாம்.

மேற்படி கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல்மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதறக்குப் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின் பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமை பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தலும், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழிவகை செய்தலும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நற்சிந்தனை கூற இடமளித்தல
- வகுப்பறையில் சுவாமிப்படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா,சமயப் பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டி முதலானவற்றினை நடத்த ஒழுங்கு செய்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக் கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்

- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ஙளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஒவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியாகமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம்.

### 10.1.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது.

மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற் கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப்பாடல்கள் பாடும் போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும் கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்கார முறைகளையும் தெய்வங்களை வழிபடும் ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க வேண்டும். இவற்றுக்கு எற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.

## சைவநெறி தரம்-10

| தவணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளை | மொத்தப் பாடவேளை |
|---|---|---|---|---|
| தவணை -1 | 1.0 | 1.1 | 02 | 20 |
| | | 1.2 | 02 | |
| | | 1.3 | 02 | |
| | | 1.4 | 03 | |
| | | 1.5 | 02 | |
| | 2.0 | 2.1 (1,2, ஆம் பாடல்) | 03 | |
| | | 2.2 | 02 | |
| | | 2.3 | 04 | |
| தவணை -2 | 2.0 | 2.1 (3,4,5,6 ஆம் பாடல்) | 04 | 23 |
| | 3.0 | 3.1 | 02 | |
| | 4.0 | 4.1 | 02 | |
| | 5.0 | 5.1 | 02 | |
| | | 5.2 | 02 | |
| | | 5.3 | 02 | |
| | | 5.4 | 02 | |
| | 6.0 | 6.1 | 02 | |
| | | 6.2 | 03 | |
| | | 6.3 | 02 | |
| தவணை -3 | 2.0 | 2.1 (7,8,9ஆம் பாடல்) | 03 | 18 |
| | 7.0 | 7.1 | 02 | |
| | | 7.2 | 02 | |
| | 8.0 | 8.1 | 02 | |
| | | 8.2 | 04 | |
| | | 8.3 | 02 | |
| | 9.0 | 9.1 | 01 | |
| | | 9.2 | 01 | |
| | 10.0 | 10.1 | 01 | |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

| தொடர் இலக்கம் | தேர்ச்சி இலக்கம் | செயற்பாட்டின் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 01. | 1.1 | கடவுளே மெய்ப் பொருள் என்பதை ஏற்றுச் செயற்படுவோம் | 23 |
| 02. | 1.2 | வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோயில்களிலும் சமய செயற்பாடுகளில் ஈடுபடுவோம். | 26 |
| 03. | 1.3 | சைவசமய விழுமியப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடிப்போம். | 29 |
| 04. | 1.4 | பஞ்சாங்கம் பார்த்தறிந்து கொள்வோம் | 31 |
| 05. | 1.4 | பண்டிகைகளைக் கொண்டாடுவோம் | 33 |
| 06. | 1.4 | விரதங்களை அனுட்டிப்போம் | 35 |
| 07. | 1.5 | வாழ்வியல் சடங்குகளில் ஈடுபடுவோம் | 38 |
| 08. | 2.1 | சம்பந்தர், அப்பர் தேவாரங்கள் பற்றி அறிந்து பாடுவோம் | 41 |
| 09 | 2.1 | சுந்தரர் தேவாரங்கள் பற்றி அறிந்து பாடுவோம் | 44 |
| 09. | 2.1 | திருவாசகம் பற்றி அறிவோம் | 46 |
| 10. | 2.1 | 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் திருமுறைப்பாடல்கள் பற்றி அறிவோம் | 48 |
| 11. | 2.2 | வேதங்கள பற்றி அறிந்து போற்றுவோம் | 51 |
| 12 | 2.2 | ஆகமங்கள் பற்றி அறிந்து போற்றுவோம் | 55 |
| 13. | 2.3 | பெரியபுராணத்தின் திருக்கூட்டத்தார் சிறப்புக்களை அறிவோம் | 58 |
| 14. | 3.1 | திலகவதியார் பற்றி அறிந்து கொள்வோம் | 60 |
| 15. | 4.1 | மகோற்சவக் கிரியைகளின் தத்துவங்கள் பற்றி அறிவோம் | 63 |
| 16. | 5.1 | நாயன்மார்களின் பக்தி வைராக்கியத்தைப் போற்றுவோம் | 66 |
| 17. | 5.2 | சந்தான குரவர் பற்றி அறிவோம் | 69 |
| 18. | 5.3 | சித்தர்கள் பற்றி அறிவோம் | 72 |
| 19. | 5.4 | சுவாமி விபுலானந்தர் பணிகளை மதிப்போம் | 74 |
| 20. | 6.1 | சைவசித்தாந்த தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை அறிவோம் | 77 |
| 21. | 6.2 | திருவருட்பயன் ஊடாக பதியின் தன்மை அறிவோம் | 80 |
| 22. | 6.2 | உயிரவை நிலை பற்றி அறிந்து கொள்வோம். | 82 |
| 23. | 6.2 | ஆணவ மலம் பற்றி அறிந்து கொள்வோம் | 84 |
| 24. | 6.2 | திருவருளின் இயல்பை அறிவோம் | 86 |
| 25. | 6.3 | குரு, லிங்க, சங்கம வழிபாடு பற்றி அறிந்து கொள்வோம் | 88 |
| 26. | 7.1 | திரௌபதியம்மன், வைரவர் வழிபாடு பற்றி அறிவோம் | 91 |
| 27. | 7.2 | நாட்டார் கலைகளில் கூத்து பற்றி அறிந்து கொள்வோம் | 94 |
| | 7.2 | நாட்டார் கலைகளில் வசந்தன் பற்றி அறிந்து கொள்வோம் 97 | |
| 28. | 8.1 | இராமாயணம் முதலிய இதிகாச செய்திகளில் ஈழத்துச் சைவமரபு பற்றி அறிவோம் | 100 |
| 29. | 8.2 | க஌தாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றி அறிவோம் | 102 |
| 30. | 8.2 | கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் பற்றி அறிவோம் | 105 |
| 31. | 8.2 | நயினை நாகபூசணியம்மன் பற்றி அறிந்து கொள்வோம் | 108 |
| 32. | 8.2 | புன்னைச்சோலை காளியம்மன் பற்றி அறிவோம் | 111 |
| 33. | 8.2 | நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பற்றி அறிவோம் | 114 |
| 34. | 8.3 | ஈழத்துச் சைவ நூல்கள் பற்றி அறிவோம் | 117 |
| 35. | 8.3 | சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிகளை அறிவோம் | 121 |
| 36. | 9.1 | சரியைத் தொண்டின் மகத்துவத்தை பேணுவோம் | 124 |
| 37. | 9.2 | அன்னதானத்தின் சிறப்பினை அறிந்து மேற்கொள்வோம் | 126 |
| 38. | 10.1 | சைவசமயமும் தம்மபதமும் கூறும் உயர் விழுமியங்களுக்கு மதிப்பளிப்போம். | 128 |

**தேர்ச்சி 1.0 :** **கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 :** கடவுள் என்றுமுள்ளவர் என்பதையும் மூலகாரணர் என்பதையும் விளங்கிக் கொள்வர்.

**செயற்பாடு :** **கடவுளே மெய்ப்பொருள் என்பதை ஏற்றுச் செயற்படுவோம்**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள் :** 1. கடவுள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்வர்.
2. இறைவழிபாட்டில் ஈடுபடுவர். (பாடத்திட்டத்தை பார்க்கவும்)

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1:-** கடவுள் என்றும், எங்கும் உள்ளவர் என்பதை மாணவர்கள் ஆதாரத்துடன் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- திருமுறைப்பாடல்கள், தோத்திரப் பாடல்கள் என்பவற்றை ஆதாரம் காட்டி இறை உண்மை பற்றிக் கூற மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சைவசித்தாந்த நூல்களை ஆதாரம் காட்டி இறை உண்மை பற்றிக் கூற மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - கடவுள் ஒருவரே உண்மையானவர்.
  - இறைவன் ஒருவன் என்பது
  - கடவுள் எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், அவரே யாவருக்கும் தலைவர் ஆவார்.
  - உலக தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் அவரே காரணமாவார்.

**படி 2: -** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.1.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள். செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

**படி 3:-** குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.

- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4: -** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- இறைவனின் ஐந்தொழில்கள்
- ஐந்தொழில்களுக்கான மூர்த்தங்கள்
- இறைவனின் மூவகைத் திருமேனிகள்.
- இறைவனின் இயல்புகள்.
- இறை உண்மை, இயல்புகளைக் காட்டும் வேத,சைவசித்தாந்த, தேவார, திருவாசகப் பாடலடிகளிற் சில:
  அ. ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி
  ஆ. அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
  இ. ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க.
  ஈ. சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
  உ. எல்லா உலகமும் ஆனாய் நீயே

**தரவிருத்தி உள்ளீடுகள்** :- இணைப்பு 1.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- சைவசித்தாந்த நூல்கள், திருமுறைகள்
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- கடவுளின் ஐந்தொழில்களையும் அவற்றுக்கான மூர்த்தங்களையும் அறிவர்.
- கடவுளின் இயல்புகள் நான்கினைக் கூறுவர்.
- கடவுள் நம்பிக்கையுடன் வாழ்வைச் செம்மைப் படுத்துவர்.

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

### குழு 1,3

கீழுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| A மறைத்தல் | B மகேஸ்வரன் | C விருப்பு வெறுப்பு அற்றவன் | D பிறப்பு இறப்பு அற்றவன் |
| E உருவம் | F எங்கும் நிறைந்தவர் | G காத்தல் | H அருவுருவம் |
| I படைத்தல் | J உருத்திரன் | K குணங்குறி அற்றவர் | L அழித்தல் |
| M பிரமா | N அருளல் | O விஷ்ணு | P சதாசிவன் |
| Q அருவம் | | | |

1. இறைவனின் மூவகைத் திருமேனியுடன் தொடர்புடைய தொகுதி
   அ. HGO ஆ. QMH இ. QEN ஈ. QEH
2. கடவுளின் இயல்புகளில் நான்கினை மட்டும் கொண்ட தொகுதி
   அ CDFK ஆ.CDFQ இ. PCDK ஈ. ACDF
3. இறைவனின் ஐந்தொழில்களோடு தொடர்புடைய தொகுதி
   அ HAGIL ஆ.EAGIL இ. AGILN ஈ. AGLIM
4. இறைவனின் ஐந்தொழில்களோடு தொடர்புடைய மூர்த்தங்கள் கொண்ட தொகுதி.
   அ NBJOM ஆ. BJMOP இ. ABJOM ஈ. QPOJM

குழு 2,4

கீழ்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதன்கீழ்வரும் செயற்பாட்டினைப் பூர்த்தி செய்க.

**அ.** ஏகம் சத் விப்ரா பகுதா வாந்தி – A

**ஆ.** அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ – B

**இ.** ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க. – C

**ஈ.** சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை – D

**உ.** எல்லா உலகமும் ஆனாய் நீயே – E

1. மேலுள்ள பாடலடிகள் யாருடையவை எனக் குறிப்பிடுக.

| பாடியோர் | குறியீடு |
|---|---|
| 1 நாவுக்கரசர் | |
| 2 வேத காலக் கருத்து | |
| 3 மணிவாசகர் | |
| 4 திருமூலர் | |

2. மேலுள்ள பாடலடிகள் ஒவ்வொன்றினதும் பொருளை ஒரு வரியில் எழுதுக.
3. இரண்டாம் வினாவின் விடைகளின் தொகுப்பினை கொண்டு அதன் சாராம்சத்தை ஒரே வரியில் எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1…………………………………………………………………………………………
  
  2…………………………………………………………………………………………
  
  3…………………………………………………………………………………………
  
  4…………………………………………………………………………………………
  
  5…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் :- உலக தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இறைவனே காரணமானவர். என்பதை உணர்த்தி இறைவழிபாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், இறைநம்பிக்கை தொடர்பான கலையம்சங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0** : **கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 1.2 : நாளாந்தக் கடமைகளில் இறைசிந்தனையுடன் ஈடுபட்டுச் செயற்படுவர்.

**செயற்பாடு** : **வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோயில்களிலும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :
1. வாழ்க்கையில் நாளாந்தச் சமய செயற்பாடுகளில் விசேட விழாக்களை கைக்கொள்வர்.
2. வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோயில்களிலும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்** :

**படி 1:**
- நாம் அன்றாடமும் விசேட தினங்களிலும் கடைப்பிடிக்கும் சைவப் பழக்கவழக்கங்களைக் கூற இடமளியுங்கள்.
- அவை கடைப்பிடிக்கப்படவேண்டிய இடங்களைக் கேட்டறியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- வீடு, பாடசாலை, கோயில் என்பன முக்கிய இடங்களாகும்.
- வீடு, பாடசாலை, கோயில்களில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சமயச் செயற்பாடுகள் பல உள்ளன.

**படி 2:**
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.2.2 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:** - குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்

- வீடு, பாடசாலை, கோயில்களில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சமயச் செயற்பாடுகள் பல உள்ளன.
- வீட்டில் தினமும் இறைவனுக்கு விளக்கேற்றி, பூ வைத்து, தோத்திரம் பாடி வழிபடுதல்.
- இறைவழிபாட்டின் பின் திருநீறு தரித்த சந்தனம் குங்குமப் பொட்டு வைத்தல்.
- தினமும் பெற்றோர் பெரியோர்கள் கால்களில் வீழ்ந்து வணங்குதல்.
- அதிபர், ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துதல்.
- பாடசாலையில் காலைப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளல்.
- நாளாந்தம் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 1.2.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா,

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- எமது சைவப் பழக்கவழக்கங்களை அறிந்து குறிப்பிடுவர்.
- அவற்றை நாளாந்தம் தம் வாழ்வில் கடைப்படிப்பர்.
- வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோயில்களிலும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்

**இணைப்பு 1.2.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனை ஒவ்வொரு நாளும் வீட்டில் கடைபிடியுங்கள்.

**குழு 01 (வீட்டில் சைவம்)**

1. வீட்டில் கடவுள் வழிபாட்டினை மேற்கொள்வதற்கான படிமுறைகளைப் பட்டியற்படுத்துக.
2. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு சுவரொட்டி ஒன்றினைத் தயார் செய்க.
3. சுவரொட்டி தொடர்பான தகவல்களை வகுப்பறையில் கலந்துரையாடியதன் பின் அதனை கீழவரும் இடங்களில் காட்சிப்படுத்துங்கள்.
   அ. வகுப்பறைக் காட்சிப்பலகை
   ஆ. பாடசாலைக் காட்சிப்பலகை

**குழு 02 (பாடசாலையில் சைவம்)**

1. பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களைக் குறிப்பிடுக.
2. அவ்விழாக்களின் போது இடம்பெறும் சமயச் செயற்பாடுகளை வரிசைக் கிரமமாகப் பட்டியற்படுத்துக.
3. நீங்கள் குறிப்பிட்ட விழாக்களின் அடிப்படையிலும் அவற்றின் போது இடம்பெறும் சமய செயற்பாடுகளின் அடிப்படையிலும் ஒவ்வொரு விழாவுக்கும் துண்டுப்பிரசுரம் வீதம் தயார் செய்க.
4. வகுப்பறைக் கலந்துரையாடலுக்குப் பின்னர் அவற்றைப் பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்துவதோடு அதிக பிரதிகளை எடுத்து சகநண்பர்களுக்கும் விநியோகிக்குக.
   அ. வகுப்பறைக் காட்சிப்பலகை ஆ. பாடசாலைக் காட்சிப்பலகை

குழு 03 (கோயில் வழிபாடு)

1. கோயிலில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளைப் பட்டியற்படுத்துங்கள்.
2. அந்நிகழ்வுகளின் போது செயற்படுத்த வேண்டிய விடயங்களைப் பட்டியற்படுத்துக.
3. பட்டியற்படுத்திய விடயங்களையும் அதனோடு தொடர்புடைய படங்களையும் வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
4. நீங்கள் காட்சிப்படுத்திய விடயங்களை ஏனைய மாணாக்கரும் பார்வையிட ஒழுங்குகளை மேற்கொள்ளுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - வீடு, பாடசாலை, கோயில் என்பவற்றுடன் தொடர்பான விசேட நிகழ்வுகளில் கட்டாயம் பங்கு பெறச் செய்யுங்கள். அவ்விடங்களில் பிள்ளைகள் எல்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : **கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 1.3 : சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் இனங்கண்டு பின்பற்றுவர்.

**செயற்பாடு** : **சைவசமய விழுமியப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடிப்போம்**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு** : 1. எல்லோர் மீதும் அன்பு செலுத்துவர்.
2. வாய்மை தவறாமல் செயற்படுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி** 1: - சைவசமய விழுமியப்பண்புகளை விளக்கும் வகையிலான படங்களை காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர் தமக்குத் தெரிந்த நற்பண்புகளைக் கூற இடமளியுங்கள்
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது விழுமியப் பண்புகளாகும்.
- விழுமியப்பண்புகள் பலவாயினும் அவற்றுள் முக்கியமானவையாக அன்புடைமை, வாய்மை என்பன காணப்படுகின்றன.

**படி** 2: - மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
  (அ) சைவசமய விழுமியப்பண்புகளை விளக்கும் வகையிலான படங்கள்.

**படி** 3: - குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4: -** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- சமய ஆசாரங்களும் சமய உண்மை சார்ந்த நடத்தைகளும் சமய விழுமியங்களாகும்.
- நாம் பிறர்மீதும் பிற ஜீவராசிகள் மீதும் அன்பு செலுத்துதல் வேண்டும்.
- அன்பு ஒன்றே இறைவனை அடைதற்கான எளிய வழியாகும்.
- வாய்மையே மனித வாழ்வின் உன்னதப் பண்பாகும்.
- வாய்மை தவறாமல் வாழ்வை மேற்கொண்டவராக அரிச்சந்திரன் காணப்பட்டார்.

**தர உள்ளீடுகள் :** - சைவசமய விழுமியப்பண்புகளை விளக்கும் வகையிலான படங்கள்.
- இணைப்பு 1.3.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவசமய விழுமியப் பண்புகளை அறிந்து தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.
- எல்லோர் மீதும் அன்பு செலத்துவர்.
- வாய்மை தவறாமல் செயற்படுவர்.

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனைக் கடைபிடியுங்கள்.

**குழு 1,3 (அன்புடைமை)**

1. அன்புடைமை என்றால் என்ன?
2. அன்புடைமை பற்றிய திருக்குறள்களைப் பட்டியற்படுத்துங்கள்.
3. அவற்றின் பொருளை எழுதுவதோடு அதன் சாராம்சத்தை ஒரு வாக்கியமாகத் தருக.
4. அன்பு பற்றிய புராணக்கதை ஒன்றினைத் தேடிப் பெற்று அதனை சுவைபடக் கூறுக.

**குழு 2,4 (வாய்மை)**

5. வாய்மை என்றால் என்ன?
6. வாய்மை பற்றிய திருக்குறள்களைப் பட்டியற்படுத்துங்கள்.
7. அவற்றின் பொருளை எழுதுவதோடு அதன் சாராம்சத்தை ஒரு வாக்கியமாகத் தருக.
8. வாய்மை என்று குறிப்பிட்டதும் உங்களது நினைவுக்கு வரும் புராணக் கதையினைக் குறிப்பிட்டு அதனை சுவைபடக் கூறுக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - அன்பு, வாய்மை என்பவற்றை சிறப்பாகப் பேணி சமுகத்தில் மற்றவர்களிடம் நல்லமுறையில் நடந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 : கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்1.4 :** சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர்

**செயற்பாடு : பஞ்சாங்கம் பார்த்தறிந்து கொள்வோம்**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

1. பஞ்சாங்கம் பார்த்து, அறிந்து தமது நாளாந்த வாழ்வில் பண்டிகைகளைக் கொண்டாடுவர்.
2. விரதங்களை அனுட்டிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1: -** சைவசமயத்தவர்கள் கொண்டாடும் பண்டிகைகள், அனுஷ்டிக்கும் விரதங்கள் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்.
- பண்டிகைகள் விரதங்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதனைக் கேட்டு அறியுங்கள்.
- பஞ்சாங்கத்தில் அடங்கும் ஐந்து அங்கங்கள் பற்றக் கலந்துரையாடுங்கள்.
- பூர்வ பக்கம், அபரபக்கம், அட்டமி, நவமி, இராகுகாலம், யமகண்டம் என்பன பற்றிய மாணவர்கள் கொண்டுள்ள கருத்துக்களைக் கேட்டு அறியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- சைவர்களின் வாழ்வியலோடு ஒன்றித்தவை பஞ்சாங்கம் ஆகும்.

**படி 2: -** மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

படி 3: - குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4: -** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- பண்டிகைகள், விரதங்கள் பஞ்சாங்கத்தின் நியதிப்படி கணிக்கப்படுகின்றன.
- பஞ்சாங்கத்தில் ஐந்து அங்கங்கள் உண்டு. அவை,
  - நாட்கள் - 07
  - நட்சத்திரங்கள் - 27
  - யோகங்கள் - 27
  - திதிகள் - 30
  - கரணங்கள் - 11

- பிரதமை முதல் பௌர்ணமி வரை பூர்வபக்கமும் பௌர்ணமியை அடுத்து பிரதமை தொடக்கம் அமாவாசை வரை அபரபக்கமும் காணப்படும்.
- பூர்வபக்கம் வளர்பிறை காலம் எனவும் அபரபக்கம் தேய்பிறை காலம் எனவும் கூறப்படுகின்றது.
- அட்டமி, நவமி, இராகுகாலம், எமகண்டம் ஆகிய காலங்களையும் பஞ்சாங்கம் பார்த்து அறிந்து கொள்ளலாம்.
- பஞ்சாங்கத்தில் பண்டிகைகள், விரதங்கள் தமிழ்மாதம், ஆங்கில மாதத்திகதிகளின் படி காட்டப்பட்டுள்ளன.

**தர உள்ளீடுகள்:**
- இணைப்பு 1.4.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம். (பஞ்சாங்கம் பார்த்து பண்டிகைகள், விரதங்களை இனங்காணுதல், பஞ்சாங்கம் கூறுதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியது)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா,

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- பஞ்சாங்கத்தில் ஐந்து அங்கங்கள் உண்டு என்பதைக் கூறுவர்.
- நாள், நட்சத்திரம், யோகம், திதி, கரணங்களைப் பட்டியற்படுத்துவர்.
- பூர்வபக்கம், அபரபக்கம் என்பவற்றை இனங்காண்பர்.
- அட்டமி, நவமி, இராகுகாலம், யமகண்டம் ஆகியவற்றை பஞ்சாங்கத்தில் பார்த்து அறிந்து கொள்வர்.
- விரதங்களையும் பண்டிகைகளையும் அனுஷ்டிக்கும் காலத்தினைப் பஞ்சாங்கம் பார்த்து தமது வாழ்வில் கடைப்பிடிப்பர்.

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்

குழு 01
- உமது குழுவிற்கு வழங்கப்பட்ட பஞ்சாங்கத்தின் துணையுடன் நாள்,நட்சத்திரம், யோகம், திதி, கரணங்கள் என்பவற்றுள் அடங்கும் விடயங்களை அட்டவணைப்படுத்துக.

குழு 02
- தை முதல் சித்திரை வரை உள்ள காலப்பகுதியில் வரும் விரதங்களையும் பண்டிகைகளையும் பஞ்சாங்க அடிப்படையில் நாள், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்ற வகையில் அட்டவணைப்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - எமது சைவசமய விழாக்கள் விரதங்கள் போன்ற விசேட நிகழ்வுகளுக்கான காலத்தை சரியாக கணித்துக் கூறும் பஞ்சாங்கத்தை பிள்ளைகள் பயன்படுத்த கற்றுக் கொடுங்கள். அவற்றின் உண்மைத் தன்மையை ஏற்று செயற்பட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 : கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 1.4 : சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர்

**செயற்பாடு : பண்டிகைகளைக் கொண்டாடுவோம் (தீபாவளி)**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு** :

1. தீபாவளி பண்டிகையின் போது இடம்பெறும் செயற்பாடுகளில் பங்குகொள்வர்.
2. சகல பண்டிகைகளையும் கொண்டாட முன்வருவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி** 1: - தீபாவளி தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- இதற்கு முன்னர் தீபாவளிப் பண்டிகை கொண்டாடிய அனுபவம் பற்றி மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- சைவர்களால் பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.
- அவற்றுள் ஒன்று தீபாவளியாகும்.

**படி** 2: - மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.4.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி** 3: - குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி** 4: - குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

☐ சைவர்கள் கொண்டாடும் பண்டிகைகள் பல உள்ளன.
  - தைப்பொங்கல்
  - சித்திரைப் புத்தாண்டு
  - ஆடிப்பிறப்பு
  - தீபாவளி
  - ஓணம் பண்டிகை

☐ நரகாசுரன் கதையை அடிப்படையாகக் கொண்டு ஐப்பசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசியில் கொண்டாடப்படும் பண்டிகையாகும்.

☐ தீபாவளித் தினத்தில் பின்வரும் கருமங்கள் இடம்பெறுகின்றன.
  - சூழலைச் சுத்தம் செய்தல்
  - கோலம் போடுதல்
  - பிதிர்களுக்குப் படைத்து வழிபடுதல்
  - நன்றி செலுத்துதல்
  - பிறரோடு பகிரந்துண்ணல்.

- உலகத்தில் வாழும் இந்துக்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. குறிப்பாக இலங்கையிலும் வட இந்தியாவிலும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.
- இலங்கை, தமிழ் நாட்டில் தீபாவளி கொண்டாடப்படும் முறைக்கும் வட இந்தியாவில் கொண்டாடப்படும் முறைக்கும் இடையே வேறுபாடு உண்டு.
- வடஇந்தியாவில் தீபாவளி கொண்டாடப்படும் முறை.
  - பழையவற்றை நீக்கி புதுப்பொருள் வாங்கல்.
  - வீட்டில் மாவிளக்கேற்றல்
  - சாணத்தால் செய்த மனித உருவத்தின் தலையில் விளக்கேற்றல.
  - தோவர்த்தன கிரி உருவம் செய்து அதனைச் சூழ்ந்து ஆடிப்பாடுதல்.
  - மணமான பெண்கள் பூசை செய்த பின் தங்கள் சகோதரர்களுக்கு திலகமிட்டு விருந்துக்கு அழைத்தல்.
- இலங்கை, தமிழ் நாட்டில் கொண்டாடப்படும் முறை:
  - தலையில் எண்ணெய் இட்டு தாயாரின் அல்லது மனைவியின் கையால் நீராடல்.
- பண்டிகையினால் கிடைக்கும் பயன்கள்.

**தர உள்ளீடுகள்:**
- இணைப்பு 1.4.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- தீபாவளி பண்டிகை தொடர்பான படங்கள்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவப் பண்டிகைகளை அறிந்து குறிப்பிடுவர்.
- தீபாவளி பண்டிகையின் போது இடம்பெறும் செயற்பாடுகளில் பங்குகொள்வர்.
- சகல பண்டிகைகளையும் கொண்டாட முன்வருவர்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். (குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிகளை வழங்குங்கள்)

1. சைவப் பண்டிகைகள் சிலவற்றைக் குறிப்பிடுங்கள்.
2. தீபாவளி கொண்டாடப்படும் காலத்தைக் குறிப்பிடுக.
3. இலங்கை, தமிழ் நாட்டில் தீபாவளி கொண்டாடப்படும் முறைக்கும் வட இந்தியாவில் கொண்டாடப்படும் முறைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
4. பண்டிகைகளினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.
5. தீபாவளியோடு தொடர்புடைய புராணக் கதையை குறிப்பிட்டு அதனை சுவைபடக் கூறுக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………………

  2……………………………………………………………………………………………

  3……………………………………………………………………………………………

  4……………………………………………………………………………………………

  5……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - பண்டிகைகளின் உண்மையை உணர்ந்து இறைவழிபாட்டு மூலம் இறைநம்பிக்கையை ஏற்படுத்தி அந்நாட்களில் செய்யமுடியுமான தான தர்மங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** **கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 1.4 :** சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர்

**செயற்பாடு :** **விரதங்களை அனுஷ்டிப்போம் (புரட்டாதிச் சனி, கந்தசஷ்டி, விநாயகர் சஷ்டி)**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

1. விரதங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை அனுஷ்டிப்பர்.
2. விரதங்களை அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய விரத நியதிகளைக் கடைப்பிடிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1: -** மாணவர்களுக்குத் தெரிந்த, வீடுகளில் கடைப்பிடிக்கும் விரதங்களைக் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- விரதங்கள் அனைத்தும் இறைவனை நோக்கி அனுஷ்டிக்கப்படுவன.
- விரதம் என்பது இறைவனின் திருவருளைப் பெறுவதற்கான வழி எனப் பொருள்படும்.
- மனதை ஒருநிலைப்படுத்த விரதம் பெரிதும் உதவும்.

**படி 2: -** மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.4.2 இல் உள்ள செயற்பாட்டுப் படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3: -** குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4: -** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- விரதம் என்பதன் பொருள்:
- “விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடலாகும்” (ஆறுமுகநாவலர்)
- விரதம் ஒருவகையில் தவமாகும்.

**புரட்டாதிச் சனி**

- நவக்கிரகங்களில் ஒன்றான சனீஸ்வரனின் அருள் பெறும் பொருட்டு இவ்விரதம் அனுஸ்டிக்கப்படுகின்றது.
- புரட்டாதி மாதத்திற்குரிய விசேட நாள் சனிக்கிழமையாகும்.
- எள்ளு எரித்தல் முக்கிய அம்சமாகும்.
- எள்ளுச்சாதம் நிவேதனமாக வைக்கப்படும்.
- சனிபகவானுக்கு கருங்குவளைப்பூ, நீல நிறப்பூ, வன்னி இலை என்பன உகந்தனவாகும்.
- அத்துடன் கறுப்பு நிறத்துணி, நீலநிற மாலை, வில்வம் பத்திரம் என்பனவும் உகந்தனவாகும்.
- சனிக்கிழமைகளில் விஷ்ணு சகஸ்ர நாம பாராயணம் செய்தல் நல்லது.

**விநாயகர் சஷ்டி**

- கார்த்தகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி வளர்பிறை சஷ்டி வரை 21 நாட்கள் அனுஷ்டிக்க வேண்டும்.
- பெருங்கதை, பிள்ளையார் கதை விரதம், பிள்ளையார் நோன்பு எனவும் அழைக்கப்படும்.
- விரதக் காப்பு அணிதல் முக்கிய அம்சமாகும்.
- விரதகாலத்தில் தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல் எள்ளுருண்டை என்பவற்றை நிவேதித்தல் வேண்டும்.
- முதல் 20 நாளும் பகல் ஒரு பொழுது உணவு உண்ணல் வேண்டும். இரவில் பால், பழம் உண்ணலாம்.
- இறுதித்தினத்தில் உபவாசம் இருத்தல் வேண்டும்.
- விநாயகர் சஷ்டி விரதத்தை 21 வருடங்கள் அனுஷ்டிக்க வேண்டும்.
- இயலாதவர்கள் 7 வருடங்களாவது அனுஷ்டிக்க வேண்டும்.

**கந்தசஷ்டி விரதம்**

- இது முருகனுக்குரிய விரதமாகும்.
- ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து வரும் வளர் பிறையில் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு நாட்களும் விசேடமாக வழிபட்டுதல்.
- முருகப் பருெமான் சூரசங்காரம் செய்து, தேவர்களை காத்த அருட் செயலைக் குறிக்கும்.
- மனிதரிடம் உள்ள காமமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து தெய்வீக நிலையில் பெரு வாழ்வு வாழ அருள் பாலிக்கும்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.4.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- விரதங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை அனுஷ்டிப்பர்.
- விரதங்களை அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய விரத நியதிகளைக் கடைப்பிடிப்பர்.
- விரதங்களின் மூலம் ஆன்மீகம் மேம்படுகின்றது என்பதை உணர்ந்து கொள்வர்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.
குழுவாகச் சேர்ந்து அட்டவணையை நிரப்புங்கள்.

குழு - 01

| புரட்டாதிச் சனி விரதம் | |
|---|---|
| கடவுள் | |
| விரத காலம் | |
| வேறுபெயர்கள் (இருப்பின்) | |
| அனுஷ்டிக்கும் முறைகள் | |

குழு - 02

| விநாயகர் சஷ்டி விரதம் | |
|---|---|
| கடவுள் | |
| விரத காலம் | |
| வேறுபெயர்கள் (இருப்பின்) | |
| அனுஷ்டிக்கும் முறைகள் | |

குழு - 03

| கந்தசஷ்டி விரதம் | |
|---|---|
| கடவுள் | |
| விரத காலம் | |
| வேறுபெயர்கள் (இருப்பின்) | |
| அனுஷ்டிக்கும் முறைகள் | |

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  - பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - இறைவனே மெய்ப் பொருள் எனும் உண்மையை உணர்ந்து விரதம் இருக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள் விரதம் இருப்பதன் உண்மைத் தன்மையை உணரச் செய்யுங்கள் விரதம் அனுட்டித்து இறைநம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 : கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 1.5 : வாழ்வியற் சடங்குகள் பற்றி அறிந்து, பொருளுணர்ந்து அவற்றைப் பின்பற்றுவர்.

**செயற்பாடு : வாழ்வியற் சடங்குகளில் ஈடுபடுவோம். (திருமணம்**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தகற்றல் பேறு** :

1. திருமணக் கிரியையின் அவசியத்தை உணர்ந்து மதிப்பளிப்பர்.
2. பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் திருமணக்கிரியை முறைகளைத் தேடியறிவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- எமது வாழ்வியற் சடங்குகள் சிலவற்றைக் கூற இடமளியுங்கள்.
- இதற்கு முன்னர் தாம் கண்ட திருமணச் சடங்கு பற்றிக் கேட்டறியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  ▪ வாழ்வியற் சடங்குகள் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்த உதவியாக அமைகின்றன.
- வாழ்வியற் சடங்குகளிற் திருமணச் சடங்கும் ஒன்றாகும்.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.5.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  ▪ வீட்டில் நடைபெறும் மங்கலகரமான கிரியைகள் பூர்வக் கிரியைகள் எனப்படும்.
  ▪ பூர்வக் கிரியைகளுள் முக்கியமானது திருமணக் கிரியையாகும்.
  ▪ கருத்தொருமித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நடைபெறும் மங்கல நிகழ்வு திருமணக் கிரியையாகும்.

- திருமணத்தின் போது பல கருமங்கள் இடம்பெறுகின்றன.
  அவற்றுள் சில:
  - திருமணம் தொடங்கும் நிகழ்வு
  - பொருத்தம் பார்த்தல்
  - நாள் குறித்தல்.
- திருமணத்தின் போது ஆசாரியார் ஸ்தான சந்தியாவந்தன ஜபங்களால் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றார்.
- திருமணத்தின் போது ஆசாரியரால் மேற்கொள்ளப்படும் பூசை முறைகள்:
  - சங்கற்பம்
  - விக்கினேஸ்வரர் பூசை
  - புண்ணிய யாகம்
  - பஞ்சகௌவியம்
  - காப்புக்கட்டுதல்
  - முளைப்பாலிகை இடுதல்
  - சிவகும்ப பூசை
  - நவக்கிரக பூசை
  - அக்கினி காரியம்
  - மணப்பந்தல் அமைத்தல்
  - காப்புக்கட்டுதல்
  - கன்னிகாதானம்
  - கூறை கட்டும் நிகழ்வு
  - தாலி கட்டுதல்
  - தாலிகட்டிய பின் நிகழும் அம்சங்கள்.
  - அம்மி மிதித்தல்
  - அக்கினி வலம் வருதல்
  - அக்கினியில் நெற்பொறி சொறிதல்
  - நீர்குடத்திற்குள் மோதிரம் எடுத்தல்
  - மணமக்களுக்கு பால் பழம் உண்ணக் கொடுத்தல்.
  - பசுக்கன்றைத் தரிசித்தல்
  - ஆசீர்வாதம்
  - அறுகரிசியிடல்
  - வாழ்த்து
  - அருந்ததி காட்டல்.
  - சாந்தி முகூர்த்தம்
  - திருமணங்கள் இல்லங்களிலும் ஆலயங்களிலும் பொதுமண்டபங்களிலும் நடைபெறுகின்றது.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- திருமன ஒளிப்படக் கருவிளை காட்சிப்படுத்தல்

### படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- திருமணக் கிரியையின் அவசியத்தை உணர்ந்து மதிப்பளிப்பர்.
- பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் திருமணக்கிரியை முறைகளைத் தேடியறிவர்.
- உறவினர்களின் திருமணக்கிரியைகளின் போது அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு முனவருவர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.
குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதிகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

1. திருமணம் என்றால் என்ன?
2. திருமணத்தின் போது இடம்பெறும் கிரியைகளைப் பட்டியற்படுத்துங்கள்.
3. திருமணத்தின் போது ஆசாரியரால் மேற்கொள்ளப்படும் கருமங்களைப் நிரற்படுத்துங்கள்.
4. கன்னிகாதானம் முதல் அருந்ததி காட்டல் வரையான சடங்குகளை நிரற்படுத்துங்கள்.
5. மனித வாழ்க்கையில் திருமணத்தின் அவசியத்தைக் குறிப்பிடுங்கள்.
6. மேலுள்ள வினாக்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **வில்லிசை** ஒன்று தயாரித்து அதனை வகுப்பறையில் செய்து காட்டுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - திருமண நடைமுறைகளை நேரில் பார்க்கச் செய்யுங்கள் திருமணச் சடங்குகள் மூலம் வெளிப்படுத்தப்படும் தத்துவார்த்த கதைகளில் நம்பிக்கையை ஏற்படுத்தி கொள்ள வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். பாடல்களின் பொருளறிவர். அருஞ்சொற்களை விளக்குவர். சந்தர்ப்பம் கூறுவர்.

**செயற்பாடு : திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்ளைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை அறிவோம். பொருள் கூறுவோம். எழுத்துப் பிழையின்றி தேவாரத்தினையும் பொழிப்பினையும் எழுதுவோம்.**

**நேரம் :** 03 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

- தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- தேவாரங்களின் பொருளைக் கூறுவர்.
- சந்தர்ப்பம் கூறுவர்.
- எழுத்துப் பிழையின்றி தேவாரத்தினையும் பொருளையும் எழுதுவர்.
- தமது வாழ்வில் தேவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுவதற்கு முன்வருவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**

- தேவாரம் என்பதன் பொருளை மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.
- தேவரம் பாடிய மூவர் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மூவர் பாடிய தேவாரங்களில் மாணவர்களுக்குத் தெரிந்த தேவாரத்தினைக் கூறும்படி கேளுங்கள்.
- அவற்றினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடும்படி கூறுங்கள்.
    - ‘‘அங்கமும் வேதமும்…’’
    - ‘‘உற்றுமை சேர்வது…’’
    - ‘‘குனித்த புருவமும்…’’
    - ‘‘நாமார்க்கும் குடியல்லோம்…’’
- ஆகிய தேவாரங்களை பண்ணோடு பாடக் கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடச் செய்தோ ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவை ஏற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்று தேவாரங்களைப் பாடச் செய்யலாம். அல்லது இசைப்பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி 2:**

- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.நியதிகளைக் கூறி செயற்பாட்டுப் படிவத்தினைவழங்குங்கள். மாணவர்கள் இசைப் பேழையினைப் பயன்படுத்தவும் அனுமதியுங்கள்.

படி 3:
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- தேவையேற்படின் மீண்டும் பதிகங்களைப் பண்ணோடு பாடியோ இசைப்பேழையை ஒலிக்கவிட்டோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

படி 4:
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

(1) “அங்கமும் வேதமும்...” என்னும் தேவாரம் திருஞர்ன சம்பந்தரால் பாடப்பட்டது.
- இது முதலாம் திருமுறையில் அமைந்துள்ளது.
- பண் நட்டபாடை
- திருமருகலூர் திருசெங்காட்டங்குடியிலும் உள்ள இறைவனைத் துதித்துப் பாடப்பட்டது.

- “உற்றுமை சேர்வது...” என்னும் தேவாரம் திருஞான சம்பந்தரால் பாடப்பட்டது.
- இது மூன்றாம் திருமுறையில் அமைந்துள்ளது.
- பண் பழம்பஞ்சுரம்
- இறைவன் மன்மதனை எரித்தப் புராணக் கதையைக் கூறுகின்றது.
- இறைவனின் கருணைத்திறன் கூறப்பட்டுள்ளது.

(2) “குனித்த புருவம்...” என்னும் தேவாரம் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பட்டது.
- இது நான்காம் திருமுறையில் அமைந்துள்ளது.
- பண் கொல்லி
- இப்பதிகம் நடராஜ மூர்த்தியின் நடனக் கோலத்தை சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.
- நடராஜ மூர்த்தி தரிசனச் சிறப்பானது, நடராஜ மூர்த்தி தரிசனம் கிடைக்கப் பெற்ற மனிதப் பிறவி மேலானது என அப்பர் கூறுகின்றார்.

- “நாமார்க்கும் குடியல்லோம்...” எனும் தேவாரம் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பட்டது.
- இது ஆறாம் திருமுறையில் அமைந்துள்ளது.
- திருத்தாண்டக வகையைச் சேர்ந்தது.
- சமணர்கள், மகேந்திரப் பல்லவ மன்னன் நாவுக்கரசரை அழைத்து வரும்படி கட்டளையிட்டதாக நாவுக்கரசருக்கு கூறியபோது நாம் யாருக்கும் அடிமையல்ல. இறைவனுக்கே அடிமை என வீரத்துடன் சமணர்களிடம் கூறியபோது பாடப்பட்டது.

**தர உள்ளீடுகள் :** - இணைப்பு 2.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா,
- தேவாரம் அடங்கிய இசைப்பேழை

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- தேவாரங்களின் சிறப்பினை அறிவர்.
- தேவாரம் பாடிய மூவரைக் குறிப்பிடுவர்.
- தேவாரங்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப்பிழையின்றி தேவாரத்தினையம் பொருளினையம் எழுதுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

- திருவுளச்சீட்டின் மூலம் குழுவினரைத் தெரிவு செய்யும் இரண்டு பதிகங்களை வரிக்கிரமமாக எழுதுங்கள்.
- பாடியவர் பெயர், பண் ஆகியவற்றையும் குறிப்பிடுங்கள்.
- அப்பதிகங்களின் பொருளையும் எழுதுங்கள்.
- தெரிவு செய்த தேவாரங்களை குழுவாக பண்ணோடும் பக்தியோடும் பாடுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

 1…………………………………………………………………………………………

 2…………………………………………………………………………………………

 3…………………………………………………………………………………………

 4…………………………………………………………………………………………

 5…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - தேவாரப் பாடல்களை மனனம் செய்து பாடச் செய்யுங்கள், அவை வெளிப்படுத்தும் சமய, சமுக கருத்துக்களில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், பொது நிகழ்வுகளில் தேவாரப் பாடல்கள் பாடுவதில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். பாடல்களின் பொருளறிவர். அருஞ்சொற்களை விளக்குவர். சுந்தர்ப்பம் கூறுவர்.

**செயற்பாடு : சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரங்ளைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை அறிவோம். பொருள் கூறுவோம். எழுத்துப் பிழையின்றி தேவாரத்தினையும் பொழிப்பினையும் எழுதுவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- தேவாரங்களின் பொருளைக் கூறுவர்.
- சந்தர்ப்பம் கூறுவர்.
- எழுத்துப் பிழையின்றி தேவாரத்தினையும் பொருளையும் எழுதுவர்.
- தமது வாழ்வில் தேவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுவதற்கு முன்வருவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**

- சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரங்களில் மாணவர்களுக்குத் தெரிந்த தேவாரங்களைக் கூறும்படி கேளுங்கள்.
- அவற்றினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடும்படி கூறுங்கள்.
  - ''பித்தா பிறைசூடி…''
  - ''மீளா அடிமை…'' ஆகிய தேவாரங்களை பண்ணோடு பாடக் கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடச் செய்தோ ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவை ஏற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்று தேவாரங்களைப் பாடச் செய்யலாம். அல்லது இசைப்பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி 2:**

- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறி செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.
- மாணவர்கள் இசைப்பேழையினைப் பயன்படுத்தவும் அனுமதியுங்கள்.

**படி 3:**

- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகள்.
- தேவையேற்படின் மீண்டும் பதிகங்களைப் பண்ணோடு பாடியோ இசைப்பேழையை ஒலிக்கவிட்டோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

**படி 4:**

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
- பித்தா பிறைசூடி'' என்னும் தேவாரம் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது.
- இது ஏழாம் திருமுறையில் அமைந்துள்ளது.
- திருமணமேடையில் இறைவன் சுந்தரரை தடுத்தாட்கொண்ட போது திருவெண்ணெய் நல்லூர் இறைவனைத் துதித்துப் பாடப்பட்டது.
- இறைவனின் தோற்றப் பொலிவினை விளக்குகின்றது.

- உற்றுமை சேர்வது'' என்னும் தேவாரம் திருஞான சம்பந்தரால் பாடப்பட்டது.
- இது மூன்றாம் திருமுறையில் அமைந்துள்ளது.
  - பண் பழம்பஞ்சுரம்
  - இறைவன் மன்மதனை எரித்த புராணக் கதையைக் கூறுகின்றது.
  - இறைவனின் கருணைத்திறன் கூறப்பட்டுள்ளது.
- ''மீளா அடிமை'' என்னும் தேவாரம் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது.
  - இது ஏழாம் திருமுறையில் அமைந்துள்ளது.
  - சங்கிலியாரை பிரியமாட்டேன் என்று கொடுத்த வாக்குறுதியை மறந்தமையினால் திருவொற்றியூரை விட்டு நீங்கிய போது இரண்டு கண்களும் குருடாயின. பின் திருக்கச்சியேகம்பத்தை தலத்து இறைவனை வணங்கி ''கடையானேன் எண்ணாத பிழை பொறுத்து'' என்ற பதிகத்தினைப் பாடி இடக்கண் பார்வையைப் பெற்றார். திருவாரூரை அடைந்த சுந்தரர் வான்மீகநாதர் கோலத்தைக் காண்பதற்கு ஒரு கண்போதாது என்று மற்றக் கண்ணும் வேண்டும் என்று இறைவனை வேண்டி ''மீளா அடிமை...'' என்ற பதிகத்தினைப் பாடினார். அப்போது இறைவன் அருளால் வலக்கண் பார்வையும் கிடைத்தது.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 2.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, தேவாரம் அடங்கிய இசைப்பேழை

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- மூவர் தேவாரங்கள் எவை எனப் பிரித்துக் கூறுவர்.
- தேவாரம் பாடிய மூவரைக் குறிப்பிடுவர்.
- தேவாரங்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப்பிழையின்றி தேவாரத்தினையும் பொருளினையும் எழுதுவர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

- ஒவ்வொரு குழுவும் ''பித்தாப் பிறைசூடி'', ''மீளா அடிமை உமக்கே'' என்ற பதிகங்களளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
- பாடியவர் பெயர், பண், சந்தர்ப்பம் ஆகியவற்றையும் குறிப்பிடுங்கள்.
- பதிகங்களையும் அதன் பொருளையும் உரிய முறைப்படி எழுதுங்கள்
- தெரிவு செய்த தேவாரங்களை குழுவாக பண்ணோடும் பக்தியோடும் பாடுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1…………………………………………………………………………………………

  2…………………………………………………………………………………………

  3…………………………………………………………………………………………

  4…………………………………………………………………………………………

  5…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - தேவாரப் பாடல்களை மனனம் செய்து பாடச் செய்யுங்கள், அவை வெளிப்படுத்தும் சமய, சமுக கருத்துக்களில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், பொது நிகழ்வுகளில் தேவாரப் பாடல்கள் பாடுவதில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். பாடல்களின் பொருளறிவர். அருஞ்சொற்களை விளக்குவர். சந்தர்ப்பம் கூறுவர். பண்ணுடன் பாடுவர்.

**செயற்பாடு : திருவாசகம் பற்றி அறிந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். திருவாசகத்தினை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவோம். பாடலின் பொருள் சந்தர்ப்பம் என்பவற்றையும் எழுதுவோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :** - திருவாசகத்தின் பெருமை அறிந்து போற்றிப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- பஞ்ச தோத்திரம் பாடும் போது இரண்டாவதாகப் பாடப்படும் பாடல்வகை எவை என மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களுக்குத் தெரிந்த திருவாசகப் பாடல் அடிகளைக் கேட்டு அறியுங்கள்.
- அவற்றினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடும்படி கூறுங்கள்.
- குறிப்பிட்ட திருவாசகப் பாடல்களை பண்ணோடு பாடக் கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடச் செய்தோ ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவை ஏற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்று தேவாரங்களைப் பாடச் செய்யலாம். அல்லது இசைப்பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறி செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.
- மாணவர்கள் இசைப்பேழையினைப் பயன்படுத்தவும் அனுமதியுங்கள்.

**படி 3:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- தேவையேற்படின் மீண்டும் திருவாசகங்களை பண்ணோடு பாடியோ இசைப்பேழையை ஒலிக்கவிட்டோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிற்க்கு கருத்துரை வழங்கஇடமளியுங்கள்.
- செயற்பாட்டினைக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

- திருவாசகம் மாணிக்க வாசக சுவாமிகளால் பாடப்பட்டது.
- திருவாசகம் எட்டாம் திருமுறையில் அடங்கும்.
- திருவாசகம் படிப்போர் உள்ளத்தினை நெகிழவைப்பது.
- பஞ்ச தோத்திரம் பாடும் போது இரண்டாவதாகப் பாடப்படுவது.
- திருவாசகம் பாடும் போதும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படல் வேண்டும்.
  - பாடமுன்பும் பாடியபின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லல்
  - மனனம் செய்திருத்தல்.
  - பொருள் உணர்ந்து பக்தியோடும் பண்ணோடும் பாடுதல்

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 2.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, திருவாசகம் அடங்கிய

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது என்பதனை அறிவர்.
- திருவாசகம் எட்டாம் திருமுறையில் அடங்கும் என்பதனைக் கூறுவர்.
- திருவாசகம் பஞ்சதோத்திரம் பாடும்போது இரண்டாவதாகப் பாடப்படும் என்பதனை அறிவர்.
- திருவாசகப் பாடலை பொருள் உணர்ந்து பக்தியோடும் பண்ணோடும் பாடுவர்.
- திருவாசகப் பாடலை எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதி பொருள் கூறுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

திருவுளச் சீட்டின் மூலம் மாணவர் தெரிவுசெய்த திருவாசகப் பாடலை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டுப் பத்திரத்தினை நிறைவு செய்யுங்கள்.

- பாடியவர் பெயர்
- பாடிய தலம்
- தெரிவு செய்த திருவாசகப் பாடலை வரிகிரமமாக எழுதுக.
- பொருள் எழுதுக.
- திருவாசகத்தின் சிறப்புக்கள் இரண்டினை எழுதுக.
- தெரிவு செய்த திருவாசகப் பாடலை குழுவாகப் பக்தியோடும் பண்ணோடும் பாடுக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - திருவாசகப் பாடல்களை மனனம் செய்து பாடச் செய்யுங்கள், அவை வெளிப்படுத்தும் சமய, சமுக கருத்துக்களில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், பொது நிகழ்வுகளில் திருவாசகப் பாடல்கள் பாடுவதில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 :** **பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 2.1 : திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். பாடல்களின் பொருளறிவர். அருஞ்சொற்களை விளக்குவர். சந்தர்ப்பம் கூறுவர். பண்ணுடன் பாடுவர்.

**செயற்பாடு :** **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, பெரியபுராணம் ஆகிய பாடல்களை பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். பாடல்களை எழுத்துப்ப பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவோம். பாடலின் பொருள் சந்தர்ப்பம் என்பவற்றையும் எழுதுவோம்.**

**நேரம் :** 03 பாடவேளைகள்

**கற்றல் பேறு :** - 9,10,11,12ஆம் திருமுறைப்பாடல்களை அறிந்து போற்றிப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- கோயில்களில் பஞ்ச தோத்திரம் பாடப்படும் முறை பற்றி மாணவர்களிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களுக்குத் தெரிந்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, பெரியபுராணம ஆகிய பாடல்களைக் கேட்டு அறியுங்கள்.
- அவற்றினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடும்படி கூறுங்கள்.
- குறிப்பிட்ட திருவாசகப் பாடல்களை பண்ணோடு பாடக் கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடச் செய்தோ ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவை ஏற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்று தேவாரங்களைப் பாடச் செய்யலாம். அல்லது இசைப் பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறி செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.
- மாணவர்கள் இசைப்பேழையினைப் பயன்படுத்தவும் அனுமதியுங்கள்.

**படி 3:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- செயற்பாட்டினைக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - திருவிசைப்பா தெய்வத்தன்மை பொருந்திய இசையுடன் கூடிய பாடல் எனப் பொருள்படும்.
  - திருவிசைப்பாவினை சேந்தனார், கருவூர்த்தேவர், ஆகியோர் பாடியுள்ளனர்.
  - திருவிசைப்பா ஒன்பதாந் திருமுறையில் அடங்குகின்றது.
  - திருப்பல்லாண்டு இறைவனைப் பல்லாண்டு வாழ்வாயாக என வாழ்த்திப் பாடப்பட்ட பாடல் ஆகும். திருப்பல்லாண்டு பாடியவர் சேந்தனார் ஆவார்.

- திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையில் அடங்குகின்றது.
- பத்தாம் திருமுறை திருமந்திரம் ஆகும்.
- திருமந்திரம் திருமூலரால் பாடப்பட்டது.
- ஆகமப் பொருளை தமிழ் கூறும் நூலாகத் திருமந்திரம் விளக்குகின்றது.
- மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை கபில தேவ நாயனாரால் பாடப்பட்டது.
- இது பதினோராந் திருமுறையில் அடங்குகின்றது. விநாயக பெருமானின் பெருமையை விளக்குகின்றது.
- பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணம். இது சேக்கிழாரால் பாடப்பட்டது.
- மனுநீதிகண்ட சோழனுக்கு இறைவன் அருள்கொடுத்த சிறப்பினை பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.
- பஞ்ச தோத்திரத்தில் இறுதியாகப்பாடப்படுவது பெரியபுராணம் ஆகும்.
- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்ற ஒழுங்கில் பஞ்சதோத்திரம் பாடப்படும்.
- இவற்றைப் பாடும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.
  - பாடமுன்பும் பாடியபின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லல்
  - மனனம் செய்திருத்தல்.
  - பொருள் உணர்ந்து பக்தியோடும் பண்ணோடும் பாடுதல்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 2.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, திருவாசகம்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- 9,10, 11, 12ஆம் திருமுறைகளில் அடங்கும் நூல்களையும் அதன் ஆசிரியர்களையும் குறிப்பிடுவர்.
- பஞ்ச தோத்திரம் ஓதும் முறையினை எழுதுவர்.
- 9,10, 11, 12ஆம் திருமுறைப்பாடல்களை பக்தியோடும் பண்ணோடும் பாடுவர்.
- எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக பாடல்களை எழுதி பொருள் கூறுவர்.

செயற்பாட்டுப் பத்திரம்

| | | |
|---|---|---|
| A திருவாசகம் | E திருப்பல்லாண்டு | I மனுநீதிக்கண்ட சோழன் |
| B விநாயகர் | F பால்நினைந்து | J கபிலதேவநாராயனார் |
| C சேந்தனார் | G வீதிவிடங்கப் பெருமான் | K மணிவாசகர் |
| D சேக்கிழார் | H மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை | L தில்லை |

**கீழ்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

- 8ஆம் திருமுறையில் அடங்கும் தொகுதி
  (அ) AFJ (ஆ) CFK (இ) AFK (ஈ) AKG
- 11ஆம் திருமுறையில் அடங்கும் தொகுதி
  (அ) DEL (ஆ) LEL (இ) BFJ (ஈ) FJL
- ஓடாத தேரை ஓடவைத்த செயலுடன் தொடர்புடையது
  (அ) BGI (ஆ) DEL (இ) AEI (ஈ) CEF
- பெரியபுராண பாடலுடன் தொடர்புடைய தொகுதி
  (அ) DGI (ஆ) DFL (இ) BDL (ஈ) CGI

- தண்ணளி வெண்குடை வேந்தன் செயல் யாது என சேக்கிழார் குறிப்பிடுகின்றார்?
- வேந்தன் முன் வீதிவிடங்கன் பெருமான் எவ்வாறு காட்சிக் கொடுத்தார்?
- இச் செயல் எமக்கு உணர்த்தும் படிப்பினை யாது?

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - தேவாரப் பாடல்களை மனனம் செயது பாடச் செய்யுங்கள், அவை வெளிப்படுத்தும் சமய, சமுக கருத்துக்களில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், பொது நிகழ்வுகளில் தேவாரப் பாடல்கள் பாடுவதில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 2.2 : சைவ சமயத்தின் பொது, சிறப்பு நூல்களை அறிந்து அவை கூறும் தத்துவக் கருருத்துக்களை வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு : வேதங்கள் பற்றி அறிந்து போற்றுவோம்.**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு** :

1. வேதம் என்பதன் பொருளைக் கூறுவர்
2. வேதகாலத் தெய்வங்களை அறிந்து போற்றுவர்.
3. வேதங்களின் சமய, சமூக, வழிபாட்டு அம்சங்களைப் பிறருக்கு எடுத்துரைப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி** 1: - எமது சமயத்தின் மூலநூல் எதுவென வினவி, அது பற்றிய கருத்துக்களை மாணவர்கள் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - மூலநூல் வேதம் ஆகும்.
  - வேதத்தோடு ஆகமத்தையும் சேர்த்து சைவத்தின் முதல்நூல்கள் எனக் குறிப்பிடுவர்.
  - வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என நான்காகும்.

**படி** 2: - மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.5.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகள் செயற்பாட்டுப் படிவம் என்பவற்றை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி** 3: - குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4: -** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

வேதம் என்றால் அறிவு என்பது பொருள்.

- வேதங்களை வகுத்தவர் வியாசர் ஆவார்.
- வேதத்திற்குப் பல பெயர்கள் உள்ளன.
- சுருதி செவிவழியாக பேணப்பட்டது.
- ஆம்நாயம் - தொன்றுதொட்டு பயிலப்படுவது.
- எழுதாமறை - ஏட்டில் எழுதப்படாதது
- அபௌருஷேயம் - மனிதரால் தோற்றுவிக்கப்படாதது.
- வேதம் நான்கு வகைப்படும். அவை,
    - இருக்கு
    - யசுர்
    - சாமம்
    - அதர்வணம்
- ஒவ்வொரு வேதமும் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை,
    - சங்கிதை
    - பிராமணம்
    - ஆரணியகம்
    - உபநிடதம்
- வேதம் மூன்று காண்டங்களாவும் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,
    - கர்ம காண்டம்
    - ஞான காண்டம்
    - உபாசனைக் காண்டம்

**இருக்கு வேதம்:**

- இருக்கு வேதம் என்பது பாட்டு என்று பொருள்படும்.
- இருக்கு வேதப் பாடல்கள் தெய்வங்களை வேண்டித் துதித்துப் பாடப்பட்டவையாகும்.
- ‘‘ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி’’ எனும் கூற்றின் ஊடாக இறைவன் ஒருவனே எனும் கருத்து குறிப்பிடப்படுகின்றது.
- இந்திரன், அக்கினி, சூரியன், உருத்திரன், வருணன், உஷை ஆகிய தெய்வங்களை வேண்டிப் பாடி நிற்பது இப்பாடல்களின் பொதுப் பண்பாகும்.

- **யசுர் வேதம்**
    - இருக்கு வேத வழிபாட்டு முறையை விரித்தும் ஒழுங்குபடுத்தியும் கூறுவது யசுர் வேதமாகும்.
    - இது உரைநடையில் அமைந்துள்ளன.
    - வேள்வி செய்து வழிபடும் முறையை விளக்குகின்றது.
    - சிவபெருமானின் பெருமையைக் கூறும் ‘‘ஸ்ரீருத்ரம்’’ என்பது யசுர் வேதத்தில் இடம்பெறுகின்றது.
    - தெய்வங்களுக்குப் பல பெயர் கூறிவழிபடும் வழக்கமானது அஸ்டோத்திர, சகஸ்ர நாமம் தோன்றுவதற்கு வழிகாட்டியாய் அமைந்தது.

- **சாம வேதம்**
- சாமம் என்பது இசை என்று பொருள்படும்.
- இறைவன் சாம வேதப்பிரியன் ஆவான்.
- வழிபாட்டில் இசை பெறும் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது.

- **அதர்வண வேதம்**
- காலத்தின் அருமை, பிரமச்சரியம், செல்வத்தைப் பெருக்கல், பூமி விருத்தி, போர்முறை, நோய் நீக்கம், தீமைவிலக்கல், வயப்படுத்தல் முதலியவை பற்றிக்கூறப்படுகின்றன.
- மந்திரம், மாயம், மருந்து போன்றவற்றிற்கு முதன்மை அளிக்கின்றது.
- மானிடவியல் ஆராய்ச்சியாளருக்கு மிகமுக்கியமானது.
- பிற்கால மருத்துவக் கலையின் முளைகளை இவ்வேதம் கொண்டுள்ளது.

**தர உள்ளீடுகள் :**
- இணைப்பு 2.2.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- வேதம் என்பதன் பொருளைக் கூறுவர்
- வேதகாலத் தெய்வங்களை அறிந்து போற்றுவர்.
- வேதங்களின் சமய, சமூக, வழிபாட்டு அம்சங்களைப் பிறருக்கு எடுத்துரைப்பர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

#### குழு 1

- சைவத்தின் முதனூல்கள் எவை?
- இருக்கு வேதம் கூறும் கருத்துக்களை நிரற்படுத்துங்கள்.
- வேதத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்களையும் அதற்கான விளக்கங்களையும் தருக.
- யசுர் வேதம் குறிப்பிடும் கருத்துக்களை குறிப்பிடுங்கள்.

#### குழு 2

- வேதங்களை தொகுத்தவர் யார்?
- நால்வகை வேதங்களும் எவை?
- சாம வேதம் கூறும் கருத்துக்களை தொகுத்துத்தருக.
- அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்

குழு 3

- வேதங்களை தொகுத்தவர் யார்?
- நால்வகை வேதங்களும் எவை?
- சாம வேதம் கூறும் கருத்துக்களை தொகுத்துத்தருக.
- அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்

குழு 4

- ஒவ்வொரு வேதமும் எத்தனை பகுதிகளைக் கொண்டிருக்கும். அவை எவை?
- வேதங்கள் எத்தனை காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை எவை?
- அதர்வண வேதம் கூறும் கருத்துக்களை தொகுத்துத்தருக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.…………………………………………………………………………………………

  2.…………………………………………………………………………………………

  3.…………………………………………………………………………………………

  4.…………………………………………………………………………………………

  5.…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - வேதங்கள் பற்றி அறிந்து அவை வெளிப்படுத்தும் சமய, சமுக கருத்துக்களில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள.

**தேர்ச்சி 2.0 :** **பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 2.2 : சைவ சமயத்தின் பொது, சிறப்பு நூல்களை அறிந்து அவை கூறும் தத்துவக் கருருத்துக்களை வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** **ஆகமங்கள் பற்றி அறிந்து போற்றுவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

1. ஆகமம் என்பதன் பொருளைக் கூறுவர்
2. ஆகமங்களை வகைப்படுத்திக் காட்டுவர்.
3. ஆகமங்கள் கூறும் விடயங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவர்.
4. ஆகமங்கள் சமய வழிபாட்டில் பெறும் முக்கித்துவத்தினை அறிந்து அதனைப் போற்றுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- தேவாரப்பாடல்களில் இடம்பெறும் ஆகமம் பற்றிய அடிகளைக் குறிப்பிட்டு அது தொடர்பான கருத்துக்களை மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
    - வேதத்தைப் போலவே ஆகமமும் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவையாகும்.
    - வேதம் பொதுநூலாகவும் ஆகமம் சிறப்பு நூலாகவும் காணப்படுகின்றன.
    - ஆகமங்கள் சமய நெறிமுறைகளைத் தத்துவ நோக்கோடு விபரிக்கின்றன.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல்,இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.5.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்

**படி 3:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4: - குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- வேதத்தைப் போலவே ஆகமும் இறையுண்மையை எடுத்துக்கூறும்.
- சைவாகமங்கள் சிவாகமங்கள் எனவும் வைணவாகமங்கள் சங்கிதைகள் எனவும் சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- சிவாகமங்கள் 28 ஆகும்.
- அவை காமிகம் முதல் வாதுளம் வரையாகும்.
- ஆகமம் என்ற சொல்லுக்குப் பின்வரும் முறைகளில் பொருள் காணமுடியும்.
    - 'தொன்று தொட்டு வரும் அறிவு' அல்லது 'இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் நூல்' என்ற அடிப்படையில்,
    - ஆகமம் என்பது ஆ ˛ க ˛ ம எனப் பிரிந்து
      ஆ – சிவஞானம்
      க – மோட்சம்
      ம – மலநாசம் என்ற அடிப்படையில்,
    - ஆகமம் என்பது ஆ ˛ க ˛ ம எனப் பிரிந்து
      ஆ – பசு
      க – பதி
      ம – பாசம்என்ற அடிப்படையில்,
- ஆகமங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டன என்பதற்கான சில சான்றுகள்.
    - "மன்னுமாமலை மகேந்திரமதனிற்
      சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்…" (மணிவாசகர்)
    - "வேதமோடாகமம் மெய்யாம் இறைவநூல்…"
      (திருமந்திரம்)
    - "ஆகமமாகி நின்று அண்ணிப்பான்…" (மணிவாசகர்)
- ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடையச் செய்தலையே ஆகமங்கள்குறிக்கோளாகக் கொண்டு காணப்படுகின்றன.
- ஆகமங்கள் ஒவ்வொன்றும் 4 பிரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றன. அவை,
    - சரியா பாதம்
    - கிரியா பாதம்
    - யோக பாதம்
    - ஞான பாதம்
- ஆகமங்களில் பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன.
    - கோயிற் கிரியைகளும் அவற்றைச் செய்யும் முறைகளும்
    - வழிபடுவோருக்குரிய இயல்புகள்.
    - சைவ சாதன வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள்.
    - ஆலயம் அமைப்பதற்கான இடம், அதன் அமைப்பு முறை
    - படிம இலக்கணம், படிமங்களை வார்க்கும்முறை
    - இறை வாகனங்கள், தேர் அமைக்கும் முறை.
    - அர்ச்சகர், சிற்பாசாரியார் ஒழுக்கம்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 2.2.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- ஆகமங்கள் பற்றிக் கூறும் நூல்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஆகமம் என்பதன் பொருளைக் கூறுவர்
- ஆகமங்களை வகைப்படுத்திக் காட்டுவர்.
- ஆகமங்கள் கூறும் விடயங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவர்.
- ஆகமங்கள் சமய வழிபாட்டில் பெறும் முக்கித்துவத்தினை அறிந்து அதனைப் போற்றுவர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

**குழு 1,3**

- சைவாகமங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
- வைணவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
- சாக்த ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன
- ஆகமம் என்ற சொல்லின் பொருளைத் தெளிவுபடுத்துங்கள்
- சிவாகமங்கள் எத்தனை? அவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு 2,4**

- ஆகமங்களின் இலக்கு என்ன என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- ஆகமங்கள் கூறும் விடயங்களைப் பட்டியற்படுத்துங்கள்
- சிவாகமங்கள் கூறும் ஆலய வழிபாடு தொடர்பான விடயங்களை எழுதுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - ஆகமம் பற்றி அறிந்து அவை பற்றிய தேடல்களில் ஈடுபடவும், கோயிற் கிரியைகளை அவதானித்து அதன் உண்மைத்தன்மைகளையும் தத்துவார்த்த அம்சங்களையும் இனங்கான வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து அதனை வாழ்விற் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்** 2.3 : சமய இலக்கியம் மூலம் சமய உண்மையை விருத்தி செய்வர். தத்துவக் கருத்துக்களை அறிந்து அவற்றை உரியவாறு வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு : பெரியபுராணம் கூறும் திருக்கூட்டத்தாரின் சிறப்புக்களை அறிந்து அவர்களைப் போற்றுவோம்.**

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- சிவனடியார்களை சிவன் எனப் போற்றி வழிபாடு செய்வர்.
- சிவனடியார்களை மதித்து வாழ்வர்.
- சமய சமூகத் தொண்டு ஆற்ற முன் வருவர்.

பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- மாணவர்களிடம் சிவனடியார்களின் தோற்றப் பொலிவினை கேட்டு அறியுங்கள்.
- சிவனடியளார்களின் சிறப்பினைப்பற்றி கலந்துரையாடுங்கள்.
- சிவனடியாருக்கு செய்யும் தொண்டுகள் பற்றி மாணவர்களிடம் வினவி அறியுங்கள்.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- சிவனடியார்களின் பெருமை, தோற்றம், வழிபாடு என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.

**படி 3:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

☐ பெரிய புராணம் சேக்கிழாரால் பாடப்பட்டது.
☐ தேவாசிரியன் மண்டபம், நான்முகனும், இந்திரனும் திருமால் முதலிய தேவர்கள் நீங்காது நிறைந்து வாழ்வதற்கு உரிய இடமாக உள்ளது.
☐ இம் மண்டபத்தில் சிவனடியார்கள் சிவ சின்னங்களைத் தரிசித்துக் கொண்டும் பஞ்சாட்சர் மந்திரங்களை ஓதியவாறும் இருப்பர்.
☐ சிவபெருமான் மீது ஆழ்ந்த அன்புடையவர்கள்.
- உள்ளும் புறமும் தூய்மை ஊடையவர்கள்
☐ ஐம்பூதங்களும் நிலையில் கலங்கினாலும் இவர்கள் தம் நிலை கலங்காது இறைவன் திருவடிகளை தம் உள்ளத்தில் துதிப்பவர்கள்.
☐ ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் இயல்பினர்.

- இறைவனை வழிபாடு செய்வதனைத் தவிர வேறு எதுவும் வேண்டாதவர்கள்.
- தமது கடமை இறை தொண்டு ஆற்றுவது என்னும் கொள்கை உடையவர்கள்.
- இரக்கச் சிந்தனை உடைய சிவனடியார்களின் வீரம் சொல்லும் தரமன்று என்று சேக்கிழார் கூறுகின்றார்.அரும்பதவிளக்கம்.
  - மால் - திருமால்
  - திசைமுகன் - பிரம்மா
  - அரந்தை - துன்பம்
  - மாக - குற்றம்
  - புனிதர் - தூய்மையானவர்கள்
  - கேடு - குறைவது
  - ஆக்கம் - மிகுவது
  - திரு - செல்வம்
  - வீடு - முத்திப்பேறு
  - கண்டிகை - உருத்திராக்க மாலை

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 2.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்
- பெரியுபுரானம்

## படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் என்பதனை அறிவர்.
- பெரியபுராணத்திற்கு திருத்தொண்டர் புராணம் என்ற பெயர் உண்டு என்பதனைக் குறிப்பிடுவர்.
- சிவனடியார் தோற்றப்பொலிவினைக் கூறுவர்.
- சிவனடியார் பெருமைகளை எடுத்துககூறுவர்.
- சிவனடியாரை சிவன் எனப் போற்றி மதிப்பளிப்பர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

திருக்கூட்டத்தார் சிறப்பினை அடிப்படையாகக் கொண்டு வில்லுப்பாட்டைத் தயாரித்து வகுப்பில் நிகழ்த்திக்காட்டுக.அல்லது நாடகமாக நடித்துக் காட்டுக

(சிவனடியார் பெருமை, தோற்றப் பொலிவு, தொண்டர் சிற்ப்பு, சங்கம வழிபாட்டின் மூலம் சித்தியடைந்தோர் வரலாறு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு

திருக்கூட்டத்தார் சிறந்த பாடலை மேற்கோள் காட்டி வில்லுப்பாட்டினைத் தயாரிக்குக.)

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………………

  2……………………………………………………………………………………………

  3……………………………………………………………………………………………

  4……………………………………………………………………………………………

  5……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : திருக்கூட்டச் சிறப்பு பற்றிய விடயங்களை அறிந்து சிவனடியார்களுக்கு மதிப்பளிக்கும் பாங்கை வளர்த்துக் கொள்ள வழிகாட்டுங்கள்

**தேர்ச்சி 3.0 :** **பக்தி உணர்வு குறித்த விளக்கத்தை நாயன்மார் சரிதங்களினடாக உணர்ந்து கொள்வர். இறை நம்பிக்கையும் அன்புமே பக்தியின் அடிப்படை எனபதனைப் புரிந்து கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பெரியபுராணம் கூறும் நாயன்மார் வரலாறுமூலம் பக்தி நிலைகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பர். சமயவரலாறு கூறும் உண்மைப் பொருளை இனம்காண்பர்.

**செயற்பாடு :** **திலகவதியாரின் பக்தி நெறியைப் போற்றி வாழ்வில் கடைப்பிடிப்போம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

- திலகவதியார் இறைவன் மீது பக்தி கொண்டு இறை அருள் பெற்ற வரலாற்றினை அறிந்து இறைவனை பக்தியோடு வழிபடுவர்.
- **சமய சமூகத்**தொண்டில் இறை உணர்வுடன் ஈடுபடுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- இறைவன் மீது அன்புகொண்டு வழிபட்டு இறையருள் பெற்றோர் பெயர்களை மாணவர்களிடம் இருந்து கேட்டு அறியுங்கள்.
- அவர்கள் இறை வழிபாட்டினை மேற்கொண்ட முறைகளைக் கூறும்படி கேளுங்கள்.
- அவர்கள் செய்த சமய, சமூகப் பணிகளை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறி செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.

**படி 3:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- செயற்பாட்டினைக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் பிறந்த பெண் குழந்தை திலகவதியார்.
  - இவரது தம்பி மருள்நீக்கியார் ஆவார்.
  - திலகவதியாருக்கு கலிப்பகையார் என்பவரை நிச்சயம் செய்யப்பட்டிருந்த வேளை அவர் கோரில் வீரச்சுவர்க்கம் அடைந்தார்.
  - அக்கால வழக்கப்படி கணவனை இழந்த திலகவதியார் உடன்கட்டை ஏறமுற்பட்டபோது தாயையும் தந்தையையும் இழந்த மருள்நீக்கியார் தமக்கு யாரும் துணை இல்லை என்று தடுத்தார்.

- அக்கால உடன்கட்டை ஏறும் வழக்கத்தினை தன்தம்பிக்காக தவிர்த்து சிவன்மீது தீவிர பக்தி கொண்டு இறையருள் பெற்றவர். இதனை பெரியபுராணம் பின்வருமாறு கூறுகின்றது.

  "தம்பி உளராக வேண்டும் என வைத்ததயா
  உம்பருல கணையனரு நிலை விளக்க உயிர் தாங்கி
  அம்பொன் மணி நூல் தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
  இம்பர் மனைத் தவம் புரிந்து திலகவதியார் அருள்தாங்கி இருந்தார்"

- நாவுக்கராசர் சமண சமயத்தில் சேர்ந்து ஒழுகிய போது இறைவனை வேண்டி சூலை நோயைக் கொடுத்து சைவத்திற்கு மீட்ட பெருமை திலகவதியாருக்கு உண்டு.
- மதமாற்றத்தினை எதிர்த்தவர் என்றவகையில் திலகவதியாருக்கு சிறப்பிடம் உண்டு.
- நாவுக்கரசரை சமய சமூகப் பணிகளை ஆற்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கியவர். உழவராப்படை அளித்து தொண்டு செய்யப் பணித்தவர் திலகவதியார்.
- தூய வாழ்வு, சகோதரப் பாசம், மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிதல், சமயப்பற்று இறைநம்பிக்கையும் பக்தியும் கொண்டு வாழ்ந்து இறையருள் பெற்ற பெண் அடியார்.
- அவரது வாழ்வியல் பண்புகளைக் கடைப்பிடித்து நாமும் இறை நம்பிக்கையையும், பக்தியையும் வளர்த்து இறையருள் பெறுவோம்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 3.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, திலகவதியார் படம், பாடநூல்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- திலகவதியாரின் பெற்றோர் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- திலகவதியாருக்கும் நாவுக்கரசருக்கும் உள்ள தொடர்பினைக் கூறுவர்.
- திலகவதியார் ஆற்றிய சமய சமூகப் பணிகளை பட்டியல்படுத்துவர்.
- பக்தி நெறி வளர்ச்சியில் பெண்ணடியார்களைக் குறிப்பிடுவர்.

## செயற்பாட்டுப் பத்திரம

குழு 01

திலகவதியாருக்கு திருமணம் நிச்சயித்தலிலிருந்து உடன் கட்டை ஏறும்போது நாவுக்கரசர் தடுத்த பகுதிவரை அடிப்படையாகக் கொண்டு நாடகம் தயாரித்து வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்

குழு 02

திருநாவுக்கரசர் சமணசமயத்தில் சேர்ந்தது முதல் திலகவதியாரிடம் வந்து சைவசமயத்திற்கு மாறும் வரையுள்ள பகுதியை அடிப்படையாகக் கொண்டு நாடகம் தயாரித்து வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.

குறிப்பு

நாடகத்தில் கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் பக்தி உணர்வும் கருப்பொருள் விளக்கமும் அவதானிக்கப்படல் வேண்டும்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - நாயன்மார்களின் சேவைகளை அறியச் செய்து தங்களால் முடியுமான பொதுப் பனிகளில் ஈடுபட ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், சமயம், கலை என்பவற்றை பாதுகாத்து பங்கு கொள்ள ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 4** : சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணிப் போற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : ஆலய உற்சவக் கிரியைகளை இனங்கண்டு அவற்றின் உண்மைத்தத்துவங்களை விளக்குவர்.

**செயற்பாடு** : **மகோற்சவக் கிரியைகளை அறிவோம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள்** :

- ஆலயக் கிரியைகளின் முப்பெரும் பிரிவுகளையும் குறிப்பிடுவர்.
- நைமித்திய கிரியைகள் ஐந்தினைக் குறிப்பிடுவர்.
- மகோற்சவப் பொருளை எழுதிக்காட்டுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

படி 1:
- ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- திருக்கோயிலில் இடம்பெறும் மகோற்சவக் கிரியைகளின் படங்களை காட்சிப்படுத்தி அவை பற்றிக்கூற இடம் வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.
  - ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகளை நித்திய, நைமித்திய, காமிகக் கிரியைகள் என மூன்றாக வகைப்படுத்தலாம்
  - நைமித்திய கிரியைகள் வாரம், மாதம், வருடம், பலவருடம் என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.
  - நித்தியக் கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு ஒரு வருடத்திற்கொரு முறை நிகழும் கிரியையே மகோற்சவமாகும்.

**படி2**:
- மாணவர்களின் தொகைக்கு ஏற்ப குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய செயற்பாட்டுப் படிவம், ஏனைய பொருட்களை பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவுங்கள்

**படி3:**
- குழுக்கள் அறிக்கைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள். அதே குழுவினர் கருத்துக்களை கூற இடம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை கூற இடமளியுங்கள்.

**படி4:**
- பின்வரும் கருத்துக்களை மையமாகக்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- திருக்கோயிலின் வசதிக்கும் மரபிற்கும் ஏற்றவகையில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகள் எனவும் நிமித்தம் காரணமாக நிகழ்த்தப்படுவது நைமித்தியம் எனவும் பயன்கருதிச் செய்யப்படுவது காமிகம் எனவும் வகைப்படுத்தப்படுகின்றது.
- மகோற்சவம் என்பது மகா + உற்சவம் எனப் பிரிக்கப்பட்டு பெரிய உத்தமமான யாகம் எனப் பொருள்படுகின்றது.

- மகோற்சவமானது வருடந்தோறும் திருக்கோயில்களில் நிகழ்த்தப்பட்டு எமக்கு ஐந்தொழிலை நினைவூட்டுகின்றன.
- பஞ்சக் கிருத்தியக் கிரியைகளில்,
  1. கொடியேற்றம் படைத்தலையும்
  2. வாகனத்திருவிழா காத்தலையும்
  3. தேர்த்திருவிழா அழித்தலையும்
  4. தீர்த்தத்திருவிழா அருளலையும்
  5. மௌனோற்சவம் மறைத்தலையும் தத்துவப்பொருளாக உணர்த்தி நிற்கின்றன.
- இக்கிரியைகள் ஒவ்வொருவரும் தரிசிப்பதால் மனிதப்பிறப்பின் பயனை அடைய முடிகின்றது.

**தர உள்ளீடுகள்** :
- செயற்பாட்டுப் படிவம். (ஆகமம் சாராவழிபாடு)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா
- மகோற்சவக் கிரியையை விளக்கும் படங்கள்
- உபசாரப் பொருட்களின் படங்கள்

**படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஆலயக் கிரியைகளின் முப்பெரும் பிரவுகளையும் குறிப்பிடுவர்.
- நைமித்திய கிரியைகள் ஐந்தினைக் குறிப்பிடுவர்.
- மகோற்சவம் பொருளை எழுதிக்காட்டுவர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

### குழு 01

- திருக்கோயிலில் இடம் பெறும் முப்பெரும் கிரியைகளையும் எழுதுக.
  - நைமித்திய பூசை என்பதன் பொருளை எழுதுக.
  - மகோற்சவம் என்ற சொல்லின் பொருளை விளக்கிக் காட்டுக.
  - மகோற்சவக் கிரியை மூலம் வளர்க்கப்படும் விழுமியங்கள் இரண்டு எழுதுங்கள்.

### குழு 02

- 'அ' விற்குப் பொருத்தமானவற்றை 'ஆ' வில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை எழுதுக.

| அ | ஆ |
|---|---|
| 1. நைமித்தியக் கிரியை | 1. படைத்தல் |
| 2. கொடியேற்றம் | 2. அழித்தல் |
| 3. தேர்த்திருவிழா | 3. அருளல் |
| 4. நித்திய கிரியை | 4. மகோற்சவம் |
| 5. தீர்த்தத் திருவிழா | 5. உச்சிக்காலப் பூசை |

### குழு 03

- ஆலயங்களில் ஆண்கள் மேற்கொள்ளும் நமஸ்காரம் எது?
- பெண்கள் மேற்கொள்ளும் நமஸ்காரம் எது?

## குழு 04

சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுங்கள்

1. பயனை அவாவிச் செய்யப்படும் கிரியைகள் காமிகக் கிரியைகளாகும். (……)
2. நைமித்தியக் கிரியைகளில் திருக்கார்த்திகையும் ஒன்றாகும். (………..)
3. மகோற்சவக் கிரியைகளினால் கிரமசுத்தம், ஒற்றுமை என்பன ஏற்படுகின்றன. (….)
4. இரண்டாம் காலப் பூசை என்பது அர்த்தசாமப் பூசையாகும். (………..)
5. கும்பாபிசேகக் கிரியைகள் நைமித்திய கிரியையில் அடங்கும். (……….)

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………………
  2……………………………………………………………………………………………
  3……………………………………………………………………………………………
  4……………………………………………………………………………………………
  5……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - மகோற்சவ காலங்களில் புனிதம் பேணவும், மகோற்சவக் கிரியைகளில் பங்கு கொண்டு அங்கு நடைபெறும் கிரியைகளின் அர்த்தங்களை தெரிந்து அவற்றை வாழ்வில் பின்பற்ற வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 5.0 : சைவசமய குரவர்கள் சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்.**

**தேர்ச்சி மட்டம்** 5.1 : சமயகுரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறையை அறிந்து கூறுவர்.

**செயற்பாடு** : **நாயன்மார்களின் பக்தி வைராக்கியத்தைப் போற்றுவோம்**

**நேரம்** : 04 பாடவேளை

**கற்றல் பேறு** :

1. நாயன்மாரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வர்.
2. அவர்களின் அற்புதங்களை எடுத்துக்கூறுவர்.
3. அவர்கள் வழி இறைவழிபாட்டில் ஈடுபடுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி** 1:
- நாயன்மார்களைப் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களை எடுத்துக்கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
    - முதற்குரவர்கள் நால்வர்.
    - தேவார முதலிகள் மூவர்.
    - இறைவன் மீது உண்மை பக்தியுடன் ஒழுகியவர்கள்.
    - இறையருளினால் வாழ்வின் இடர்களைக் கடந்தவர்கள்.
    - மக்கள் மத்தியில் பக்தி உணர்வையும் ஆலய வழிபாட்டையும் முதன்மையாகக் கொண்டு சமயத்தை வளர்த்தவர்கள்.

**படி** 2:
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 5.1.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி** 3:
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சிறுநாடகம் ஒன்றினை ஆக்கி நடித்துக் காட்ட இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் நடித்த நாடகம் பற்றிய விமர்சனத்தைப் பொருத்தமான முறையில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:** - குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- சைவசமய மரபில் நாயன்மார்கள் பெறும் முக்கித்துவம்
- இறைவனின் அருளை முழுமையாய் பெற்றவர்கள்
- சைவசமயத்திற்காக தமது வாழ்க்கையை அரப்பணித்தவர்கள்
- திருக்கோயில் வழிபாட்டை வளர்த்தமை
- அற்புதங்கள் மூலம் சமயநம்பிக்கையையும் இறையருளையும் அடியவர்களுக்கு உணர்த்தியமை

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 5.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- நாயன்மார் வரலாறு
- நாடகப்பிரதி

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- நாயன்மார்களின் வரலாறுகளை அறிந்து கூறுவர்.
- இறைவனின் அருளால் அவர்கள் செய்த அற்புதங்களைப் போற்றுவர்.
- நான்மாரின் தளராத கடவுள் நம்பிக்கையை எடுத்துக் காட்டும் சம்பவங்களைக் கூறுவர்.
- நாயன்மார் காட்டிய வழியில் தமது சமய வாழ்வையும் செம்மைப்படுத்துவர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம் -1

(அ) ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து எழுதி நாடகமாக முன்வையுங்கள்.

**குழு 1**

திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து "தோடுடைய செவியன்…" என்னும் தேவாரம் பாடும்வரையான சம்பவங்களை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு 2**

திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றில் அவர் மீண்டும் சைவசமயத்தைத் தழுவுதல் வரையான சம்பவங்களை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு 3**

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானால் திருமணத்தின் போது ஆட்கொள்ளப்படும் வரையான நிகழ்ச்சிகளை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

### குழு 4

மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாற்றில் அவருக்காக சிவபொருமான் நரிகளை பரிகளாக்கிய சம்பவம் வரையிலான நிகழ்ச்சிகளை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம் -2

| சமயக்குரவர் நால்வர் | திருஞான சம்பந்தர் | திருநாவுக் கரசர் | சுந்தரமூர்த்தி நாயனார் | மாணிக்க வாசகர் |
|---|---|---|---|---|
| மறுபெயர்கள் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| பக்தி | | | | |
| உறவுமுறை | | | | |
| நின்ற நெறி | | | | |
| அடைந்த முத்தி | | | | |
| முக்தி அடைந்த தினம் | | | | |

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - நாயன்மார்களுக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்புகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையும் அவ்வாறான இறைதொடர்புகள் ஏற்பட பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்னதை தெரியப்படுத்துங்கள் அதில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், இறைவழிபாடுகளில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 5.0 :** **சமயப் பெரியார்கள் பற்றி அறிந்து அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்வர்**

**தேர்ச்சி மட்டம்** 5.2 : சந்தானகுரவர் வரலாறுகளை அறிந்து கூறுவர்.

**செயற்பாடு :** **சந்தானகுரவர் பற்றி அறிவோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

1. அகச்சந்தானகுரவர், புறச்சந்தானகுரவர்களின் பெயர்களைப் பட்டியற்படுத்துவர்.
2. சந்தானகுரவர்கள் சைவ தத்துவவளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை அறிந்து போற்றுவர்
3. சந்தானக்குரவர்களின் பணிகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- மாணவர்களிடம் சந்தானக்குரவர்களின் பெயர்களைக் கேட்டு அறியுங்கள்.
- அவற்றுள் அகச்சந்தானக்குரவர் புறச்சந்தானக் குரவர்களைத் தெரிவு செய்யும்படி கூறுங்கள்.
- புறச்சந்தான குரவர்கள் எழுதிய நூல்களைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- அவர்களுக்கிடையேயான குருசீட உறவுமுறைகள் பற்றி கேட்டு அறியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - அகச்சந்தானக்குரவர் பற்றிய சிறு விளக்கம்
  - புறச்சந்தானக்குரவர் பற்றிய சிறு விளக்கம்
  - குருசீட உறவுமுறைபற்றிய சிறு விளக்கம்

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.5.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்) குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடு களைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4 :**

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- சந்தானம் என்பது தொடர்ச்சியாக வருவது எனப் பொருள்படும் .
- அகச்சந்தானக்குரவர்கள் கைலாயத்தில் திருநந்தி தேவரிடமிருந்து உபதேசம் பெற்றவர்கள்.
- இவர்கள் திருநந்தி தேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதிமுனிவர் என குருசீட பாரம்பரியத்தில் வந்தவர்கள்.
- பரஞ்சோதிமுனிவர் தென்னாட்டிற்கு வந்த போது சுவேதவனப் பெருமானுக்கு மெய்கண்டார் (சத்தியம் - மெய், ஞானத்தரிசனம் - கண்டார்) என்ற தீட்சா நாமத்தினை வழங்கினார்.
- மெய்கண்டாரைத் தொடர்ந்து அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிச்சிவாச்சாரியார் என குரு சீட பரம்பரை தென்னாட்டில் உருவாகிற்று. இவர்கள் புறச்சந்தானக்குரவர்கள் என அழைக்கப்பட்டனர்.
- இவர்கள் சைவசித்தாந்த நூல்களை இயற்றியுள்ளார்.
- உமாபதிசிவாச்சாரியார் சித்தாந்த நூல்களோடு கோயிற்புராணம், சேக்கிழார் புராணம் திருமுறை கண்டபுராணம், திருப்பதிகக்கோவை போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 5.2.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- ஆகமங்கள் பற்றிக் கூறும் நூல்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சந்தானகுரவர்கள் என்பதன் விளக்கத்தை கூறுவர்.
- அகச்சந்தானகுரவர்கள், புறச்சந்தானக்குரவர்கள் என பட்டியலபடுத்திக் காட்டுவர்.
- சந்தானகுரவர் குருசீட உறவு முறைகளைக் கூறுவர்.
- புறச்சந்தானக்குரவர் இயற்றிய நூல்களைப் பட்டியற்படுத்துவர்.
- சந்தானகுரவர்களின் பணிகளை அறிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பார்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

குழு 1

- மெய்கண்டதேவர் அருணந்திசிவாச்சாரியாருக்கு குருவாக விளங்கிய வரலாற்றினைத் தொகுத்து எழுதுக.
- உமாபதிச் சிவாச்சரியார் மறைஞானசம்பந்தரை குருவாக்கிக்கொண்ட வரலாற்றினைத் தொகுத்து எழுதுக.

குழு 2

- அகச்சந்தானக்குரவர், புறச்சந்தானக்குரவர்களை அட்டவணைப்படுத்துக.
- புறச்சந்தானக்குரவர்களைக் குறிப்பிட்டு அவர்கள் எழுதிய நூல்களைப் பட்டியல்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - சந்தான குரவர்களின் பாடல்களை மனனம் செய்து அவற்றுக்கேற்ப பொருத்தமான செயல்களில் ஈடுபட ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்

**தேர்ச்சி 5.0 : சமயப் பெரியார்கள் பற்றி அறிந்து அவர்களைத் தம் வழிகாட்டிகளாகக் கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம்** 5.3 : சித்தர்கள், ஞானியர்கள் பற்றி அறிந்து கொள்வர்.

**செயற்பாடு : சித்தர்கள் பற்றி அறிவோம்**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

1. சித்தர்கள், ஞானிகள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- மாணவர் அறிந்த சித்தர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துங்கள்.
- சித்தர்களின் இயல்புகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சித்தர்களின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - ▪ நாயன்மார்களிலிருந்து வேறுபட்டவர்கள் சித்தர்கள் ஆவர்.
  - ▪ இலங்கையிலும் இந்தியாவிலும் பல சித்தர்கள் வாழ்ந்துள்ளனர்.

**படி 2:**
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - ☐ சித்தர்கள் மெய்யறிவு கைவரப்பெற்றவர்கள்.
  - ☐ சித்தர்கள் தெய்வீக ஆற்றலுடையவர்கள்.
  - ☐ தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் பல சித்தர்கள் வாழ்ந்துள்ளனர்.
  - ☐ அட்டாங்க யோகங்கள் மூலம் அட்டமா சித்திகளை கைவரப் பெற்றவர்கள்
  - ☐ சித்தர்கள் தமது அனுபவங்களைச் செயல்களாலும் வார்த்தைகளாலும் போதனைகளாலும் வெளிப்படுத்தி உள்ளனர்.

- சித்தர்களில் திருமூலரும் ஒருவர்.
- இவர் திருமந்திரம் என்ற அரிய நூலை உலகிற்கு அளித்துள்ளார்.
- கூடுவிட்டுகூடு பாயும் சித்தியைப் பெற்றமையால் இவர் மூலன் உடலில் புகுந்து மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார்.
- திருமந்திரம் தமிழ் ஆகமம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இந்நூல் சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதோடு மனித மேம்பாட்டிற்கான வழிகளையும் கூறுகின்றது.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 5.5.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா,
- "பன்னிரு சித்தர்கள்" நூல் சித்தர்களின் படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சித்தர்கள் மெய் அறிவு கைவரப் பெற்றவர்கள் என்பதனை அறிவர்.
- சித்தர்கள் தெய்வீக ஆற்றல் உடையவர்கள் என்பதைக் கூறுவர்.
- தமிழ்நாட்டுச் சித்தர்களையும் ஈழத்துச் சித்தர்களையும் இனங்காண்பர்.
- திருமூலர் வரலாற்றைக் கூறுவர்.
- திரமந்திரத்தின் சிறப்பினை அறிவர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

#### குழு 1

- திருமூலர் கூடுவிட்டு கூடுபாய்ந்த வரலாற்றுக் கதையை எழுதுக.
- திருமந்திரத்தின் சிறப்புக்கள் ஐந்து தருக.

#### குழு 2

- தமிழ்நாட்டுச் சித்தர் ஐவரையும் ஈழத்துச் சித்தர் ஐவரையும் குறிப்பிடுங்கள்.
- அட்டாங்க யோகத்தினையும் அட்ட சித்திகளையும் குறிப்பிட்டு விளக்குக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - சித்தத்தை சிவன்பால் செலுத்தியவர்கள் என்பதற்கு இணங்க எப்போதும் மனதை இறைவன் பக்கம் வைத்திருந்தால் எப்போதும் நன்மையே கிடைக்கும் என்பதை பிள்ளைகளுக்குக் கூறி இறை வழிபாட்டில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 5.0 : சமயப் பெரியார்கள் பற்றி அறிந்து அவர்களைத் தம் வழிகாட்டிகளாகக் கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம்** 5.4 : ஈழத்துச் சமய பெரியார்களையும் அவர்களின் பணிகளையும் அறிந்து கூறுவர்.

**செயற்பாடு : சுவாமி விபுலானந்தர் பணிகளை மதிப்போம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

1. சுவாமி விபுலானந்தர் அவர்களது சமூக, சமயப் பணிகளை அறிந்து கூறுவர்.
2. அவரது இலக்கியப் பணிகளை அறிந்து போற்றுவர்.
3. தம்மாலான சமய, சமூகப் பணிகளை செய்ய முன்வருவர்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி 1:** - இலங்கையில் வாழ்ந்த சமயத் தொண்டர்கள்,சீர்திருத்தவாதிகள் பற்றி மாணவர்கள் முன்னர் அறிந்து வைத்திருக்கும் விடயங்களைக் கூற இடமளியுங்கள்.

- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - தமது வாழ்வையே அர்ப்பணித்து சமயத்தை வளர்ப்பதற்கு ஈடுபடுபவர்கள் சமயத் தொண்டர்கள் ஆவர்.
  - இலங்கையில் சமய சீர் திருத்தவாதியாகவும் சைவசமயத் தொண்டர்களாகவும் பல பெரியோர் வாழ்ந்துள்ளனர்.
  - அவர்களில் ஒருவராக விபுலானந்தரும் காணப்பட்டார்.

**படி 2:** - மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள்வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.5.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

  (அ) இணைப்பு 1.4.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.

  (ஆ) டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா

**படி 3:** - குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களைள் அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4: -** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- சமூக சமய சீர்திருத்தங்களுடாக இந்து சமயத்தினை வளர்த்தவர்களுள் சுவாமி விபுலானந்தரும் ஓருவராவார்.
- வாழ்க்கை வரலாறு:
- தந்தை - சாமித்தம்பி
- தாய் - கண்ணம்மை
- பிறப்பு - 1892 ஆம் ஆண்டு
- பிறந்த இடம் - மட்டக்களப்பு காரைதீவு
- இளமைப் பெயர் - மயில்வாகனம்
- அவர் ஆற்றிய பணிகள் பல: அவற்றுள் சில:

**சமயப்பணி:**

- இராமகிருஷ்ண மிஷனில் ஆற்றிய பணிகள்(இவற்றைத் தனித்தனியே தேடிப் பெறவும்)

**சமூகப் பணி:**

- மக்களை ஆன்மீகத்தில ஈடுபட வைத்தமை
- கீழேத்தேயப் பண்பாட்டு பெருமைகளை உலகறியச் செய்தமை

**இலக்கியப் பணி:**

- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர், முத்தமிழ்ப்பணி
- யாழ்ப்பாணம் திராவிட பாஷா அபிவிருத்திச சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தமை, பண்டிதர்களை உருவாக்கியமை.

- ஆய்வுக் கட்டுரை, இலக்கியக் கட்டுரை எழுதி வெளியிட்டமை.
- தமிழில் விஞ்ஞான கலைச்சொல் ஆக்கத்திற்கு உழைத்தவர்.
- பாரதியாரின் பாடல்களை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர்.
- தமிழ்நாட்டு இசைக்கருவியாகிய 'யாழ்' பற்றிய விரிவான நூல் ஒன்று எழுதியமை (யாழ்நூல்)
- நாடகத்தின் இலக்கணமும் நாட்டியத்தின் இலக்கணமும் அடங்கிய 'மதங்க சூளாமணி' எழுதியவர்.

**கல்வி, கலைப்பணி:**

- பாடசாலைகள் நிறுவியமை
- ஆசிரியராகப் பணியாற்றியமை
- அதிபராகப் பணியாற்றியமை
- முகாமையாளராகப் பணியாற்றியமை
- கலைத்திட்ட உருவாக்கப் பணி (சங்கீதம்)
- சைவசமய பாடத்திட்டத்தை வகுத்தமை

## இந்துசமய மரபுகளைப் பேணியமை

**தர உள்ளீடுகள்:**
- இணைப்பு 5.4.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, விபுலானந்தர் படங்கள்
- விபுலானந்தரின் பனிகள் பற்றிய அட்டவனைகள்

## படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சுவாமி விபுலானந்தர் அவர்களது சமூக, சமயப் பணிகளை அறிந்து கூறுவர்
- சுவாமி விபுலானந்தர் அவர்களது சமூக, சமயப் பணிகளை அறிந்து கூறுவர்.
- தம்மாலான சமய, சமூகப் பணிகளை செய்ய முன்வருவர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

குழு 1

- சுவாமி விபுலானந்தரின் காலச் சூழலை சுருக்கமாகத் தருக.
- அவரது வாழ்க்கை சம்பந்தப்பட்ட தரவுகளைத் திரட்டுங்கள்.
- அந்தத்தரவுகளை மையமாகக்கொண்டு **குறுநாடகம்** ஒன்றினை உருவாக்குங்கள்.
- அதனை வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.

குழு 2

- சுவாமி விபுலானந்தரின் சமூகப் பணிகளைத் திரட்டுங்கள்.
- சுவாமி விபுலானந்தரின் சமயப் பணிகளைத் திரட்டுங்கள்.
- அந்தத்தரவுகளை மையமாகக்கொண்டு **வில்லிசை** ஒன்றினை உருவாக்குங்கள்.
- அதனை வகுப்பறையில் அரங்கேற்றுங்கள்

குழு 3

- சுவாமி விபுலானந்தரின் இலக்கியப் பணிகளைத் திரட்டுங்கள்.
- சுவாமி விபுலானந்தரின் கல்வி, கலைப் பணிகளைத் திரட்டுங்கள்.
- அந்தத்தரவுகளை மையமாகக்கொண்டு **துண்டுப்பிரசுரம்** ஒன்றினை உருவாக்குங்கள்.
- அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்
  - பின்னர் கீழ்வரும் இடங்களிலும் காட்சிப்படுத்துங்கள்.
  - ○ வகுப்பறைக் காட்சிப்பலகை
  - ○ பாடசாலைக் காட்சிப்பலகை.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - சுவாமி விபுலானந்தரின் சமயப் பனிகளை அறிந்து அவர் மூலமாக நாம் பெற்றுக் கொன்ட அறிவை வைத்து மேலதிக தகவல்களை ஆராய்ந்து அவரின் பொதுச் சேவைகளை சமுதாயத்தில் தம்மால் முடியுமான அளவுக்கு எடுத்துச் செல்ல ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், அவர் தொடர்பான கலையம்மங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 6.0 : சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கித் தெளிவு பெறுவர்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** முப்பொருள்கள் இயல்பை நூல்கள் வாயிலாக அறிந்து விளக்குவர்.

**செயற்பாடு : சைவசித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங்களை அறிந்து விளக்கம் பெறுவோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**
- சைவசித்தாந்த கோட்பாட்டின் அடிப்படை அம்சங்களை அறிவர்.
- பதி, பசு, பாசக் கோட்பாட்டினை அறிந்து ஆன்ம விடுதலைக்கான செயல்களில் ஈடுபடுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவையென மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.
- கடவுளின் இயல்பு பற்றி கலந்துரையாடுங்கள்.
- ஆன்மாவின் தன்மை பற்றி வினாவி அறியுங்கள்.
- பாசம் பற்றி மாணவர்கள் அறிந்தவற்றை கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் குறிப்பிடுங்கள்

**படி 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- ஆலோசனை வழிகாட்டலை வழங்குங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - சைவசித்தாந்தத்தின் முதல் நூல் சிவஞானபோதம்.
  - சார்புநூல் சிவஞான சித்தியார்.
  - சித்தாந்த அட்டகம் (உமாபதிசிவாச்சாரியார் எழுதிய எட்டு நூல்கள்)
  - சைவசித்தாந்தம் பதி, பசு. பாசம் என்னும் மூன்று பொருட்களும் நிலையானவை எனக் கூறுகின்றது.
  - முப்பொருள் உண்மையை காட்சியளவை (பிரத்தியட்சம்), கருதலளவை (அனுமானம்), நூலளவை (ஆப்தவாக்கியம்) என்னும் மூன்று பிரமாணங்கள் மூலம் நிறுவுகின்றனர்.
  - “பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில் பதியினைப் போல் பசுபாசம் அநாதி”
  - பதிக்கு இறைவன், கடவுள், சத்து, தலைவன் என்ற பல பெயர்கள் உண்டு.

;

- அறிவிக்காமல் அறியும் தன்மையினால் சத்து என அழைக்கப்படுகின்றது.
- இறைவன் ஆன்மாக்கள் முத்தியடைய வேண்டும் என்ற பெருங் கருணையினால் உலகைப் படைத்தான் என சித்தாந்த நூல்கள் கூறும்.
- பதிக்கு சொரூப இலக்கணம், தடத்த இலக்கணம் என இரு நிலைகள் கூறப்படுகின்றது.
- அருவம் (சிவம், சக்தி, நாதம், விந்து) உருவம் (பிரமா,விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன்) அருவுருவம் (சதாசிவம்) என்னும் மூவகைத் திருமேனிகளை பதி கொண்டது.
- இறைவனுக்கு எண் குணங்கள் கூறப்படுகின்றது.
- ஆன்மாமீது கொண்ட கருணையினால் இறைவன் ஐந் தொழிலைப் புரிகின்றார்.
- பசு, ஆன்மா, சதசத்து, உயிர் எனவும் அழைக்கப்படுகின்றது.
- ஆன்மாக்கள் பல.
    - ஆன்மாக்கள் அறிவித்தால் அறியும்.
    - எப்பொருளைச் சார்கின்றதோ அதன் வண்ணமாக இருக்கும். (சதசத்து)
    - மும்மலங்களினால் பந்திக்கப்பட்டது. (பசு- கட்டுண்டது எனப் பொருள்படும்)
    - மூவகை ஆன்மாக்கள் பற்றி சித்தாந்தம் குறிப்பிடும்.
    - விஞ்ஞானகலர் - ஆணவம் மட்டும் உடையவர்.
      பிரளயாகலர் - ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையும் உடையவர்கள்.
      சகலர் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை உடையவர்கள்.
- ஆன்மா மும்மலங்களிலிருந்து விடுதலை அடையும் போது முத்தி கிடைக்கும்.
- முத்தியடைய வேண்டுமாயின் நல்வினையையும் தீவினையையும் சமமாக மதித்தல் வேண்டும். இது இருவினையொப்பு எனப்படும். அப்போது திருவருட்சக்தியின் அருட்பார்வை ஆன்மாமீது பதியும். இது சத்தினிபாதம் எனப்படும். அந்நேரம் கன்மம், மாயை மலம் நீங்க ஆணவ மலம் வலிமை குன்றும். இது மல பரிபாகம் எனப்படும். அதனைத் தொடர்ந்து ஆன்மா இறைவன் தாளை அடைந்து பேரின்பத்தில் திளைக்கும் (தாடலை)

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 6.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, சைவசித்தாந்த நூல்கள்.

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களை அறிவர்.
- பதி, பசு. பாசம் என்னும் மூன்று பொருட்களும் உண்மையானவை எனக் கூறுவர்.
- சைவசித்தாந்தம் கூறும் அளவைப் பிரமாணங்களை அறிவர்.
- பதியின் இருநிலைகளைக் கூறுவர்.
- ஆன்மாவின் இயல்புகளை விளக்குவர்.
- மூவகை ஆன்மா பற்றிக் கூறுவர்.
- இருவினையொப்பு, சத்தினிபாதம், மலபரிபாகம் ஆகியவற்றின் பொருளை விளக்குவர்.
- ஆன்மாவின் முத்திபற்றிக் கூறுவர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.

(அ) சைவசித்தாந்தத்தின் முதல் நூல் ……………………………… வழிநூல் ……………………………… சார்புநூல் ……………………………… ஆகும்.

(ஆ) சைவசித்தாந்தம் கூறும் அளவைப் பிரமாணங்கள் ………………….., ………………………., …………………………

(இ) அருவத்திருமேனிகளாவன ……………………, …………………, ……………………, ………………….

(ஈ) ஆன்மாவிற்கு வழங்கும் மறுபெயர்கள். ………………….., ………………….., ……………………

(உ) சைவசித்தாந்தம் கூறும் மூவகை ஆன்மாக்கள் ……………………., ………………………, ………………………………

பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

| | | |
|---|---|---|
| A பதி, பசு, பாசம் | G சார்ந்ததன் வண்ணமாக உள்ளது | M மும்மலங்கள் |
| B தாடலை | H ஆன்மாக்களைப் பந்திதப்பது | N ஆன்மா |
| C சொரூபநிலை | I அநாதியானவை | O இறைவன் |
| D சதசத்து | J குணங்குறிகள் அற்றநிலை | P இறையருள் |
| E ஆணவம், கன்மம், மாயை | K ஆன்மா அடையும் முத்தி | Q முப்பொருள் |

(அ) பதியின் தன்மையோடு தொடர்புடைய தொகுதி
(1). A, H, O (2). C, J, O (3). C, J, N (4). E, I, Q

(ஆ) பசு பற்றிய கருத்துக்களுடன் தொடர்புடைய தொகுதி
(1). D, G, N (2). E, K, N (3). D, G, O (4). A, J, Q

(இ) பாசம் பற்றிய கருத்துக்களோடு தொடர்புடைய தொகுதி
(1). B, K, N (2). E,J, Q (3). D, J, O (4). E, H, M

(ஈ) சைவ சித்தாந்தம் கூறும் பொருள்களோடு தொடர்புடைய தொகுதி
(1). A, I, M (2). E, H, M (3). A, I, Q (4). A, J, Q

(உ) ஆன்ம விடுதலை பற்றிய கருத்துக்களைக் கொண்ட தொகுதி.
(1). B, K, P (2). B, K, Q (3). D, G, P (4). E, G, O

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - பதி, பசு, பாசம் எனும் முப் பொருள்களும் உன்மையானவை என்றும் அவற்றின் இயல்புகள் பற்றியும் உயிர் இறைவனை அடைந்து கொள்ளும் வழிகளை கூறி அவற்றில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 6.0 :** **சைவ சித்தாந்தக் கோடபாடுகளை விளங்கித் தெளிவு பெறுவர்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** ஒதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடற்பரப்பு மூலம் சித்தாந்தக் கருத்துக்களை அறிந்துக் கொள்வர். புாடல்களை மனனம் செய்து வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** **திருவருட்பயன் பாடல்களினூடாக பதியின் மேலான தன்மையை அறிந்து போற்றுவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :** - பதியின் மேலான தன்மையை அறிந்து பக்தியோடு வழிபாடு செய்வர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- சைவசித்தாந்த நூல்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சைவசித்தாந்த நூலாசிரியர்கள் பெயர்களைக் கேட்டு அறியுங்கள்.
- கடவுளின் இயல்புகள், குணங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- திருவருட்பயன் பற்றிய கருத்துக்களைக் கேட்டு அறியுங்கள்.

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள். (பதி பற்றிய கருத்துக்கள் கொண்ட பகுதி)

**படி 3**
- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- குழுக்களை சரியான முறையில் நெறிப்படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுத் தலைவரும் தமது கருத்துக்களை முன்வைக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிற்கு கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள் பதின்னான்கில் திருவருட்பயனும் ஒன்று.
  - திருவருட்பயன் உமாபதி சிவாச்சாரியாரினால் இயற்றப்பட்டது.
  - ஒரு காப்புச் செய்யுளும் பத்து அதிகாரங்களும் உள்ளடக்கி 101 பாடல்களைக் கொண்டது.
  - ஒவ்வொரு அதிகாரமும் பத்துப் பாடல்களை உடையது.
  - காப்புச் செய்யுள் விநாயகர் துதியுடன் ஆரம்பமாகின்றுது.
  - முதலாவது அதிகாரம் பதிமுது நிலையாகும்.
  - இவ் அதிகாரத்தில் பதியின் இயல்புகள் பிள்வருமாறு கூறப்பட்டுள்ளது.

    (அ) ‘அ’கர ஒலி எழுத்துக்களுக்கு உயிராக இருப்பது போல இறைவன் உயிருக்கு உயிராய் இருக்கின்றான்.
    (ஆ) சக்தியுடன் பிரிவின்றி கலந்திருப்பவர்.
    (இ) எவற்றுடனும் ஒப்பிட்டுக் கூறமுடியாதவர்.
    (ஈ) ஐந்தொழில் புரிபவர்
    (உ) மூவகைத் திருமேனிகளைக் கொண்டவர்.
    (ஊ) இறைவனே பரம்பொருளாவர்.
    (எ) அடியவர்க்கு எளியவர்.
    (ஏ) ஒன்றாயும் உடனாயும் இருப்பவர்.
    (ஐ) விருப்பு பெறுப்பு அற்றவர்.
    (ஒ) பிறவிப் பிணியைத் தீர்ப்பவர்.

**தர உள்ளீடுகள் :**
- இணைப்பு 6.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவ சித்தாந்த சாஸ்திரநூல்களில் திருவருட்பயனும் அடங்கும் என்பதனை அறிவர்.
- திருவருட்பயன் நூலாசிரியர் உமாபதி சிவாச்சாரியார் என்பதனைக் கூறுவர்.
- திருவருட்பயன் காப்புச் செய்யுள் விநாயகருக்குரியது என்பதனைக் கூறுவர்.
- பதிமுது நிலை என்னும் அதிகாரத்தில் உள்ள பதியின் இயல்புகளைப் பட்டியல்படுத்துவர்.

**இணைப்பு 6.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

திருவருட்பயன் பதிமுது நிலை என்ற அதிகாரத்தினை அடிப்படையாகக்கொண்டு செயற்படுங்கள்.

- திருவருட்பயன் நூலாசிரியர் யார்?
- திருவருட்பயன் எத்தனை அதிகாரங்களை உடையது?
- திருவருட்பயன் காப்புச் செய்யுள் எத் தெய்வத்ததினைப் போற்றிப்பாடுகின்றது?
  பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க. அதிகாரம் - பதிமுதுநிலை

| பாடல் எண் | மையக்கருத்து |
|---|---|
| 1 | ………………………………………………………..…….. |
| 2 | ………………………………………………………..…….. |
| 3 | ……………………………………………………...……….. |
| 4 | …………………………………………………...………….. |
| 5 | ………………………………………………...…………….. |
| 6 | ……………………………………………………………….. |
| 7 | ……………………………………………………………….. |
| 8 | ……………………………………………………………….. |
| 9 | ……………………………………………………………….. |
| 10 | ……………………………………………………………….. |

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியறப்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………………

  2……………………………………………………………………………………………

  3……………………………………………………………………………………………

  4……………………………………………………………………………………………

  5……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - திருவருட் பயன் பாடல்களை மனனம் செய்ய வழிப்படுத்துங்கள். அதில் கூறப்படும் கருத்துக்களுக்கு ஏற்ப பிள்ளைகளை வாழ்க்கையில் பின்பற்றப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 6.0 : சைவ சித்தாந்தக் கோடபாடுகளை விளங்கித் தெளிவு பெறுவர்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** ஓதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடற்பரப்பு மூலம் சித்தாந்தக் கருத்துக்களை அறிந்துக் கொள்வர். பாடல்களை மனனம் செய்து வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு : உயிரவை நிலை பற்றி அறிவோம். பாடல்களை மனனம் செய்வோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

- ஆன்மாவின் இயல்பு பற்றி அறிந்து ஆன்ம ஈடேற்றத்திற்கான செயலில் ஈடுபடுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- மாணவர்கள் ஆன்மா பற்றி அறிந்த விடயங்களைக்கலந்துரையாடுங்கள்.
- சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மாவின் இயல்புகள் பற்றி வினாவி அறியுங்கள்.
- ஆன்மாக்கள் செய்யும் வினைகள் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- பிறவியின் நோக்கம் பற்றி கலந்துரையாடுங்கள்

**படி 2:**
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.
- திருவுளச் சீட்டின் மூலம் நான்கு பாடல்களை வழங்குங்கள்.

**படி 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- பாவோதல் முறையில் செயற்படுவதற்கு ஆலோசனை வழங்குங்கள்.

**படி 4:**
- கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஒவ்வொரு குழுவும் பாவோதல் செய்ய வேண்டும்.
- தெரிவு செய்த பாடல்களை ஒல்வொரு குழுவும் முன்வந்து ஓதுதல் வேண்டும்.
- பாவோதல் முடிவடைநடத பின் பின்வரும் தகவல்களை வழங்குங்கள்.
  - முப்பொருளில் ஒன்று பசு. அறிவித்தல் அறியும்.
  - ஆன்மாக்கள் எண்ணில்லாதவை.
  - சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகை ஆன்மாக்கள் உண்டு.
  - விஞ்ஞானகலர், பிரளயாகலர் தம்மை மலம் பீடித்துள்ளமை அறிவர். சுகலர் அறியமாட்டார்கள்.
  - சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவை.
  - ஆன்மா சார்ந்ததன் வண்ணமாக இருப்பதனால் சதசத்து என அழைக்கப்படுகின்றது.
  - ஆணவத்தோடு சேர்ந்திருக்கும் பொழுது உலகத்தையும் உலக இன்பத்தையும் மெய்யென எண்ணும்.
  - திருவருளை சார்ந்து இருக்கும் போது மெய்யறிவு கிட்டும்.

தர உள்ளீடுகள் : - இணைப்பு 6.3.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்,

## படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்
பாவோதலை மதிப்பீடு செய்து புள்ளி வழங்குங்கள்.

- பசுவின் இயல்புகள் பற்றி அறிவர்.
- சைவ சித்தாந்தக் கருத்துக்களை கூறும் போது திருவருட் பாடல்களை மேற்கோள் காட்டுவர்.
- ஆன்ம ஈடேற்றத்திற்கான செயல்களில் ஈடுபடுவர்.
- பாடல்களை மனனம் செயயுந்திறனை வளர்த்துக் கொள்வர்.
- பொருள் விளக்கம் கூறுவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

உமது குழுவிற்கு வழங்கப்பட்ட பாடல்களை பாவோதல் முறையில் பாடவேண்டும்.

குழுச் செயற்படும் முறை:

- ○ பாடலைக் கூறுதல்
- ○ சந்தர்ப்பம் கூறுதல்
- ○ பொருள் கூறுதல்
- ○ இசையுடன் ஓதுதல்

என்ற வகையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். (தேவை ஏற்படின் ஆசிரியர் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்)

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

1……………………………………………………………………………………………

2……………………………………………………………………………………………

3……………………………………………………………………………………………

4……………………………………………………………………………………………

5……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - ஆன்ம ஈடேற்றத்திற்கான செயல்களில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள் அதில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், அதற்கான கலையம்மங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 6.0 : சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கித் தெளிவு பெறுவர்.**

**தேர்ச்சி மட்டம்** 6.2 : ஓதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாட்ப்பரப்பு மூலம் சித்தாந்தக்கருததுக்களை அறிந்து கொள்வர். பாடல்களை மனனம் செய்து வெளிப்படுத்துவர்.

செயற்பாடு : **ஆணவ மலத்தின் இயல்புகளை அறிந்து அதன் வலிமை குறைக்க முயற்சிப்போம்.**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு** :

- ஆணவத்தின் இயல்புகளை அறிவர்.
- ஆணவ வலிமை கெடுத்தற்கான வழிகளை மேற்கொள்வர்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி** 1:

- மும்மலங்கள் பற்றி மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.
- ஆணவத்தின் இயல்புகள் பற்றி கூறும்படி கேளுங்கள்.
- ஆணவத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி** 2:

- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- நியதிகளைக் குறிப்பிடுங்கள்

**படி** 3 :

- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- எல்லா மாணவர்களும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானியுங்கள்.
- வேண்டியவிடத்து ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி** 4 :

- ஒவ்வொரு குழுக்களும் தமது அறிக்கையை முன்வைக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்களாகும்.
  - ஆணவம் இருளைவிடக் கொடியது.
  - ஆன்மாவோடு அனாதியாக உள்ளமையால் சகசமலம், மூலமலம் எனவும் அழைக்கப்படுகின்றது.
  - மாயை ஆணவத்தை வலி கெடச் செய்யும்.
  - திருவருள் வரும்வரை மாயை விளக்குப் போல் துணைநிற்கும்.
  - ஆணவத்திற்குப் பல குணங்கள் உண்டு.

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 6.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, சைவசித்தாந்த நூல்கள், பாடநூல்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவசித்தாந்தம் கூறும் மூன்றாவது பொருள் பாசம் என்பதனை அறிவர்.
- ஆணவம், கன்மம் மாயை என்பவற்றில் ஆணவம் ஆன்மாவோடு அனாதியாய் உள்ளது என்பதனை அறிவர்.
- ஆணவத்திற்கு சகசமலம்மூலமலம் என்ற பெயர்கள் உண்டு என்பதனைக் கூறுவர்.
- ஆணவம் இருளை விடக் கொடியது என்பதனை விளக்குவர்.
- மாயை ஆணவத்தின் வலி கெடச்செய்யும் என்பதனை விளக்குவர்.
- ஆன்மாவிற்கு திருவருள் வரும் வரை விளக்குபோல் மாயை துணைநிற்கும் என்பதனைக் கூறுவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

ஆணவ மலம் பற்றி சைவசித்தாந்த நூல்களில்இருந்து ஆதாரம் காட்டி தகவல் சேகரித்து தொகுத்து கட்டுரை எழுதுக. அல்லது ஆணவ மலம் பற்றிய உடனடிப் பேச்சொன்றை நிகழ்த்துக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………

  2……………………………………………………………………………………

  3……………………………………………………………………………………

  4……………………………………………………………………………………

  5……………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : -
  ஆணவம் பற்றிய கருத்துக்களை அறிந்து அவற்றின் வலி குறையச் செய்யும் செயற்பாடுகளில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், அதற்கான கலையம்சங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 6.0 :** **சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கித் தெளிவு பெறுவர்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** ஓதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடப்பரப்பு மூலம் சித்தாந்தக கருத்துக்களை அறிந்து கொள்வர். பாடல்களை மனனம் செய்து வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** **திருவருளின் தன்மையை அறிவோம். ஆன்மா ஞானம் பெறுவதற்கு ஞான வடிவமாகிய குரு தேவை என்பதனை அறிவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- திருவருளின் பெருமையை அறிவர்.
- அதனை நாடி செயற்படுவர்.
- திருவருளைப் பெற ஞானகுரு அவசியம் என்பதனை உணர்ந்து குருவை நாடுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**

- இறைவனின் அருள்திறத்தினை மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.
- குருவின்றி வித்தை கற்க முடியாது என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி 2:**

- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- நியதிகளைக் குறிப்பிடுங்கள்

**படி 3:**

- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- எல்லா மாணவர்களும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானியுங்கள்.
- வேண்டியவிடத்து ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி 4:**

- ஒவ்வொரு குழுக்களும் தமது அறிக்கையை முன்வைக்க இடம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிக்கு கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - திருவருளுக்கு மேலான பொருள் இல்லை.
  - திருவருள் ஆணவத்தின் வலிமை குறைந்து ஆன்மாவிற்கு அருளைக் கொடுக்கின்றது.
  - நிமித்தக் காரணமாக விளங்குவது திருவருள்.
  - திருவருள் இருந்தும் அறியாமையினால் ஆன்ம உலகத்துன்பத்தில் சுழலுகின்றது.
  - திருவருளை அறியாதவர் தாமேதமக்கு ஆதாரம் எனக் கருதுவர்.
  - மன அடக்கத்துடன் ஞான நூல்களைக் கற்க வேண்டும்.
  - குரு வடிவாக வருவது திருவருளே ஆகும்.
  - திருவருளே ஆணவத்தினை போக்கவல்லது.
  - குருவை சீடனே அறிவான்.
  - பக்குவமில்லாதவர்கள் குருவை அறியமுடியாது.
  - ஞான நூல்களை ஞானாசிரியர் மூலமே கற்க வேண்டும்.
  - விஞ்ஞானகலருக்கு சிவபெருமான் அவரது அறிவிலே நின்று அருள்கொடுப்பான்.
  - பிரளயாகலருக்கு கவிகளைப் போல முன்னிலையாக நின்று அருள் கொடுப்பார்.
  - சகலருக்கு குருவடிவாக வந்து அருள் கொடுப்பார்.
  - சிவனே குருவாக வந்து திருவருள் கொடுப்பான்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 6.3.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- திருவருள் மேலானது எனக் கூறுவர்.
- ஆணவத்தின் வலிமையைக் குறைத்து ஆன்மாக்களுக்கு அருளைக் கொடுப்பது திருவருள் எனக் கூறுவர்.
- மன அடக்கத்துடன் ஞான நூலைக் கற்க வேண்டும் என்பதனை அறிவர்.
- சிவனே குருவாக வந்து திருவருள் புரிவான் என்பதனை அறிவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

திருவருட் பயன் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு,

(அ) திருவருளின் இயல்பு
(ஆ) குருநாதரின் இயல்புகள் என்பவற்றினை உரைச்சித்திரமாக தொகுத்துக் காட்டுக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.…………………………………………………………………………………………

  2.…………………………………………………………………………………………

  3.…………………………………………………………………………………………

  4.…………………………………………………………………………………………

  5.…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - பிள்ளைகளிடம் மன அடக்கத்துடன் கூடிய கதைகளை கூறுங்கள் மன அடக்கத்துடன் வாழப் பழக்குங்கள். குருவின் ஆசிர்வாதம் எப்போதும் கிடைக்க வேண்டுமென்பதை வலியுறுத்துங்கள் குரு வழிபாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், மன அடக்கம் தொடர்பான கலையம்சங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 6.0** : **சைவ சித்தாந்தக் கோடபாடுகளை விளங்கித் தெளிவு பெறுவர்.**

**தேர்ச்சி மட்டம்** 6.3 : ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்கள் பற்றிய அறிவைப் பெற்று அதனை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு** : **குரு, லிங்க, சங்கம வழிபாடு பற்றி அறிவோம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- குரு, லிங்க, சங்கம வழிபாட்டினை தம் வாழ்வில் கைக்கொள்வர்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி 1: -** ஆசிரியர்களை மதித்தல், அவர்களுக்கு உற்ற இடத்தில் உதவுதல் போன்ற பண்புகளைக் கூறும் அடிப்படையில் மாணவரைக் கலந்துரையாட நெறிப்படுத்துங்கள்.

- இறைவனை உலகியல் வாழ்வினூடாகக் கண்டு அனுபவிக்கலாம்.
- ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்களில் குரு வழிபாடு, லிங்க வழிபாடு, சங்கம வழிபாடு என்பன முக்கியமானவை
- இறையருளைக் காண ஏற்ற இலகுவான வழி முறைகளாக குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் காணப்படுகின்றன.

**படி 2: -** வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- உவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3: -** ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்கசந்தர்ப்பம் வழங்குங்கள்.

- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

**படி 4: -** மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞானத்தை அருளுபவர் குரு ஆவார்.
- இறைவனே குருவாக வந்து அருள் புரிவார்.
- ஆன்மீகத்துறையில் சந்தேகத்தைப் போக்குபவர்.
- குருவை உள்ளன்போடு வழிபட வேண்டும்.
- குரு வழிபாட்டால் வீடுபேறடைந்தவர்கள் பலர் உள்ளனர்.
- பெரியபுராணத்தில் பன்னிருவர் குரு வழிபாட்டால் முத்தியடைந்தவர்களாகக் கூறப்படுகின்றனர்.
  - சுந்தரமூர்ரதிநாயனார், திருநாவுக்கரசு நாயனார், அப்பூதியடிகள், திருமூலர், சோமாசிமாறநாயனார், குலச்சிறை நாயனார், பெருமிழலைக்குறும்ப நாயனார், திருஞானசம்பந்த மூரத்தி நாயனார், கணநாதநாயனார், நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்
- இலிங்கம் என்பது இறைவனின் அடையாளமாகும்.
- இலிங்கங்கள் இரு வகைப்படும்.
  - பரார்த்தலிங்கம் அல்லது தாவரலிங்கம்
  - ஆன்மார்த்த லிங்கம் அல்லது இட்டலிங்கம்
- இலிங்க வழிபாட்டால் முத்தியடைந்தவர்களாக பெரியபுராணத்தில் 31 பேர் கூறப்படுகின்றனர்.அவர்களுள் சிலர். எறிபத்தநாயனார், கண்ணப்பநாயனார், குஙகுலியகலய நாயனார், சாக்கியநயனார், சண்டேஸ்வரர், பூசலார், சேரமான்பெருமான் நாயனர்.
- சிவனடியார் வழிபாடு சங்கம வழிபாடு எனப்படும்.
- சிவனடியார்கள் சிவபெருமானிடம் மெய்யன்பு உடையவர்கள்.
- சிவபெருமானுக்கு தொண்டு புரிபவர்கள்.
- சிவனடியார்கள் சிவனுக்கு ஒப்பானவர்களாகக் கருதப்படுகின்றனர்.
- சங்கம வழிபாட்டால் மத்தியடைந்தவர்களாக பெரியபுராணம் 20 பேரைக் குறிப்பிடுகின்றது. அவர்களுள் சிலர்: மெய்ப்பொருள் நாயனார், அமர்நீதிநாயனார், காரைக்காலம்மையார், சிறுதொண்டநாயனார், திருக்குறிப்புத்தொண்ட நாயனார், விறண்மிண்ட நாயனார், ஏனாதிநாத நாயனார்.
- சங்கம வழிபாட்டின் மூலம் பெறும் பயன்கள்:
  - கீழ்த்தர எண்ணங்களை அகற்றி உயர்ந்த எண்ணங்களை ஏற்படுத்தும்.
  - உலகப்பற்றை நீக்கி தெய்வப்பற்றை வளர்க்கும்
  - உள்ளத்தைத் தூய்மைப் படுத்தும்
  - பக்தியையும் வைராக்கியத்தையும் வளர்க்கும்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 6.3.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- இறைவனை அடைவதற்கான மார்க்கங்கள் மூன்றைக் குறிப்பிடுவர்.
- குரு, லிங்க, சங்கம வழிபாட்டின் மூலம் முத்தியடைந்த நாயன்மார்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துவர்.
- குரு வழிபாட்டின் முக்கியத்துவத்தையுணர்ந்து குரு பூசைத்தினங்களில் கூட்டாகச் செயற்படுவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

பத்திரம் 01

- குரு என்பதன் பொருள் யாது?
- குருவை வழிபட்டு முத்தியடைந்தோரில் ஐவரின் பெயர் தருக.
- குரு வழிபாட்டின் சிறப்பு யாது?

பத்திரம் 02

- லிங்கம் என்பதன் பொருள் யாது?
- லிங்கத்தின் வகைகள் எவை?
- லிங்க வழிபாட்டை மேற்கொண்டோரில் ஐவரின் பெயர் தருக.

பத்திரம் 03

- சங்கமம் என்பதன் பொருள் யாது?
- சங்கம வழிபாட்டினால் முத்தியடைந்தோரில் ஐவரின் பெயர் தருக.
- சங்கம வழிபாட்டின் சிறப்பு யாது?

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1………………………………………………………………………………………

  2………………………………………………………………………………………

  3………………………………………………………………………………………

  4………………………………………………………………………………………

  5………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : -
  குரு வழிபாட்டின் முக்கியத்துவத்தையுணர்ந்து குரு பூசைத்தினங்களில் குருவை உள்ளன்போடு வழிபட வேண்டும் அது போன்று சிவனடியார்களை அன்போடு உபசரிக்க பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள் அவற்றில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், அதில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 7.0 : நாட்டார் சமய வழிபாடுகளையும் நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம்7.1 :** நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகளின் சிறப்பினைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு : நாட்டார் தெய்வமான திரௌபதியம்மன், வைரவர் பற்றி அறிவோம்.**

**நேரம் :** 02 பாடவேளை

**கற்றல் பேறு :**

- திரொபதியம்மன் சடங்கு பற்றி அறிவர்.
- வைரவர் சடங்கு பற்றி அறிவர்.
- நாட்டார் தெய்வங்களைத் தமது வாழ்வில் போற்றி வழிபாடு செய்வர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**

- ஆகம முறைக்குட்பட்ட கிரியைகள், ஆகம முறைக்குட்படாத கிரியைகள் என இரு வகை உள்ளன.
- ஆகம முறைக்குட்படாத கிரியைகள் சடங்குகள் எனப்படுகின்றன.
- ஆகம முறைக்குட்படாத சடங்குகளிற்குரிய தெய்வங்கள் நாட்டார்த் தெய்வங்கள் ஆகும்.
- நாட்டார் தெய்வங்கள், நாட்டார் சடங்குகள் என்பவை பற்றி மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டு அவர்களின் விடைகளினூடாக கலந்துரையாடலை மேற்கொள்ளல்.

**படி 2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3:**

- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

**படி 4 :** மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- கிராமியப் பெண் தெய்வ வணக்கங்களுள் திரௌபதியம்மன் வழிபாடும் ஒன்றாகும்.
- உடப்பு, மட்டக்களப்பிலுள்ள பாண்டிருப்பு, பழுகாமம், கல்லடி, மட்டிக்களி ஆகிய இடங்களிலுள்ள திரௌபதியம்மன் கோயில்கள் குறிப்பிடத்தக்கன.
- இங்கெல்லாம் தீக்குளிக்கும் காட்சியே இறுதி நாள் பெருங்காட்சியாகும்.
- பாரதக் கதையின் சில பகுதிகள் கோயிற் சடங்கின் போது நிகழ்த்தப்படும்.
  உதாரணம்: பஞ்சபாண்டவர் வனவாசம் செல்லுதல், அர்ச்சுனன் தவம் செய்யச் செல்லுதல், அரவானைக் களப்பலிக் கூடடுதல்.
- பாண்ணடிருப்பிலுள்ள திரௌபதையம்மன் கோயிலில் மொத்தமாக 18 சடங்குகள் நடைபெறுகின்றன.
- 1ஆம்சடங்கு தொடக்கம் 6ஆம் சடங்கு வரை வழமைப் போல பூசைகள் நடைபெறுகின்றன.
- 7ஆம் சடங்கன்று மாணிக்கப்பிள்ளையார் கோயிலிலிருந்து நாராயணன் சிலை கொண்டுவரப்படும்.
- 8,9,10,11ஆம் சடங்குகள் வழமை போல் நடைபெறும்.
- 12ஆம் சடங்கன்று கல்யாணக் கால் வெட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பூவரசு மரம் வெட்டி வந்து திரௌபதையம்மன் கோயிலுக்குள் வைத்து அதைச் சுற்றி சேலை கொய்து மறைத்து வைப்பர்.
- 13,14,15ஆம் சடங்குகள் வழமை போல் நடைபெறும்.
- 16ஆம் சடங்கு பாரதக் கதையை நடிக்கும் வகையில் ஆரம்பமாகின்றது. அன்று வனவாசம் ஆரம்பமாகின்றது.அஸ்தினாப்புரத்தினின்று சூதாடித் தோற்று பாண்டவரும் திரௌபதியும் வனவாசம் சென்றமையையும், அங்கு வீமன் காய்கனிகளை வனங்களினின்று பெற்று ஐவருக்கும் அளித்தமையையும் பின்னர் 12 வருடம் வனவாசம் முடிந்து 1 வருடம் அஞ்ஞாதவாசம் இருந்தமையையும்இவர்கள் அபிநயித்துக் காட்டுதலே வனவாசம் என்னும் 16ஆம் சடங்காகும்.

- 17ஆம் சடங்கு தவநிலை என்னும் சடங்காகும். துரௌபதியம்மன் கோயில் முன்றலில் நிற்கும் பெரிய மரம் ஒன்றின் உச்சியில் கூடு கட்டி அதற்கு ஏற ஏணியும் அமைத்திருப்பர். அன்றிரவு 12 மணிக்குப் பினபு அர்ச்சசுனனுக்கு ஆடுபவர் தவநிலைக்குப் போகப் புறப்படுவார். அர்ச்சுனன் வந்து தருமரை 3 முறை வணங்கி ஆடியதும் தர்மர் தலையசைத்துச் சிவனிடம் சென்று வரம் பெற்றுவரச் சொல்லியனுப்புவார்.அர்ச்சுனன் தவநிலைக்குப் போகும் வழியில் பேரண்டச்சி வந்து வழிமறிப்பாள். இறுதியில் அர்ச்சுனன் அம்பு விடுவது போல பாவனை செய்ய பேரண்டச்சி ஓடிவிடுவாள். பின்னர் அர்ச்சுனன் தவநிலைநோக்கிச் செல்லுகையில் பன்றியாக வேடமிட்டு ஒருவர் வந்து அர்ச்சுனனை மறிப்பார். இறுதியில் பன்றிமீது அர்ச்சுனன் அம்பு எய்துவிட்டு ஏணியில் ஏறிச் சென்று தவநிலையில் நின்று பதிகம் பாடுவார். புாடல் பாடி முடித்தப் பின் சங்கினை ஊதி மணியும் அடித்துவிட்டு கீழே வருவார். வுசந்த மண்டபத்திலிருக்கும் தர்மனிடம் நடந்த விடயத்தைக் கூற அவரும் மகிழ்ச்சியுடன் எழும்புவர்.
- அதன் பின் இரவு மூன்றரை மணயளவில் அரவானைக் களப்பலி கூட்டும் சடங்கு நடை பெறும்.
- அதில் தருமர் சிருஷ்டிக்க திரௌபதி அரவானின் சிரசை அறுக்கையில் புலம்பும் பாடல்கள் இனிய இசையும் மனதைக் கவரும் தன்மையும் கொண்டவை.

- அப்பாடல் முடிந்ததும் வீரகும்பம் நிறுத்தி கடற்கரை செல்வர்.
- கடற்கரையிலிருந்து மீண்டு வரும் வழியில் வீமனுக்கு ஆடிச் செல்பவர் கன்னிமரம் வெட்டி வந்து அதனை 4 துண்டாக்கி 4 மூலைக்கும் நாட்டிபக் கோயில் முன்றலில் தீக்குளி உண்டாக்குவார்.
- ஹோமம் வளர்த்து தீ மூட்டுவார். திரௌபதியும் தர்மருமே தீயை வைப்பார்கள். பின்னர் எல்லாரும் சென்று கடலில் குளித்துவிட்டு உடல் முழுவதும் மஞ்சள் பூசி கையில் அரிசியுடன் வந்து அரிசியைத் தீக்குளிக்குள் எறிந்துவிட்டு கோயிலை வலம் செய்து வந்து தீக்குளிக்க முன் நிற்பர். பின் தருமர் முதலில் தீக்குளிக்குள் இறங்க பின்னர் எல்லோரும் வரிசையாக இறங்கித் தீப்பாய்வர். இத் தீப்பாய்தலுடன் அன்றைய இறுதிக் காட்சி முடிவடையும்.

- வைரவர் வழிபாடு பற்றிய விடயங்களை ஆசிரியர் தேடிப் பெற்று, அதற்கேற்ப செயற்பாடுகளை முன்னெடுக்கவும்

**தர உள்ளீடுகள்** : - செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல், திரௌபதியம்மன்,வைரவர் படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- திரௌபதியம்மன் வழிபாடு நடைபெறும் இடங்கள் மூன்றினைக் கூறுவர்.
- திரெபதியம்மன் சடங்கின் போது நிகழ்த்தப்படும் பாரதக்கதைகள் எவையெனக் குறிப்பிடுவர்.
- சடங்கு முறைகளினூடாக கிராமியப் பண்பாடுகளை பேணிக்காக்க முன் வருவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

- உங்கள் பிரதேசத்திலுள்ள கிராமியப் பெண் தெய்வங்கள் பற்றிக் குறிப்பிட்டு அத்தெய்வங்களுக்கான வழிபாட்டு முறைகளையும் குறிப்பிடுங்கள்.
  - பெண் தெய்வங்கள். - வழிபடும் இடங்கள்
  - வழிபாட்டு முறைகள் - வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் :
  உங்கள் பிரதேசத்திலுள்ள கிராமியப் பெண் தெய்வங்கள் பற்றியும் அத்தெய்வங்களுக்கான வழிபாட்டு முறைகளையும் அவை வெளிப்படுத்தும் சமய, சமுக கருத்துக்களையும் சடங்கு முறைகளினூடாக கிராமியப் பண்பாடுகளை பேணிக்காக்கவும் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், கலையம்சங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 7.0** : **நாட்டார் சமய வழிபாடுகளையும், நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 7.2** : பிற தரவுகளையும் அறிந்து கிராமியக் கலைகளின் சிறப்பினையும் தெரிந்து விளக்குவர்.

**செயற்பாடு** : நாட்டார் கலைகளில் கூத்து பற்றி அறிந்து கொள்வோம்

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :
- நாட்டார் கலைகளின் சிறப்பியல்புகளைத் தேடித் தொகுப்பர்.
- நாட்டார் கலைகளான கூத்து, வசந்தன் என்பவற்றை இனங்கண்டு, அவற்றைத் தம் வாழ்வில் மேற்கொள்வர், அவற்றில் ஈடுபட்டு அவற்றை பேணுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- நாட்டார் கலைகள் பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவை பற்றிய படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவை பற்றிய கருத்துக்களைக் கூற, மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- அக்கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள். சடங்கு நிலைப்பட்ட பல்வேறு நாட்டார் கலைகள் காணப்படுகின்றன. அக்கலைகளுடாக பல்வேறு சமய சமுக பண்பாட்டுக்கதைகள் எடுத்தாளப்படுகின்றன. அக்கலைகளுடாக சமயமும் சமயப் பண்பாடுகளும் பேணப்படுகின்றன்

**படி 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களைச் சிறு சிறு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.1.1 இலுள்ள செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்குங்கள்
- டிமைன்ட் பேப்பர், பேனா என்பவற்றையும் குழுக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்

**படி 3:**
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து, தமது அறிக்கையைப் முன்வைக் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறை நிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

**படி 4:**

- மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.
- மூத்த கலைகளுள் கூத்தும் ஒன்றாகும்.
- கூத்தினை ஆடுபவர்கள் கூத்தர் எனப்படுவர்.
- கூத்துக்கெல்லாம் தலைவனாக இறைவன் போற்றப்படுகின்றான்.
  '' தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே''
- கூத்தின் வகைகள் - வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு, காமன் கூத்து, வசந்தன்
- இலங்கையில் கதை தழுவிய ஆட்டத்துடன் தொடர்புடையதாக கூத்துக்கலை காணப்படுகின்றது.
- கூத்தின் பொருள் மரபு- கூத்து சமய அடிப்படையிலான கதைகளை உள்ளடக்கியது.
- வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய கதைகள் செல்வாக்குப் பெறுகின்றன.
  - மகாபாரதம் - அருச்சுனன் தவம்
  - இராமாயணம் - வாலி வதை
  - கந்தபுராணம் - வள்ளி திருமணம்
- இதிகாச புராணங்களின் கிளைக் கதைகளும் கூத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இராமாயணம் - கணையாழி
- நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறும் கூத்துக்களின் உள்ளடக்கமாகக் காணப்படுகின்றது. - சிறுத்தொண்டர் வரலாறு
- புராணக்கதைகளும் கூத்துக்களின் உள்ளடக்கமாகக் காணப்படுகின்றது.
  - காமன் கூத்து
- கூத்துக்களிற்குப் பயன்படுத்தப்படும் இசைக்கரவிகள்-
  மத்தளம், சல்லாரி, உடுக்கை, பறைமேளம், நாதஸ்வரம்
- கூத்தின் சமய, சமுக முக்கியத்துவம் சமய சம்பந்தமான கூத்துக்களை ஆடுவதனால் மக்களிடையே பக்தியுணர்வு, கலையுணர்வு விருத்தியடையும் போதனைகள் கிடைக்கும் (உ - ம்) கம்சன் வதம்
- கூத்தில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களால் கதாபாத்திரம் தாங்கியவர்கள் யதார்த்த வாழ்விலும் அழைக்கப்படுகின்றார்கள்
  (உ -ம்) வீமன் சிவலிங்கம், தருமர் சண்முகம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** : செற்பாட்டுப் பத்திரம் (நாட்டார் கலைகள்), டிமைன்ட் கடதாசி, பேனா, கூத்துப் பற்றிய படங்கள், நூல்கள், ஒளிப் பதிவு நாடாக்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

1. நாட்டார் கலைகள் ஐந்தினைக் குறிப்பிடுவர்.
2. கூத்தின் வகைகளைக் பட்டியற்படுத்துவர்.
3. குழுவாக இணைந்து, மற்றவர்களோடு பங்கேற்றுச் செயற்படுவர்.
4. இக்கலையினைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கையளிக்க முன்வருவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

- கூத்தின் வகைகள், கூத்தின் சிறப்பு, ஆடை அணிகலன்கள் ஆடப்படும் முறை, சமுகத்திற்கு வெளிப்படுத்தப்படும் செய்திகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்கும் படி ஒவ்வொரு குழுவுக்கும் அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- பிரதேசத்தில் காணப்படும் கூத்தொன்றை ஆசிரியர் உதவியுடன் தயாரித்து குழுவாக ஆடிக்காட்டு முன்வாருங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………………

  2……………………………………………………………………………………………

  3……………………………………………………………………………………………

  4……………………………………………………………………………………………

  5……………………………………………………………………………………………

- • பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - தமது பிரதேசங்களில் ஆடப்படும் கூத்து முறைகளையும் அவற்றினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களையும் தேடிப்பார்க்கவும், அவற்றில் ஈடுபடவும் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், கலையம்சங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 7.0 :** **நாட்டார் சமய வழிபாடுகளையும் நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 :** பிற தரவுகளையும் அறிந்து கிராமியக் கலைகளின் சிறப்பினையும் தெரிந்து விளக்குவர்.

**செயற்பாடு :** **நாட்டார் கலைகளின் வசந்தன் பற்றியறிவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றற் பேறுகள் :**

- நாட்டார்க் கலையின் சிறப்பியல்புகளைத் தேடித்தொகுப்பர்.
- நாட்டார் கலைகள் இனங்கண்டு அவற்றைத் தம் வாழ்வில் மேற்கொள்வர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- நாட்டார்க் கலைகள் பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவை பற்றிய படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவை பற்றிய கருத்துக்களைக் கூற மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.அக்கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.
- சடங்கு நிலைப்பட்ட பல்வேறு நாட்டார் கலைகள் காணப்படுகின்றன. உதாரணம்: வசந்தன், கூத்து, கரகம், காவடி, கும்மி
- சடங்கு நிலைப்பட்ட கலைகள் ஊடாக சமயமும் சமயப் பண்பாடுகளும் பேணப்படுகின்றன.

**படி 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3:**
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள். அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

**படி** 4: - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- நாட்டார் கலைகள் பலவகைப்படும். அவையாவன: கூத்து, வசந்தன், கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம்
- கிராமமக்களின் பாரம்மபரியக் கலைகள் சமய நிகழ்வுகளுடன் இணைந்தவை.
- நாட்டார் கலைகள் பிரதேசத்தற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படும்.
- வசந்தன் என்பது நாட்டார் கலைகளுள் ஒன்று.
- வசந்தன் என்பது வசந்தன் ஆட்டத்தைக் குறிக்கும்.
- வசந்தன் ஆட்டம் என்பது பொருள்கள்:
  - வசந்தக் காலத்தில் ஆடபப்டுவது
  - பொருள் நிறைந்த இன்பத்தைத் தருவது

- வசந்தன் கூத்தின் வகைகள்
  - பிள்ளையார் வசந்தன்
  - அனுமார் வசந்தன்
  - அம்மன் பள்ளு வசந்தன்

- வசந்தன் கூத்து ஆடப்படும் முறை
  - ஆரம்பத்தில் தரு இடம்பெறும். இதனை கட்டியம் கூறுதல் என்பர்.
  - கட்டியம் கூறுபவர் காலில் சலங்கை கட்டி வடமோடி அல்லது தென்மோடிக் கூத்துக்குரிய உடையணிந்து தருப்பாடி ஆடிவருவார்.
  - தரையில் உயரமாகவும் வட்டமாகவும் அமைக்கப்பட்ட மேடையில் வசந்தன் கூத்து ஆடுவோர் வட்டமாக நின்று ஆடுவர்.
  - வட்டமாக கயிறு கட்டி அதற்குள் மேடை அமைத்து வெளியே பார்வையாளர்கள் சுற்றிவர அமர்ந்திருந்து பார்க்கக்கூடியதாக இக்கூத்து ஆடப்படும்.

- ஆலய முன்றலில் உள்ள அரங்குகளில் வசந்தன் கூத்து:
- இக்கூத்து கண்ணகியம்மன் ஆலயம், முருகன் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் ஆடப்படும்.
- இக்கூத்துக்கள் இதிகாசக்கதைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டே ஆடப்படுகின்றன.

- வசந்தன் கூத்தின் சமய, சமூக முக்கியத்துவம்:
  - இக்கூத்து முருகன், கண்ணகியம்மன்,முத்துமாரியம்மன் ஆலய விழாக்களின் போது நடைபெறுகின்றது.
  - கண்ணகி வழிபாட்டில் கொம்புமுறி விளையாட்டின் போதும் இக்கூத்து ஆடபப்டும்.
  - இக்கூத்தில் வரும் வசந்தராஜன் தனக்காகவும் பிறருக்காகவும் கண்ணகியம்மனையும் பத்திரக்காளியம்மனையும் வேண்டுவது குறிப்பிடத்தக்கது.
  - கோயிலில் ஆடப்படும் வசந்தன் கூத்து பக்தி, அழகு, போதனை ஆகியவைகளை உட்பொருளாகக் கொண்டுள்ளது.
  - இக்கலைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 7.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம். டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல், வசந்தன் பற்றிய படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- நாட்டார் கலைகளைப் பட்டியற்படுத்துவர்.
- வசந்தன் கூத்தின் வகைகளைக் கூறுவர்.
- வசந்தன் கூத்து ஆடப்படும் முறையைக் கூறுவர்.
- இக்கூத்து சமய, சமூக முக்கியத்துவம் பெற்று விளங்குவதை உணர்ந்து பேணிப் பாதுகாப்பர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரம் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சஞ்சிகை தயாரிக்குமாறு கூறவும்.

- நாட்டார் கலைகள்
- வசந்தன் என்பதன் பொருள் விளக்கம்
- வசந்தன் கூத்தின் வகைகள்
- வசந்தன் கூத்து ஆடப்படும் முறை
- வசந்தன் கூத்தின் சமய சமூக முக்கியத்துவம்

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - நாட்டார் கலைகளைப் பற்றிய கதைகளை கூறுங்கள், அவை வெளிப்படுத்தும் சமய, சமூக கருத்துக்களில் பிள்ளைகளின் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள், கலையம்மங்களில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம் 8.1 :** ஈழத்தில் சைவ மரபின் பழைமையை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** **இராமாயணம் முதலிய இதிகாசச் செய்திகள் பற்றி அறிவோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- ஈழத்துச் சைவ மரபின் தொன்மையை அறிந்து அதனைப் போற்றும் மனப்பாங்கினை பெறுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1 : -** ஈழத்துச் சைவமரபின் தொன்மையை விளக்கும் ஆதாரங்கள் பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் அளித்து கலந்துரையாடலை நிகழ்த்துதல்.

- ஈழத்துச் சைவ மரபின் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்கள்.
  - புராணங்கள்
  - இதிகாசங்கள்
  - வாய்மொழி மரபுகள்
  - வெளிநாட்டார் குறிப்புக்கள்
  - இலக்கியங்கள்.
  - தொல் பொருட் சான்றுகள்
- இவ்வாதாரங்கள் தேடிக் கண்டுபிக்கப்படுவதுடன் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

**படி 2 : -** வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3: -** ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவின்ருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4 : - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள

- ஈழத்தின் தொன்மையை வரலாற்றையறிய உதவும் ஆதாரங்கள்.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்துசமயம் ஈழத்தில் நிலவியமையை திருமூலரின் கூற்று எடுத்துக்கூறுகின்றது.
- ☐ இதிகாசம், இராமாயணக் கதையின் மூலம் ஈழத்தின் தொன்மையான சமயம் சைவம் என்பது எடுத்துக்கூறப்படுகின்றது.
- ☐ இராவணன் ஓர் சிவபக்தன்.
- ☐ மண்டோதரி திருகேதீச்சரத்தை வழிபட்டமை.
- ☐ இராவணின் தாய் (கைகஸி) திருக்கோணேச்சரத்தைவழிபட்டமை.
- ☐ இராமர் பிரமபத்தி தோஷம் நீங்குவதற்காக முன்னேச்சரப் பொருமானை வழிபட்டமை.

**தர உள்ளீடுகள்** :- இணைப்பு 8.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.(இராமாயணம் முதலிய இதிகாசச் செய்திகள்.)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஈழத்தின் வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவர்.
- இதிகாசத்தில் இராமாயணம் கூறும் ஈழத்தின் தொன்மை வரலாற்றை எடுத்துரைப்பர்

**செயற்பாட்டுப் பத்திரம்**

1. “இராமாயணம் கூறும் ஈழத்து இந்துமதம்” என்னும் தலைப்பில் பேச்சை ஆயத்தப்படுத்தி பேசச் செய்யுங்கள்.

2. ஒவ்வொரு குழுக்களுக்கும் தலைப்பைக் கொடுத்து ஒவ்வொருவரும் பேச வேண்டும் என்பதையும் அறிவுறுத்தவும்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

 1.………………………………………………………………………………………

 2.………………………………………………………………………………………

 3.………………………………………………………………………………………

 4.………………………………………………………………………………………

 5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - இதிகாச காலத்து இந்துசமயம் எவ்வாறு இருந்தது அங்கு காணப்பட்ட ஒழுக்க விழுமியங்களை அறிந்து அவற்றை பேன வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம்** 8.2: ஈழத்துச் சைவாலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

செயற்பாடு : **களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றி அறிவோம்.**

**நேரம்** : 40 நிமிடங்கள்

**கற்றல் பேறு :**

- ஆலயம் புனிதமான இடம் என்பதை உணர்ந்து பக்தியுடன் ஆலயவழிபாட்டை மேற்கொள்ளுவர்.
- **ஆலயங்**களின் வரலாற்றுத் தொன்மை அறிந்து மதிப்பளிப்பர். ஆலயத்தின் விசேட உற்சவங்களில் பங்கு கொள்வர். ஆலயத்தின் சமுக சேவைகளில் பங்கு கொள்வர். அவற்றுக் மதிப்பளிப்பர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:** - இலங்கையிலுள்ள் விநாயகர் ஆலயங்கள் பற்றி மாணவர்களிடம் கேட்டுக் கலந்துரையாடலை நிகழ்த்துதல்.

- இலங்கையில் பல விநாயகர் ஆலயங்கள் உள்ளன.
- விநாயகர் ஆலயங்களில் முக்கியமாக மாமாங்கப்பிள்ளையார் ஆலயம், பறாளை விநாயகர் ஆலயம், மருதடி விநாயகர் ஆலயம், களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் என்பன அடங்கும்.
- மட்டக்களப்பிலுள்ள களுதாவளைச் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் புராதன சிறப்பினைக் கொண்டதாகும்.

**படி 2:** - வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3:** - ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவின்ருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

**படி 4: -** மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- மட்டக்களப்பு நகரின் தெற்கே மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் சுமார் பதினைந்து மைல் தொலை தூரத்தில் களுதாவளை என்னுமிடத்திலே அமைந்துள்ளது.
- இவ்வாலயம் வேடுவர் தலைவனான களுவன் வழிபட்ட இடம் களுதேவாலயம் என அழைக்கப்பட்டது பின்னர் அச்சொல் மருவி ஊரின் பெயராக களுதாவளை என வழங்கப்பட்டது.
- கதிர்காம யாத்திரை செல்ல வந்த இரு லிங்கதாரிகள் தங்கி பூசை செய்யும் போது சிவலிங்கம் தென்பட்டதாகவும் செவி வழிக் கதைகள் உள்ளன.
- ஆலய வாயிற் கதவு தொடக்கம் ஆலயத்தின் உள்ளும் புறமும் பல்வேறு சிற்ப வேலைப்பாடுகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- சோடச கணபதி வடிவங்களும் சிற்பங்களும்
  தலவிருட்சம் - வில்வமரம்
- ஆலயத் திருவிழா வருடத்தின் ஆனி உத்தரத்தில் பத்து நாட்கள் நடைபெறும்
- ஆறு குடிகளின் பரிபாலனத்தில் இவ்வாலயம் நிர்வகிக்கப்படுகின்றது
- சுயம்பு லிங்க அருட்பாமாலை, திருப்பொன்னூஞ்சல், காவடிப்பாடல்கள் இறுவட்டுக்கள், களுவைநகர் களுதேவாலயக் கல்வெட்டு
- சமுகப் பணிகளான உயர் கல்வி புலமைப் பரிசில் வழங்குதல், திருஞானசம்பந்தர குருகுலத்தினை ஸ்தாபித்து பராமரித்தல், அருகிலுள்ள பாடசாலைகளுக்கு ஆன்மீக செயற்பர்டுகளில் பங்கு கொள்ளல்.
- ☐ மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற புன்னிய தலமாக இது விளங்குகிறது.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம். (பறாளை விநாயகர் ஆலயம்)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, ஆலயப் படங்கள்,
- திருவிழா தொடர்பான ஒளிப்படங்கள்.

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஈழத்தின் பிரசித்திப்பெற்ற விநாயகர் ஆலயங்களை பட்டியற்படுத்திக் காட்டுவர்.
- களுதாவளை பிள்ளையார் ஆலயத்தின் அமைவிடம் பற்றிக் கூறுவர்.
- இவ்வாலய விநாயகர் அற்புதசக்தி சாய்ந்தவர் என்பதை ஏற்று அவரை வழிபடுவர்.
- இவ்வாலயத்தின் அற்புதக் கதையை சுவைபடக் கூறுவர்.
- ஆலயங்கள் அற்புதசக்தி வாய்ந்தவை என்பதை ஏற்று தலயாத்திரை மேற்கொள்வர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

(அ) களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள இடம்

(ஆ) களுதாவளைப் பிள்ளையார் கட்டப்பட்ட காலம்:

(ஈ) களுதாவளைப் பிள்ளையார் பற்றி எழுதப்பட்ட நூலும் அதன் சிறப்புக்களும்

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - தங்கள் பிரதேசத்தில் உள்ள விநாயகர் ஆலயங்களின் சிறப்புக்களை தேடி அவை பற்றிய செவி வழிக்கதைகளை பிள்ளைகளுக்கு கூறுங்கள். விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவம் பற்றியும் அதனால் அடையும் பயன்களையும் கூறுங்கள். தினமும் வழிபாடுகளில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம் 8.2 :** ஈழத்துச் சைவாலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு : கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலயம் பற்றி அறிவோம்.**

**நேரம் :** 40 நிமிடங்கள்

**கற்றல் பேறு :**

- ஆலயம் புனிதமான இடம் என்பதை உணர்ந்து பக்தியுடன் ஆலய வழிபாட்டை மேற்கொள்ளுவர்.
- **ஆலயங்**களின் வரலாற்றுத் தொன்மை அறிந்து மதிப்பளிப்பர்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி 1:** - ஈழத்துச் சைவாலயங்கள் பற்றி மாணவர்களிடம் கேட்டுக் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- தானே தோன்றிய இலிங்கங்களையுடைய ஆலயங்கள் தான்தோன்றீச்சரங்கள் என அழைக்கப்படுகின்றன.
- ஈழத்தில் இரு தான்தோன்றீச்சரங்கள் ஆலயங்கள் உள்ளன.
- அவையாவன கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், ஒட்டுச்சுட்டான் தான்தோன்றீச்சரம் என்பவையாகும்.

**படி 2:** - வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- உவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3:** - ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவின்ருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4 : - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- ☐ கிழக்கிலங்கையின் மட்டக்களப்பிலுள்ள் கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ளது.
- ☐ இறைவன் தான்தோன்றீஸ்வரர். இறைவி பார்வதி அம்மயைார்.
- ☐ தலவிருட்சம் கொக்கட்டிமரம்.
- ☐ திருப்படைக்கோயில்களுள் ஒன்று.
- ☐ மகோற்சவம் - ஆவணிமாதத்து அமாவாசையின் பின் வரும் வளர்பிறையில் கொடியேற்றத்தோடு ஆரம்பித்து பதினைந்து நாட்கள்.
- ☐ பௌர்ணமிக்கு பின் வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும்.
- ☐ கோயிற்பரிபாலனம் வண்ணக்கர் மூலம் நடைபெறுகின்றது.
- ☐ இவ்வாலயத்திற்கு குளக்கோட்ட மன்னன் திருப்பணி செய்துள்ளான்.
- ☐ இவ்வாலயத்தில் பூசை செய்பவர் சங்கமர் என்ற குருமாராவர்.
- ☐ வீராகம முறைப்படியான பூசைகளே இங்கு நடைபெறுகின்றன.
- ☐ மட்டக்களப்பு மான்மியம் இவ்வாலயம் பற்றிக் கூறும் நூலாகும்.
- ☐ இவ்வாலயத்தின் மீது பிரபந்தம் பாடியவர் புலவர்மணி பெரியதம்பிப் ப பிள்ளையாவர்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, ஆலயப் படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- தான்தோன்றீச்சரம் என்பதற்கான விளக்கத்தைக் கூறுவர்.
- தான்தோன்றீச்சர ஆலயத்தின் மகத்துவத்தையுணர்ந்து அதன்மீது பக்தி செலுத்துவர்.
- கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலயம் பற்றிய முக்கியமா விபரங்களைச் சேகரித்து அட்டவணைப்படுத்துவர்.
- இவ்வாலயச் சிறப்பையறிந்து தலயாத்திரை மேற்கொள்ள முற்படுவர்.

**இணைப்பு 8.2.1 செயற்பாட்டுப் பத்திரம்**

கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி அதன்கீழ்வரும் வினாக்களுககு விடைதருக.

| | | |
|---|---|---|
| A கொக்கட்டிச் சோலை | B ஓட்டுச்சுட்டான் C தான்தோன்றீச்சரம் | D மானிப்பாய் |
| E வண்ணக்கர் | F சங்கமர் G கப்பூகனார் | H வீராகமம் |
| I காரணாகமம் | J பத்ததி | |

(அ) ஈழத்திலுள்ள தான்தோன்றீச்சரங்கள் அமைந்துள்ள இடங்களுடன் தொடர்புடைய தொகுதி
1. AB 2. BC 3. AD 4. BD

(ஆ) தான்தோன்றீச்சரமாகவும் திருப்படைக்கோயிலாகவும் விளங்குவது.
1. A 2. B 3. C 4. D

(இ) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலயப் பூசைகளுடன் தொடர்புடைய ஆகமம்.
1. H 2. J 3. I 4. F

(ஈ) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலயத்தில் பூசைகளை மேற்கொள்பவர்.
1. J 2. F 3. E 4. G

(உ) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலய பரிபாலனத்தை மேற்கொள்பவர்.
1. E 2. F 3. J 4. G

கொக்கட்டிச்சோலை ஆலயம் தொடர்பாக பின்வரும் விடயங்களைப் பூரணப்படுத்துக.

- ○ அமைவிடம் ○ இறைவன் ○ இறைவி
- ○ தலவிருட்சம் ○ மகோற்சவம் ○ ஆலயவரலாற்றைக் கூறும் நூல்கள்
- ○ ஆலயம் மீது எழுநத நூல்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.………………………………………………………………………………………

  2.………………………………………………………………………………………

  3.………………………………………………………………………………………

  4.………………………………………………………………………………………

  5.………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : -

  கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதையை சுவைபட கூறுங்கள் இறைவனின் திருவிளையாடல்களில் பல்வேறு சம்பவங்களை எடுத்துக் காட்டுங்கள். தங்கள் பிரதேச ஆலயங்களின் வரலாற்றுக்கதைகளை தேடி பிள்ளைகளுக்கு கூறுங்கள் இறைவன் பெருமை அறிந்து இறைநம்பிக்கையுடன் வழிபாடுகளில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம் 8.2 :** ஈழத்துச் சைவாலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு : நயினை நாகபூசணியம்மன், பற்றி அறிவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- ஆலயம் புனிதமான இடம் என்பதை உணர்ந்து பக்தியுடன் ஆலயவழிபாட்டை மேற்கொள்ளுவர்.
- ஆலயங்களின் வரலாற்றுத் தொன்மையறிந்து மதிப்பளிப்பர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**

- ஈழத்திலுள்ள சைவாலயங்களுள் மாணவர்களுக்குத் தெரிந்த அம்மன் ஆலயங்கள் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் அளித்து கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.
  - ஈழத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயங்களுள் நயினாதீவு நாகபூசணியம்மன் ஆலயமும் ஒன்றாகும்.
  - இவ்வாலயம் யாழ்ப்பாணத்திலுள்ள நாகதீபம் எனப்படும் நயினாதீவை அமைவிமாகக் கொண்டது.
  - நயினாதீவு மணிமேகலைக் காப்பியத்தோடு தொடர்புபட்ட இடமாகும்.
  - இவ்வாலயம் நாகர்களின் வழிபாட்டோடு தொடர்புடையது.

**படி 2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மானவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

படி 3:
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4:
- மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- நயினாதீவு நாகபூசணியம்மன் ஆலயம் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடையது.
- இறைவி – நாகபூஷணி (நாகம்மாள், நாகேஸ்வரி)
- தலம் - நயினாதீவு அறுபத்த நானகு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படுகின்றது.
- தீர்த்தம் - சித்தாமிர்த புட்கரணி
- மூலமூர்த்தி அம்பாளும் ஐந்து தலை நாகமும் இணைந்த வடிவம்
- இவ்வாலயத்துடன் தொடர்புடைய கர்ண பரம்பரைக் கதைகள் பல உள்ளன.
    - நாகங்கள் வழிபட்ட தலம்
    - நாகம் பூக்கள் கொண்டு வந்து பூசனை செய்த தலம்.
- சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூரமாக இவ்வாலயம் விளங்குகின்றது.
- மணிமேகலைக் காப்பியத்தோடு தொடர்புடைய தலம்.
- மகோற்சவம் - ஆனிப்பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு 15 நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறுகின்றது. ஆணிப்பூரணையில் நிகழும் தெப்பத்திருவிழா சிறப்புடையது.

**தர விருத்திஉள்ளீடுகள்** : -
- இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம. (நயினை நாகபூசணியம்மன்)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, ஆலயப் படங்கள் (நயினை நாகபூசணியம்மன்)

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- நயினாதீவு நாகபூசணியம்மன் ஆலயம், புன்னச்சோலை ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலயங்களின் சிறப்பம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுவர்.
- இவ்வாலயங்களின் மகத்துவத்தை உணர்ந்து பக்தி கொள்வர்.
- இவ்வாலயங்களோடு தொடர்புடைய கர்ணப்பரம்பரைக் கதைகளைக் கூறுவர்.
- இவ்வாலயங்களைச் சென்று தரிசித்ததனால் அவர்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வினை வெளிப்படுத்துவர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

- உங்கள் ஊரில் பிரசித்திப் பெற்று விளங்கும் அம்மன் ஆலயங்களுள் ஆகமம் சார்ந்த, அம்மன் ஆலயங்களிற்குச் செல்லுங்கள்.
- அங்கு நடைபெறும் பூசைகள், சடங்குகள், உங்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வுகள் என்பவற்றை அறிக்கை மூலம் சமர்ப்பியுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரியுங்கள்.
  - அமைவிடம்
  - இறைவன்
  - தீர்த்தம்
  - மகோற்சவம்
  - பூசை, சடங்குகள்
  - சிறப்பான விழா
  - கர்ண பரம்பரைக் கதை

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

1………………………………………………………………………………………………

2………………………………………………………………………………………………

3………………………………………………………………………………………………

4………………………………………………………………………………………………

5………………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : -
  அம்மன் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள் அங்கு நடைபெறும் விசேட பூசைகளில் கலந்து அது பற்றிய தகவல்களை பிள்ளைகளுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் விளக்குங்கள்.தொடச்சியாக வழிபாடுகளில் ஈடுபட ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்,

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம்** 8.2 : ஈழத்துச் சைவாலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு : புன்னச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் பற்றி அறிவோம்**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- ஆலயம் புனிதமான இடம் என்பதை உணர்ந்து பக்தியுடன் வழிபாட்டை மேற்கொள்ளுவர்.
- ஆலயங்களின் வரலாற்றுத் தொன்மையறிந்து மதிப்பளிப்பர்.
- புன்னச் சோலை ஆலயத்திற்கு புனிததல யாத்திரை மேற்கொள்ளுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- ஈழத்திலுள்ள சைவாலயங்களுள் மாணவர்களுக்குத் தெரிந்த அம்மன் ஆலயங்கள் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் அளித்து கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.
  - கிழக்கிலங்கையில் பிரசித்திப் பெற்ற அம்மன் ஆலயங்களுள் புன்னச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயமும் ஒன்றாகும்.
  - இவ்வாலயம் மட்டக்களப்பிலே புன்னச்சோலை என்னும் கிராமத்தில் உள்ளது.
  - இவ்வாலயத்தில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

**படி 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3:**
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4: - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- மட்டக்களப்பில் பிரதேசத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தூரத்தில் புன்னச்சோலை கிராமம் உள்ளது.
- காடாக இருந்த இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 80, 90 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ‘பெரியான்’ என்பவர் தனது சொந்த வணக்கத்திற்காக ஒரு சிறிய ஓலைக்குடிசையில் வைத்து வணங்கி வந்த பத்திரக்காளியம்மன் கோயில் இன்று பிரபல்யம் பெற்றதும் எல்லா இடங்களிலிருந்தும் தேடி வந்து வழிபடும் நம்பிக்கைத் தன்மை கொண்ட தெய்வமாகவும் ஆலயமாகவும் இது விளங்குகின்றது.
- பழைய சடங்குத் தன்மை கொண்ட பூசைகளும் ஊர்வலங்களும் தீமிதிப்பு கேளிக்கைகளும் கொண்டமைந்த இக்கோயில் சடங்குகள் இவ்வூர் மக்கள் மட்டுமன்றி பக்கத்து கிராம மக்களையும் பங்குபற்ற வைக்கின்றனர.
- அன்று முதன் முதலில் ‘இத்தி’ மரத்தின் கீழுள்ள ஒரு ஓலை குடிசையில் வைத்து வணங்கப்பட்ட காளியம்மன் இன்று நிரந்தரக் கட்டிடங்களைக் கொண்ட தலமாக விளங்குகின்றது.
- வருடத்தில் ஒரு தடைவ மூலஸ்தான கதவு திறந்து பெரியளவிலான சடங்குகளும் ஒவ்வொரு பௌர்ணமி நாளும் முன் கதவு திறந்து காளியின் உருவச்சிலைக்கு பூசையும் அர்ச்சனைகளும் நூல்கட்டுதல், பூப்போடுதல், பொங்கிப்படைத்தல் என்பன இடம்பெறும்.
- ஒவ்வொரு வெள்ளி தோறும் கதவுகள் எதுவும் திறக்காமலும் பூசைகளோ அர்ச்சனைகளோ இன்றி பூசாரிமார் யாருமின்றி பக்தர்கள் சென்று வணங்கும் முறையும் இவ்வாலய வழிபாட்டு முறைகளாகும்.
- ஒவ்வொரு சடங்கின் போதும் 3 பிரதான பூசாரிகள் பூசை செய்வர்.
- இவ்வாலயச் சடங்குகள் ஆனி மாதத்தில் நடைபெறும்.
- சடங்குத் தன்மைகள் பூசை முறைகள் புராதன முறைப்படியே நடந்து வருகின்றன.
    - பரம்பரை பரம்பரையாக தெய்வம் ஆடுதல்.
    - வட்டாமடை தூக்குதல்
    - கள்ளிவெட்டி வரல்
    - எரிக்கலை வெட்டி வரல்
    - கல்யாணக்கால் வெட்டி வரல்
    - அம்மன் முகக் கலையைப் பேணிப் பாதுகாத்து வைத்திருத்தல்.
    - அதனை ஊர்வலமாக எடுத்து வரல்

    - இச்சடங்குகள் முக்கியமானவையும் மரபு பிறழாத அம்சங்களுமாகும்.
    - 5 நாள் சடங்குகள் நடைபெறும். ஐந்தாம் நாள் சடங்குகள் மிக முக்கியமானது.
    - விநாசகப் பானைப் பொங்கல்.
    - தீ மிதிப்பு
    - பள்ளையங்கள்
    - பாலூற்றும் சடங்கு என்பன முக்கியமானவையாகும்.

தர உள்ளீடுகள்: - இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
(புன்னச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன்)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, ஆலயப் படங்கள்
(புன்னச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன்)

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- புன்னச்சோலை ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலயத்தின் சிறப்பம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுவர்.
- இவ்வாலயத்தின் மகத்துவத்தை உணர்ந்து பக்தி கொள்வர்.
- இவ்வாலயத்தோடு தொடர்புடைய கர்ண பரம்பரைக் கதைகளைக் கூறுவர்.
- இவ்வாலயத்திற்கு சென்று தரிசித்ததனால் அவர்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வினை வெளிப்படுத்துவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புன்னச்சோலை பத்திரக்காளியம்மன் ஆலயம் பற்றி அறிக்கைத் தயாரியுங்கள்.

    - அமைவிடம்
    - ஆலயப் படங்கள்
    - இறைவன்
    - தீர்த்தம்
    - மகோற்சவம்
    - பூசை, சடங்குகள்
    - சிறப்பான விழா
    - கர்ண பரம்பரைக் கதை

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம்** 8.2 : ஈழத்துச் சைவாலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு : நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பற்றி அறிவோம்.**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு** :
- நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பற்றிய வரலாற்றுத் தொன்மையை அறிந்து மதிப்பளிப்பர்.
- இவ்வாலயத்தின் சிறப்பம்சங்களையும் புனிதத்தன்மையையும் உணர்ந்து பக்தியுடன் ஆலய வழிபாட்டை மேற்கொள்வர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 : -** இலங்கையிலுள்ள முருகன் ஆலயங்கள் பற்றி மாணவர்கள் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஈழத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் நல்லூர் கந்தசுவாமி ஆலயமும் ஒன்றாகும்.
- நல்லூர் கந்தசுவாமி ஆலயம் யாழ்ப்பாண இராச்சியக் காலப்பகுதியுடன் தொடர்புடையது.

**படி 2 : -** வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3 :-** ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவின்ருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4: - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூரில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அமைந்துள்ளது.
- செண்பகப் பெருமாள், சிங்கை பரராஜசேகரன் முதலான அரசர்களின் உதவி பெற்ற இவ்வாலயம் யாழ்ப்பாண இராச்சியத்ததை ஆண்ட செண்பகப் பெருமாள் என்பவன் காலத்தில் கட்டப்பட்டது.
- போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்ட இவ்வாலயம் மீண்டும் வளர்ரச்சிப் பெற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், இரகுநாதமாப்பாண முதலியார் ஆகியோர் பங்களிப்புச் செய்தனர்.
- மகோற்சவங்கள் - ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது.
- கந்தசஷ்டி விரத காலத்தில் கந்தபுராண படனம் இடம்பெறுகின்றது.
- இவ்வாலயத்தின் மீது எழுந்த நுல்கள்:
- கூழங்கைத் தம்பிரான் - நல்லைக் கலிவெண்பா
- இருபாலை சேனாதிராய முதலியார் - நல்லை வெண்பா
  - நல்லையந்தாதி
  - நல்லைக்குறவஞ்சி
  - நல்லைத்திருவூஞ்சல்
- உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் - நல்லைக் கந்தசாமி விஞ்சதி
- நல்லை சரவணமுத்துப்புலவர் - நல்லை வேலவருலா
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - தனிநிலைச் செய்யுள் ஒன்று

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம். (நல்லூர் கந்தசுவாமி ஆலயம்)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, ஆலயப் படங்கள்

## படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பற்றிய விடயங்களைத் தொகுத்துன் கூறுவர்.
- இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெறும் பூசைகள், விழாக்களைப் பட்டியற்படுத்துவர்.
- இவ்வாலயத்தின் மீது எழுந்த நூல்களையும் நூலாசிரியர்களையும் குறிப்பிடுவர்.
- இவ்வாலயத்திற்கு தலயாத்திரை மேற்கொள்ள முற்படுவர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

நல்லூர் கந்தசுவாமி ஆலயம் தொடர்பாக பின்வரும் விடயங்களை பூரணப்படுத்துக.

(அ) அமைவிடம்

(ஆ) ஆலய வளர்ச்சிக்கு உதவியோர்.

(இ) மகோற்சவம்

(ஈ) ஏனைய பூசைகள், விழாக்கள்

(உ) ஆலயம் மீது பாடப்பட்ட பிரபந்தங்களும் ஆசிரியர்களும்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………
  2.……………………………………………………………………………………………
  3.……………………………………………………………………………………………
  4.……………………………………………………………………………………………
  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - நல்லூர் முருகப் பெருமான் ஆலயத்துக்கு சமயச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள விசேட அம்சங்களை தெரியப்படுத்துங்கள் அல்லது உங்கள் பிரதேசத்திலுள்ள முருகன் கோயில்களின் சிறப்பை அறியச்செய்து வழிபாட்டில் ஈடுபட ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்,

**தேர்ச்சி 8.0 :** **ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம்** 8.3 : ஈழத்துச் சைவநூல்கள், இதழ்கள், நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** **ஈழத்துச் சைவநூலான பிள்ளையார் கதை பற்றி அறிவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- பிள்ளையார் கதை விரதத்தை அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பயன்களையறிந்து தாமும் அனுஷ்டிக்க முன்வருவர்.
- பிள்ளையார் விரதம் அனுஷ்டிக்கும் காலத்தில் பிள்ளையார் கதையினை படனம் செய்வர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி** 1: - ஈழத்தில் எழுந்த சைவசமய இலக்கியங்களை மாணவர்களிடம் வினவுங்கள்.

- அதனை அடிப்படையாகவும் கீழ்க் குறிப்பிடும் கருத்துக்களையும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.
  - ஈழத்தில் பல சைவசமய நூல்கள் எழுந்துள்ளன.
  - ஈழத்தில் எழுந்த சைவசமய நூல்கள், தெய்வங்கள், தேவர்கள் பற்றியும், விரதங்கள் பற்றியும், ஆலயங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன.
  - அந்நியர் ஆட்சிக்காலத்தில் சுதேசிகள் மத்தியில் தமது சமயத்தைப் பேண வேண்டும் என்ற மனநிலை இருந்தது. அந்நிலையில் புலவர்கள் பல புராணங்களையும் பிரபந்தங்களையும் பாடினர்.

**படி** 2:- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி** 3:- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4: - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த கதைப்பாடல்களில் ஒன்று பிள்ளயைார் கதையாகும்
- இதனை இயற்றியவர் சுன்னாகம் வரத பண்டிதராவார்.
- இவரது காலம் 18 ஆம் நூற்றாண்டாகும்
- பிள்ளையார் கதை பினவரும் பொருள் மரபினைக் கொண்டதாக அமையும்.
    - காப்புச் செய்யுள்
    - விநாயகர் துதி
    - சப்பாணி
    - சரஸ்வதி துதி
    - அதிகாரம்
    - கதை
    - நூற்பயன்

- இக்கதைக்கு விநாயகப் பெருமான் துணை செய்ய வேண்டும். என காப்புச் செய்யுளில் வேண்டுதல் செய்யப்படுகின்றது.

- பிள்ளையார் கதையில் காணப்படும் ஏனைய கதைகளாவன:
    - உமை பிறந்த கதை
    - உமை, சிவன் திருமணம்
    - பிள்ளையார் பிறப்பு
    - அற்புதம்
    - பிள்ளையார் கஜமுகாசுரனை அழித்து, அவனை மூஷிக வாகனமாக்கிய கதை
    - முருகனின் பிறப்பு, திருமணம்
    - சூரப்பத்மனுடன் போர் புரிந்தமை
    - விநாயக சஷ்டி விரதமும் அதனை அனுஷ்டிக்கும் முறைகள் பற்றிய செய்திகள்.
    - இலக்கண சுந்தரியின் கதை

- விநாயக சஷ்டி விரதம் அனுஷ்டித்தவர்களும் அவர்கள் பெற்ற பேறுகளும்.
    - சிவன் - முப்புரங்களை எரித்தமை
    - உருத்திரன் - விருத்திராசுரனை வென்றமை
    - அகலிகை – கணவனை அடைந்தமை
    - தமயந்தி – நளனை அடைந்தமை
    - இராமன் - சீதையை அடைந்தமை
    - பகிரதன் - கங்கா நதியை வையகத்துக்கு வரவளைத்தமை
    - அட்ட தேவதைகள் - அட்டபோகம் அமிர்தம் என்பவற்றைப் பெற்றனர்.
    - தருமரும் தம்பியரும் - இழந்த அரசைப் பெற்றனர்.
    - வச்சிரமாலி மன்னன் - உடம்பில் ஏற்பட்ட கரும்பிணி நீங்கி, மன்னனாகிப் பின்னர் திலோத்தமையை மணம் புரிந்தமை.
    - இலக்கண சுந்தரி–இறந்த தன் கணவனை மீண்டும் அடைந்தாள்

- விநாயகர் வழிபாடு மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் அதனால் கிடைக்கும் பயன்கள் என்பன பிள்ளையார் கதையில் கூறப்படுகின்றன.
    - வீட்டிலிருந்து புறப்படும் போதும்
    - யுத்தம் செய்யும் போதும்
    - வித்தியாரம்பம் செய்யும் போதும்
    - உத்தியோகம் செய்யும் போதும்

- பயன்கள்:
    - சாந்தி தழைக்கும்
    - சம்பத்து உண்டாகும்
    - நினைத்த பொருள் கிடைக்கும். கைகூடும்.
    - மேலவர்களை வென்றிடலாம்.

- பிள்ளையார் கதையின் நூற்பயன்கள் பின்வருமாறு:
    - பொன் கிடைக்கும்
    - கல்வி அதிகமாகும்
    - புத்திரர், எல்லாப் பொருட்கள், நவரத்தினங்கள் எல்லாம் தேடிவரும்.
    - இக்கதையைக் கற்றவர்கள் மட்டுமன்றி நோற்றவர்களும் அருகிலிருந்து பக்தியுடன் இக்கதையைக் கட்டவர்களுக்கும் எந்தவிதமான கேடும் வராது.
    - பிள்ளைப் பாக்கியம் பெறுவர்.
    - நோய்களிலிருந்து விடுபடுவர்.
    - பிறப்புக்களில் நல்ல பெருஞ்செல்வம் பெற்று சிறந்து வாழ்வர்.
    - பிள்ளையார்க்கதை கார்த்திகை மாதத்தில் வரும் விநாயகர் சஷ்டியின் போது படனம் செய்யப்படும்.

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம். (பிள்ளையார் கதை)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பிள்ளையார் கதைப்புத்தகம்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஈழத்தில் தோன்றிய சைவப் பிரபந்தங்களில் பிள்ளையார் கதையின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுவர்.
- விநாயகர் சஷ்டி விரதத்தை அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பயன்களை அறிந்து தாமும் அனுஷ்டிக்க முன்வருவர்.
- பிள்ளையார் கதையில் தாம் படித்துச் சுவைத்த பகுதியை பிறருக்கு எடுத்துக் கூறுவர்.
- பிள்ளையார்க் கதையினை பிள்ளையார் விரதம் அனுஷ்டிக்கும் காலத்தில் படனம் செய்வர்.

**இணைப்பு 8.2.1 செயற்பாட்டுப் பத்திரம்**

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் வைத்து தகவல்களைச் சேகரித்து ஓர் அறிக்கையாகத் தயாரியுங்கள்.
  - பிள்ளையார்க் கதையின் ஆசிரியர்
  - எழுந்த சூழல்
  - விடய உள்ளடக்கம்
  - உள்ளடக்கிய வேறுகதைகள்
  - விநாயக சஷ்டி விரதம் அனுஷ்டித்தவர்களும் அடைந்த பேறும்
  - விநாயக வழிபாடு மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் பயன்களும்.
  - பிள்ளையார்க் கதையின் நூற்பயன்

- ஈழத்து சைவ மக்கள் வாழ்வில் பிள்ளையார் கதை எனும் தலைப்பில் வில்லுப்பாட்டொன்றை நிகழ்த்துக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் :
  பிள்ளையார் கதையை பிள்ளைகளுக்கு படித்துக்காட்டுங்கள் அல்லது அவை பாடப்படும் முறையை அறியச் செய்யுங்கள். பிள்ளையார் காப்பு தினங்களில் ஆலயத்துக்குச் சென்று அவை பற்றிய தகவல்களை தேடும் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0** : **ஈழத்துச் சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர். ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.**

**தேர்ச்சி மட்டம் 8.3** : ஈழத்துச் சைவநூல்கள், இதழ்கள், நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பர்.

செயற்பாடு : **ஈழத்துச் சைவ நிறுவனமாகிய சைவ வித்தியாவிருத்திச் சங்கம் பற்றி அறிவோம்.**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு :**
- சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தோற்றத்திற்கான காரணத்தை அறிவர்.
- இச்சங்கத்தின் நோக்கம், பணிகள் என்பவற்றைக் கூறுவர்.
- தாமும் நிறுவனங்களை ஸ்தாபித்து பணிகள் ஆற்ற முன்வருவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- மாணவருக்குத் தெரிந்த சமய நிறுவனங்கள், அவை ஆற்றிவரும் பணிகள் என்பன பற்றி கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் நலிவுற்றிருந்த சைவ, தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்த நிறுவனங்களில் சைவ வித்தியவிருத்திச் சங்கமும் ஒன்றாகும்.
- சேர்.பொன். இராமநாதன், இந்துபோர்ட். சு.இராசதரத்தினம் ஆகியோரால் 1923 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**படி 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்

**படி 3:**
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

**படி 4:** - மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.

- அவர்கள் முன்வைத்த கருத்துக்களுக்கு மேலதிகமான கருத்துக்களையும் கூறுங்கள்.

- சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் சேர்.பொன். இராமநாதன், இந்துபோர்ட். சு. இராசதரத்தினம் ஆகியோராவார்.
- சைவவித்தியாவிருத்திச் சங்கம் பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.
  - சைவப் பாடசாலைகள் அமைத்தல் - 187 பாடசாலைகள்
  - சைவப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளித்தல்
  - சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்
  - சைவப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்தல்
  - சைவசமயப் பரீட்சை நடாத்துதல்.
- சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆற்றிய பணிகள் பல:
  - இலங்கையின் பல பகுதிகளிலும் சைவ, தமிழப் பாடசாலைகளை நிறுவியமை உதாரணம்: யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, சிலாபம், முல்லைத்தீவு, பதுளை,கண்டி, நாவலப்பிட்டி
  - சைவாசிரியர் கலாசாலையை திருநெல்வேலியில் அமைத்தமை.
  - நான்கு கைத்தொழில் நிலையங்களை நிறுவி பொருளாதார மேம்பாட்டுக்கு உதவி புரிந்தமை.
  - விபூதி தரித்தல், பண்பாட்டை வளர்த்தமை
  - சைவ அநாதை விடுதிகள் அமைத்தமை
  - பண்ணிசை ஆசிரியர்கள் நியமித்தமை
  - தங்குமிட வசதிகளுடன் கல்வி வாய்ப்பினை பிற்பட்ட சமூகப் பிள்ளைகளுக்கு வழங்கியமை.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 8.2.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம். (பிள்ளையார் கதை)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பிள்ளையார் கதைப்புத்தகம்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆற்றிய சமயப்பணிகள், கல்விப் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுவர்.
- சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளை பட்டியற்படுத்துவர்.
- சமயத்தினூடாக சமயப்பணிகள் ஆற்ற வேண்டும் என்ற மனப் பாங்கைப் பெற்றுக் கொள்வர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

- உங்கள் பிரதேசத்திலுள்ள ஓர் சமயநிறுவனத்தின் தோற்றம், நோக்கம், பணிகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு தகவல்களைச் சேகர்த்து குழுக்கள் ஒப்படையைத் தயாரித்து, ஆசிரியரிடம் ஒப்படையுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.……………………………………………………………………………………………

  2.……………………………………………………………………………………………

  3.……………………………………………………………………………………………

  4.……………………………………………………………………………………………

  5.……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - சமய நிறுவனங்களுடன் இணைந்து சமயப் பணியாற்றும் மனநிலையை உருவாக்குங்கள் அந்நிறுவனங்களில் பங்கு கொள்ள வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 9.0** : **சமய வாழ்வில் சமூகப்பணியின் இடத்தை அறிந்து சமுதாயத்தை முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.**

**தேர்ச்சி மட்டம் 9.1** : சரியைத் தொண்டின் மகத்துவத்தினை அறிந்து சரியைத் தொண்டில் ஈடுபடுவர்.

**செயற்பாடு** : **சரியைத் தொண்டின் மகத்துவத்தை பேணுவோம்**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு** : 1. சமய வாழ்வினைக் கடைப்பிடித்தல் மூலம் சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படி 1:**
- மாணவர்கள் செய்த சமூகம் சார்ந்த சரியைத் தொண்டுகள் பற்றிக் கேட்டு அறியுங்கள்
- இத்தொண்டுகள் செய்ததன் மூலம் அவர்கள் பெற்ற அனுபவங்களைக் கேளுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - தொண்டுகள் நிஷ்காமிக முறையில் இடம்பெறல் வேண்டும்.
  - வாழ்வில் ஒவ்வொருவரும் சரியைத் தொண்டில் ஈடுபடல் வேண்டும்.

**படி 2:**
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப குழுக்களின் எண்ணிக்யையைத் தீர்மானிக்கவும்.)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3:**
- செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - சமய வாழ்வு சமூகம் சார்ந்த வாழ்வாகக் காணப்படுகின்றது.
  - சமயத் தொண்டுகள் செய்வதன் மூலம் சமூகம் மேம்பாடு அடைகின்றது.
  - சரியைத் தொண்டு நமது உடலால் தூய்மையாகச் செய்யப்படும் தொண்டுகளாக விளங்குகின்றன.
  - சரியை நெறியில் நின்று இறை அருள் பெற்ற நாவுக்கரசர் சரியைத் தொண்டின் மகத்துவத்தினை விளக்கியுள்ளார்.
  - ஆலயங்களில் மட்டுமல்ல பொது இடங்களிலும் நாம் சரியைத் தொண்டுகளை செய்து சமூக மேம்பாட்டிற்கு உதவமுடியும்.

**தர உள்ளீடுகள் :**
- இணைப்பு 9.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா,
- சூழலைச் சுத்தம் செய்வதற்கான பொருட்கள்.
- மரக்கன்றுகள், பூஞ்செடிகள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவ மக்களால் இலகுவில் மேற்கொள்ளக்கூடிய தொண்டு சரியைத் தொண்டு என்பதனை அறிவர்.
- சரியைத் தொண்டினை ஆலயங்களிலும் எமது சூழலிலும் மேற்கொள்ள முடியும் என்பதனை அறிவர்.
- சரியைத் தொண்டின் மூலம் இறைவழிபாடு செய்த நாவுக்கரசரின் பெருமையைக் கூறுவர்.
- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தொண்டுகளைச் செய்ய முன்வருவர்.
- சமய நம்பிக்கையோடு சமூகத்தொண்டுகளை ஆற்ற வேண்டும் என்ற சிந்தனையைப் பெறுவர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

குழு 1

- ☐ ஆலயம், பாடசாலைச் சூழலைச் சுத்தம் செய்து அறிக்கை ஒன்றினைச் சமரப்பியுங்கள்.
- ☐ ஆலயம், பாடசாலையில் பயன்தரு மரங்கள், பூக்கன்றுகளை நாட்டி அது பற்றிய அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பியுங்கள்.

குழு 2

- ஆலயம், பாடசாலையில் பயன்தரு மரங்கள், பூக்கன்றுகளை நாட்டி அது பற்றிய அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பியுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.…………………………………………………………………………………………

  2.…………………………………………………………………………………………

  3.…………………………………………………………………………………………

  4.…………………………………………………………………………………………

  5.…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - ஆலயங்களிலும் பொது இடங்களிலும் சரியைத் தொண்டு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள் அதன் மூலம் இறைநம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வழிகாட்டுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 9.0 | : | **சமய வாழ்வில் சமூகப்பணியின் இடத்தை அறிந்து சமுதாயத்தை முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.** |
| தேர்ச்சி மட்டம் 9.2 | : | அன்னதானத்தின் சிறப்பினை அறிந்து அதனை மேற்கொள்வர். |
| செயற்பாடு | : | **அன்னதானம் செய்தல், தாகசாந்தி செய்தல் என்பன தானங்களில் சிறந்தது என்பதனை அறிவோம்.** |
| நேரம் | : | 02 பாடவேளைகள் |
| கற்றல் பேறு | : | 1. தமது வாழ்வில் அன்னதானம் செய்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் போன்ற தொண்டுகளை மேற்கொள்வர். |

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

படி 1:
- மாணவர்கள் கலந்து கொண்ட அன்னதானம், தண்ணீர்ப்பந்தல் பணிகளைப் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அன்னதானம் செய்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தலின் நோக்கங்களைக் கூறும்படி கேளுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - தானம் பற்றிய அறிமுகம்
  - முக்கியமான தானங்கள்.
  - ஒவ்வொருவரும் கட்டாயம் தானம் செய்தல் வேண்டும்.

படி 2:
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப குழுக்களின் எண்ணிக்யையைத் தீர்மானிக்கவும்.)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

படி 3:
- செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4:
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- தானங்களில் சிறந்தது அன்னதானம் ஆகும்.
- அன்னதானம் வழங்குவதன் நோக்கம் ஆன்மாக்களின் பசியினைப் போக்குவதாகும்.
- □உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் □ என்ற கருத்து அன்னதானத்தின் சிறப்பினை விளக்குகின்றது.
- அன்னதானம் செய்பவர் மனத்தூய்மையுடனும் இறைசிந்தனையுடனும் செய்தல் வேண்டும்.
- தண்ணீர்ப் பந்தல் அமைத்து தாகசாந்தி செய்தலும் மேலான தருமமாகும்.
- பாரபட்சம் காட்டாது அனைவரக்கும் உணவு வழங்குதல், அன்போடு உபசரித்தல், தாகசாந்தி செய்தல் என்பன மேலான தருமமாகும்.
- இவ்வகையில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுவத குறிப்பிடத்தக்கது.

**தர உள்ளீடுகள்** : - மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- தானங்களில் சிறந்தது அன்னதானம் என்பதனை அறிவர்.
- தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி செய்வதும் மேலான தருமம் என்பதனை அறிவர்.
- இவ் அறச்செயல்களை உளத்தூய்மையோடும் இறைசிந்தனையோடும் செய்ய வேண்டும் என்பதனை அறிவர்.
- பசித்து வந்தோர் அனைவருக்கும் உணவு வழங்குவதே அன்னதானத்தின் நோக்கம் என்பதனை அறிவர்.
- தமது வாழ்வில் இவ்வகையான அறப்பணிகளை மேற்கொள்வர்.

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

**குழு 1**

- அன்னதானம் செய்தலின் சிறப்பினைப் பற்றிய தகவல்களைத் திரட்டி கட்டுரை எழுதுக.

**குழு 2**

- தண்ணீர்ப்பந்தல் அமைத்து தொண்டு செய்தலின் சிறப்பினை விளக்கி கட்டுரை எழுதுக.
- குரு பூசைத்தினங்கள் போன்றவற்றின் போது தண்ணீர்ப்பந்தல். அன்னதான செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

1.…………………………………………………………………………………………

2.…………………………………………………………………………………………

3.…………………………………………………………………………………………

4.…………………………………………………………………………………………

5.…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : -
  - அறச்செயல்களை உளத்தூய்மையோடும் இறைசிந்தனையோடும் செய்ய வேண்டும் என்பததையும்
  - பசித்து வந்தோருக்கு உணவளிக்க வேன்டும் என்பதையும் வலியுறுத்தி வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 10.0 :** **சமயம் கூறும் பண்புகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்10.1 :** சமயங்கள் கூறும் அறக்கருத்துக்களை அடையாளப்படுத்துவர். அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

**செயற்பாடு :** **சைவசமயமும் தம்மபதமும் கூறும் உயர் விழுமியங்களுக்கு மதிப்பளிப்போம்.**

**நேரம் :** 01 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**
1. பௌத்த மதம் பற்றி அறிந்து போற்றுவர்.
2. தம்மபதம் கூறும் விழுமியங்களுக்கு மதிப்பளிப்பர்.
3. தம்மபதம் கூறும் விழுமியங்களைப் போற்றுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1: -** எமது நாட்டின் பிரதான மதம் எதுவென கேட்டறியுங்கள்.
- அதுபற்றி அவர்கள் அறிந்த முக்கிய விடயங்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - எமது நாட்டின் பிரதான மதம் பௌத்த மதமாகும்.
  - அதில் பல விழுமியக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

**படி 2: -** மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 10.1.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3: -** குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:-** குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- தம்மபதம் என்பதில் தம்ம என்பதற்கும் பதம் என்பதற்கும் பாளியில் பல பொருள் வழங்கப்படுகின்றது.
  **தம்ம** - சமயம், நீதி, இயல்பு, விநயம், கோட்பாடு, இயற்கை
  **பதம்** - வழி, உபாயம், மார்க்கம் இதன்படி தம்மபதம் என்பதை அறவழி,அறநெறி, அறத்துப்பால், அறக்கொள்கை, அறக்கோட்பாடு என்றவாறெல்லாம் பொருள் செய்யமுடியும்.
  சைவசமயம் பண்டுதொட்டு தர்மத்தின் வழி கட்டியெழுப்பப்பட்ட ஒன்று இந்து மதத்தில் அவதரித்து, பல கலைகள் கற்று திகழ்ந்தவரே புத்தபெருமான். இவரின் கருத்துக்கள் அடங்கிய தொகுதியே தம்மபதமாகும் இந்த வகையில் இவற்றின் உட்பொருள் பற்றி நோக்கின் அனைத்து விடயங்களும் இந்து சமயத்தின் உன்னதமான கருத்துக்களையே அடிப்படைக் கருத்துக்களாக உள்வாங்கிக் கொண்டுள்ளது.

- தம்மபதம் **குத்தகநிகாயம்** என்ற நூலின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.
- இந்நூல் பாளி மொழியில் எழுதப்பட்டுள்ளது.
- தம்மபதம் 26 அத்தியாயங்களாக வகுப்பட்டுள்ளது.
- இதில் 423 சூத்திரங்கள் காணப்படுகின்றன.
- இச்சூத்திரங்கள் புத்தரின் வாசகங்களாகக் கொள்ளப்படுகின்றன.
- சைவசமயத்தில் குறிப்பிடப்படுகின்ற அட்டாங்க யோகங்களை அடிப்படையாகக் கொண்டு தம்மபதம் அட்டாங்க மார்க்கங்களாக அவற்றை முன்னிறுத்தியுள்ளது.
  1. நற்காட்சி 2. நல்லூற்றம் 3. நல்வாய்மை
  4. நற்செய்கை 5. நல்வாழ்க்கை 6. நல்லூக்கம்
  7. நற்கடைப்பிடி 8. நல்லமைதி

- பகவத்கீதயில் ஆன்ம ஈடேற்றத்திற்கு நான்கு வழிகளை முன்வைத்துள்ளது அவையாவன:
  1. துக்கம்
  2. துக்காரணம்
  3. துக்கநிவாரணம்
  4. துக்க நிவாரணமார்க்கம் இவற்றையே தம்மபதம் நான்கு வாய்மைகளாக எடுத்துரைக்கின்றது.

- இந்து மதத்தில் காணப்படுகின்ற வேதம், ஆகமம், புராணம், பகவத்கீதை போன்ற நூல்களில் கூறப்பட்டள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தம்மபதம் தனது அடிப்படைக் கருத்துக்களாக எடுத்துச் செல்கின்றது.
- இதன் அடிப்படையிலேயே தற்காலத்தில் பௌத்த மத வழிபாடுகள் அனைத்திலும் சைவசமயத்தின் வழிபாட்டு அம்சங்களை காணமுடிகின்றது. (உ-ம்): பத்தினியம்மன் வழிபாடு, தீமிதித்தல், ஏடு தொடங்டகுதல், ஊர்வலம் வருதல், புதுவீடு குடிபுகுதல், நவக்கிரக வழிபாடு, இந்துக் கடவுள் வழிபாடுகள் நூல் கட்டுதல், தண்ணி ஓதிக் கொடுத்தல், காவடி எடுத்தல், நெய்விளக்கு போன்ற பல்வேறு வழிபாட்டு அம்சங்களை காணலாம்.

**தர உள்ளீடுகள் :**
- இணைப்பு 10.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

## படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

1. சைவசம மதம் பற்றி அறிந்து போற்றுவர்.
2. தம்மபதம் கூறும் விழுமியங்களுக்கு மதிப்பளிப்பர்.
3. சைவ சமயம், தம்மபதம் கூறும் விழுமியங்களைப் போற்றுவர்.
4. அட்டாங்க யோகம், மார்க்கங்களை அறிந்து கடைப்பிடிப்பர்.
5. நான்கு வாய்மைகளையும் அறிந்து தம் வாழ்க்கைப் பற்றி தெளிவு கொள்வர்.

**இணைப்பு 10.1.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

**சைவசமயம் மற்றும் தம்மபதம்** எனும் நூலினை அடிப்படையாகக் கொண்டு ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதிகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

- தம்மபதம் என்ற சொல்லின் பொருள் யாது?
- தம்மபதம் எந்த நூலின் பகுதியாகக் காணப்படுகின்றது?
- தம்மபதம் உட்கொண்டுள்ள சைவசமயத்தின் அடிப்படைக் கருத்துக்களை முன்வையுங்கள்.
- இந்நூலில் எத்தனை அத்தியாயங்கள், சூத்திரங்கள் காணப்படுகின்றன?
- இந்நூலில் உள்ள சூத்திரங்கள் யாருடைய வாசகங்களாகக் காணப்படுகின்றது?
- அட்டாங்க மார்க்கங்களை நிரற்படுத்துங்கள்.
- பகவத்கீதயின் நான்கு வழிகளை தம்மபதத்தில் எவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகின்றது?
- சைவசமய வழிபாட்டு அம்சங்களையே பௌத்த மதத்திரினரின் வழிபாட்டு அம்சங்களில் காணமுடிகின்றது. அவற்றை பட்டியற்படுத்துங்கள்

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1.…………………………………………………………………………………………

  2.…………………………………………………………………………………………

  3.…………………………………………………………………………………………

  4.…………………………………………………………………………………………

  5.…………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - புத்தரின் வாழ்க்கை வரலாற்றுக் கதையினை அறிந்து அவரின் போதனைகளில் உள்ள விடயங்களை போற்றும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளவும், ஏனைய சமயங்களின் நம்பிக்கையை மதிக்கவும் வழிகாட்டுங்கள்.

# கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் / முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி.. முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு